குமாரஸம்பவம்

KUMARASAMBHAVA

OF KALIDASA

BY

PANDIT S. M. NATESA SASTRI

With Illustrations by

SHRIMANT BALA SAHIB PANDIT PRATINIDHI, B.A.

Chief of Aundh, Satara

MADRAS

G. C. LOGANADHAM BROS.

1913

PRINTED AT THE GUARDIAN PRESS
MOUNT ROAD, MADRAS



Sm. Natesa Sastri

[illegible] & CO., S, NILICHETTY ST. [illegible]

[illegible]

3-5

குமார ஸம்பவம்

நூன்முகம்

குமார ஸம்பவம் என்பது முருகக்கடவுளினது திருவவதாரச் சிறப்பை உலகோர் அறிந்துய்யும்பொருட்டு, வடமொழிப்புலவர் பிரானுகிய காளிதாஸ மஹாகவி, பதினெண் புராணங்களுள் மிகப்பெருமைவாய்ந்ததும் சனற்குமார சம்ஹிதையின் தொடக்கத்தவாய ஆறு சம்ஹிதைகளுக்கு ஒரு லக்ஷம் பாக்களமைந்தது மான காந்தமாபுராணத்துள் சனற்குமார சம்ஹிதைக்கு அளவிற் பிற்பட்டதேனும் பொருளுயர்வில் முற்பட்டதாய் மதிக்கப் பெறும் சங்கரசம்ஹிதையின் முதலதாய சிவரகசிய கண்டத்தில் முதன்மையதான உற்பத்திக்காண்டத்திற் கண்ட குமாரக்கடவுளினது வரன்முறையை முதல் நூலாகக்கொண்டு, காவியரூபமாகப் புனைவித்ததோர் வழிநூல்.. முதனூலின் கதையின் போக்கையே பெரிதும்பற்றிச் செல்வது.

தற்செருக்குற்ற தக்கப்பிரஜாபதி யென்பான் தன்மருமகனுகிய தற்பரனைத் தவிர்த்து ஏனைச் சிறு தெய்வங்களே பெருந்துணையென்று பெருமிதங்கொண்டு இயற்றிய மகத்துக்குத் தன் பிரானைப் பிரிந்து தந்தையிடத்தன்பாற் சென்ற தாக்ஷாயணி தானிழைத்த தவறுக்குக் கழுவாயாகப் பூவுலகத்தில் மலையரையன் மகளாய் மன்னித்தவஞ் செய்ததையும், முப்பதமும் தெளிவிக்கப்பெற்றும் முடிவினைக் காணுராய சனகாதியர் வேண்டுகோளுக்கிரங்கி அவர்கள் முகமாய் உலகுய்யும் பொருள் சுரந்து பரம்பொருளின் தத்துவத்தைப் பேசாதே பேசி தெளிவிப்பான். ஈசன் ஆன்மகோடிகளுக்குப் பலகோடி யுகங்களாகக் கண்ட ஒரு நொடிப்பொழுது யோக சமாதியில் அமர்ந்த பெருமையையும், அவனன்றி அணுவும்அசையாதாகையால் நிற்பனதிரிவனயாவும் செயலற்றிருந்தமையாலும், சிவமெனும் பொருள் ஆதிசத்தி

யோடு சேரினே எத்தொழிலும் வல்லதாமாகையினாலும் ஜீவராசிகள் இருபாலாரும் தத்தமிற் கலந்து கூடிப் பெருக்கம் வாய்தல் விட்டு நசிவுறவே அத்தருணம் பார்த்து சூரபன்மனைத் தலையிட்ட அரக்கர் குழாம் அமரரை அதுக்க ஆற்ருது இந்திரன் நான்முகனை முன்னிட்டுக்கொண்டு அவரை அளித்த அரியை அணுகலும், எல்லாரும் ஒருங்குகூடி அரனை எவ்வண்ணம் அம்மையிடம் சேர்த்தவல்லேம் என்று ஆராய்ந்து, மனத்தை மத்து அளைதயிரிற் றிரிக்கும் ஆற்றலமைந்ததால் மன்மதன் எனுஞ் சிறப்பு வாய்ந்த மாரனை அவரிடம் ஏவுதலே சால்புடைத்தென்று கொண்ட அரும்பெற்றியையும், அவ்வாணைக்கு அடங்கி அமரரின் ஆக்கத்தையே வேண்டித் தன் அழிவையும் அருமை மனையாட்டியின் துயரையும் பொருளாய்க் கருதானாய் அறிதுயிலமர்ந்த அரன்மேல் தன் பொய்யா வெய்யவாளியை விடவே அங்கணன்நுதல் விழிப்பட்டு எரிந்து சாம்பரானதையும், அத்தருணத்தே அண்டையிலே அணுகிய அம்மையைக் கண்டு அரனார் ஆசைகொண்டதையும், அக்குறியுணர்ந்த பார்வதி பிறப்பிடஞ் செல்லவே அவரைத் தமக்கு மணம் புணர்த்திவைக்கும்படி அருந்ததி பிரியா வசிட்டன் முன்னிய எழுமுனிவரை அவண் எழுப்பியதையும், அவ்வண்ணம் மணம் முற்றிய காலையில் இரதியின் வேண்டுகோளுக்கிரங்கி அவள் கட்புலனுக்கே அங்கனாயும் ஏனையோர்க்கு அநங்கனாயும் இருக்கும்வண்ணம் மாரனை உயிர்ப்பித்ததையும், அமரருக்கு ஆருத்துயரம் விளைத்துவந்த அரக்கர் ஆற்றலை அழிக்க தேவர்களின் அநீகங்களை அமருக்கு அழைத்துச் செல்ல வல்லுநனாய், பூவுலகத்துக்குக் கட்புலனாய மாரனென்னலாமுமாய் குமாரக்கடவுளை அளித்தலே பொருட்டாக அம்மையாரை அரன் அணைந்ததையும், ஆக இம்மட்டுமே சொல்லி நிறுத்துவது "குமாரஸம்பவத்தில்" மொழிபெயர்க்கப்பெற்ற இப்பகுதி.

தம்மினும் கல்வி கேள்விகளில் ஏற்றங்கொண்ட மனையாளுக்கு நாணி, கல்வி வயிற்பிரிந்த காளிதாஸர் கருதியது

முற்றித்திரிந்த வளவை அது மனைவிக்குத் தெரிவிப்பான் அம்பிகையின் அருளை எத்தி இயற்றிய "சாமளா தண்டகத்தை"க் கேட்டுழி மனைவியார் சொல்லியதாய் நடைபெறும் "அஸ்தி கஸ்சித் வாக்விசேஷ:" என்னும் "சிறிது சொற்சுவையுளது" எனும் பொருள்படும் வாக்கியத்தின் முதற் சொல்லை முதலில் நிறுத்தி புலவர் பெருமான் இந்நூலைப் புனைவித்தாரென்று முது மொழி உண்டு. ஆகவே, இதுதான் காளிதாஸர் நூலியற்றுவதில் முதலிற் கைபழகிய நூல் என்று ஒருவாறு கொள்ளலாம். அவர் செய்திருக்கும் மஹா நாடகங்களின் பொருட்பொலிவினைநோக்கு மிடத்து, இந்நூல் சொற் செறிவேயுற்றதென்றும் கல்விபயில் மாணுக்கரை நெறிப்படுத்த ஏற்றமுதற் புத்தகமென்றுமே சொல்லத்தக்கது. இதிற் கிடக்கும் உயர்வுநவிற்சிகளும் புனைந்துரைகளும் புலவர்பிரானது போற்றலைச் சூசிப்பவேனும் பெரும்பாலும் இயற்கைப்பொருளோடு பொருந்தாதனவாய்க்காணும் இந்நூல் நெடுங்காலம் எழு ஸர்க்கங்கள் அளவாயே நிலைபெற்று வந்தது. பிற்காலத்தில் பின்னும் பத்து ஸர்க்கங்கள் சேர்ப்பித்து நிலவுகிறது. இப்பதினேழு சருக்கங்களும் காளிதாஸர் எழுதியவேயோ என்பது, முற்பகுதியின் சொல் நடையையும் பொருட் போக்கையும் பிற்பகுதியவற்ருேடு ஒப்பு நோக்குகையில், அனுமானிக்கத்தக்கதே. மேலும் இந்நூலுக்கு அரியபெரிய உரை செய்தமைத்த மஹா மஹோபாத்தியாயர் கோலாசலம் மல்லிநாத சூரிகள் முதல் எட்டு (எழு?) சருக்கங்களுக்கே உரை எழுதியிருத்தலின் பிற்பகுதி கவிஞர்பெருமானுகிய காளிதாஸரியற்றியவல்லவென்றுகழித்தனரென்ற கொள்கைக்கிடமுண்டு. முதலேழு சருக்கத்தில் குமாரனது பிறப்பு வருதலின்றி சிவபெருமான் பிராட்டியாரோடு பள்ளியறை சேர்தல்மட்டுமே பன்னப்படுதலின் காளிதாஸர் எழுதிய பகுதிக்கு "குமார ஸம்பவம்" என்பதனினும் "பார்வதி பரிணயம்" என்பதே சிறக்க அமையுமென்று கருதற்கிடமுண்டேனும், குமாரனது சம்பவத்துக்குக் காரணங்களைக் கூறிப் பின்னர் பார்வதி பரமேசுவரர்க

ருடைய சம்யோகம்வரை சொல்லவே மேற்பட்ட கதை சொல்லாமலே தெள்ளிதிற் றெரிதருதலால் இட்டபெயர் ஏற்புடைத்தென்றும், ஏழின்மேற்பட்ட சருக்கங்களெல்லாம் பிற்காலத்தார் பூட்டிய வெள்ளிப்பாட்டுகளென்றும், கொள்ளல் ஏற்புடைத்தாய்க் காண்கிறது. இதுபற்றியே, இவ்வரிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்துதவிய (காலஞ்சென்ற) ஸ்ரீமான் பண்டித நடேச சாஸ்திரிகள் அவர்களும் முன்னேழு சருக்கங்களையே மொழிபெயர்த்தனர் போலும்.

இத்தமிழுரை ஏறக்குறையப் பத்துவருஷங்களுக்கு முன் எழுதப்பெற்று அவர் தன் காலத்திலேயே பதிப்பிக்க அவாக்கொண்டு வரிவடிவில் நேர்ந்த பிழைகளைக் களையும்படி அவரால் தரப் பெற்றதேனும், வடமொழியிற் சிறிதும் பயிற்சியில்லாத குறைவோடு நெடுங்காலமாய்த் தமிழின் வழக்கமும் அற்ற குறையும் சேரவே, அவர் இட்ட பணியை ஏற்கவல்லேனல்லனென்று சொல்லினேன். ஆயினும் பண்டிதர் மனக்குறை தீராதிறந்துபட்டமையின் மனம் வருந்தினேனாய் எனது சிற்றறிவையும் கருதாது ஒருவாறு எழுத்துப் பிழைகளைமட்டுமே திருத்தித்தர ஒப்பினேன் ; சிற்சில விடங்களில் அவரது சொல் நடையைப் பிறழ்த்ததுமுண்டு. அதனாற் பொருள் மாறுபடக் கிடந்ததேல் அக்குறை என்னதே

இம்மொழிபெயர்ப்புக்கு அலங்காரமாகச் சேர்த்திருக்கும் படங்கள் சதார நாட்டில் ஆந்து நிலத்தின் அதிபராகிய ஸ்ரீமந்த பாவனராவ் ஸ்ரீநிவாஸராவ் என்றும் பாலா சாஹிப் பண்டித பிரதிநிதி யென்றும் பெயர் புனைந்த பீ. ஏ. பட்டம் பெற்ற ஸ்ரீமானால் தமதுசித்திரஞான முதிர்ச்சியின் எழுதப்பெற்ற சித்திரங்களின் சாயல்களே. அப்படிச் சேர்த்ததற்கு அவர் அன்பு கூர்ந்து அளித்தஅநுமதிக்குப் பெரிதும் கட்டுப்பாடுடையராதல் வேண்டும்.

பல்லாரி,
22-9-1912.

ஐ. வே. சுப்பிரமணிய ஐயர்.



SHRIMANT BALA SAHIB PANDIT PRATINIDHI, B. A.
Chief of Aundh, Satara

குமார ஸம்பவம்

முதல் சருக்கம்

உமாதேவி உற்பவம்

1. வடதிசையில் இமவான் என்றுபெயருள்ள மலையரசர் தேவரூபியாய் விளங்குகின்றார்; அவர் கீழ் சமுத்திரம், மேல் சமுத்திரம், இவ்விரு சமுத்திரங்களையும் எட்டி ஓங்கி நிற்பதால், இப்பூதலத்துக்கே ஓர் அளவு கோல்போலக் காணப்படுகின்றார்.

இமயமலை வருணனை

2. முன்னொரு காலத்தில், பூமிதேவி பசுவுருவங் கொண்டனள், அவ்வுருவங்கொண்ட இரகசியத்தைப் பிருது மகாராஜன் எல்லா மலைகளுக்கும் தெரிவிக்க, மற்றை மலைகளெல்லாம் இவ்விமவானை அப்பசுவிற்குக் கன்றாகச் செய்து, பால் கறப்பதில் மிக்க சமர்த்தனை மேருவைக்கொண்டு அப்பசுவைக் கறப்பித்து*, மிகவும்

---

* பசுவுக்குத் தன் கன்றினிடம் அதிக ஆதரமாகையால், கன்றாய் நின்று பால்குடித்த ஹிமவானுக்கு மற்றை மலைகளுக்குக் கொடுத்த இரத்தினங்களையும் மூலிகைகளையும்விடச் சிரேஷ்டமான இரத்தினங்களையும் மூலிகைகளையும் பால் ரூபமாகக் கொடுத்திருக்க வேண்டும் என்பது கவியின் கருத்து. அஃது உண்மையே. மற்றை மலைகளைக்காட்டிலும் இமய மலையிற்றான் இப்பொழுதும் எல்லாவித உயர்ந்த ரத்தினங்களும் மூலிகைகளும் கிடைக்கின்றனவென்பது உலகப்பிரஸித்தம்.

ஒளிபொருந்திய ரத்னங்களையும் உயர்ந்த மூலிகைகளை யும் பெற்றுக்கொண்டன.

3. கணக்கிலடங்காத எல்லாவித உயர்ந்த வஸ் துக்களுக்கும் ஆதாரபூதமாயிருக்கும் இவ்விமயமலை யின் மகிமையானது, அதனிடமிருக்கும் பனி என் பதனால், ஏதோ சிறிது குறைவுபடுவதாக நாம் கருதக் கூடாது; ஏனெனில் அனேக நற்குணங்களுடன் ஒரு தோஷம் கூடியிருப்பினும், அத்தோஷம் சந்திரபகவா னுடைய கிரணங்களுக்குள் அவருடைய மாசு மறை வதுபோல் மறைந்துவிடுமன்றோ?

4. அம்மலையின் சிகரங்களில் ஏராளமாயுள்ள காவிக் கற்களின் நிறம் மேகங்களின்மேல் படிவதனால் அந்திச் செவ்வானம் உண்டாயிற்று என்று மருண்டு அம்மலையி லிருக்கும் அப்ஸர மடந்தைகள் காலமில்லாக் காலத் திலும் தங்கள் மேனிகளை நகைகளால் அலங்கரித்துக் கொள்ளுகின்றார்கள்.

5. அம்மலையில் வசிக்கும் ஸித்தர்கள் அதின் சிகரங்களுக்குக் கீழ் அடர்ந்து சஞ்சரிக்கும் மேக மண்ட லத்துக்குள் நிழலாலும் மழையாலும் உண்டாகும் சுகத்தை அநுபவித்து விட்டு, மழை அதிகமாய்ப் பெய்து அதன் குளிர்ச்சி சகிக்க முடியாமற் போகும்பொழுதெல் லாம், அம்மேகமண்டலத்துக்கு மேலாக ஓங்கி வெயிற் காய்ந்து விளங்கும் சிகரங்களை நாடிச்செல்லுகின்றார்கள்.

6. யானைகளைக் கொன்று சென்ற சிங்கங்களின் இரத்தக்காற் சுவடுகளைப் பனி பெய்து அழித்த காரணத் தால், அச்சுவடுகளைப்பற்றி வேடர்கள் அச்சிங்கங்களைத் தேட முடியாவிடினும், அச்சிங்கங்களின் நகக்கண்களி

னின்றும் உதிர்ந்திருக்கின்ற யானைகளுடைய மஸ்தக நல்முத்துக்களால், அம்மலையில் அச்சிங்கங்கள் போன வழியைக் கண்டுபிடித்துக் கொள்ளுகின்றார்கள்.

7. அம்மலையில் வசிக்கும் வித்யாதர ஜாதியைச் சேர்ந்த கட்டழகிகள் தங்கள் கணவர்களுக்கு அன்பான கடிதங்கள் அனுப்பவேண்டியிருக்கும் பொழுதெல்லாம், அம்மலையில் உண்டாகும் பூர்ஜபத்திரம் என்ற இலைகளில் காவிக்குழம்பு மையால் வயது சென்ற யானையின் துதிக்கையின்மேல் காணப்படும் பத்மவிந்துக்கள்போல் அழகான எழுத்துக்களால் காகிதம் எழுதி அனுப்புகிறார்கள்.

8. இம்மலையில் வசிக்கும் கின்னரர்கள் இசை பாடும் பொழுதெல்லாம் இம்மலையின் குகையாகிற முகத்தினின்று வெளிக்கிளம்பும் காற்றானது வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களை நிரப்பிக்கொண்டு அக் கின்னரர்கள் பாட்டுக்குப் புல்லாங்குழலொத்துக் கொடுப்பதுபோலக் காணப்படுகின்றது.

9. இம்மலையில் யானைகள் தங்கள் கபோலங்களில் காணும் தினவைப் போக்கிக்கொள்ள சால (ஆச்சா) மரங்களில் உறையும் பொழுதெல்லாம் அம்மரங்களினின்றும் பெருகும் பால் இம்மலையின் சாரல்களைப் பரிமள வாஸனையால் வாஸிக்கும்படி செய்கின்றது.

10. இவ்விமயமலையில் குகைகளாகின்ற வீடுகளுக்கு முன்பாக வளர்ந்திருக்கும் சோதிக்கொடிகள் இரவுதோறும் விளக்குகள்போல் பிரகாசிக்கின்ற காரணத்தால், தங்கள் நாயகிகளுடன் சஞ்சரிக்கின்ற வேடர்களுக்கு, அவர்களோடு உல்லாஸமாக அக்குகைகளி

லிருக்க அச்சோதிக்கொடிகள் அவ்விரவு நேரங்களில் எண்ணெய் ஊற்றுமலெரியும் விளக்குகளாக விளங்குகின்றன.

11. குதிரைமுகம் போன்ற முகங்களை உடைய கின்னர ஸ்திரீகளின் நகங்களையும் குதிகால்களையும் அவர்கள் வழி நடக்கும் பொழுதெல்லாம் அம்மலையில் கல்லாக உறைந்திருக்கும் பனியானது வருத்திய போதிலும், அவர்களுக்கு இயற்கையாகவே நிதம்பங்களும் ஸ்தனங்களும் பெரியவைகளாகையால் மெள்ள நடக்கவேண்டியிருத்தலால் அவர்கள் அவ்வருத்தத்தைச் சகித்துக் கொள்ளுகிறார்கள்.

12. சூரியபகவானைக் கண்டு பயந்து ஓடிவந்து ஒளிந்திருக்கும் இருள் திரளையே இவ்விமயமலை தனது குகைக்குள் காப்பாற்றி வைத்திருப்பது போலக் காண்கின்றது. அற்பனையும் அவன் சரணமடைந்தபொழுது அவன் பகைவனிடம் ஒப்புவிக்காமல் தம்மைச் சார்ந்தவன் என்று காப்பாற்றுவது சான்றோர்களின் குணமன்றோ?

13. இம்மலையில் சவரிமான்கள் அங்கு மிங்கும் தங்கள் வால்களைத் தூக்கித் தூக்கி உதறும்பொழுதெல்லாம் சந்திரனுடைய காந்திக்கொப்பான பிரகாசத்தை உண்டாக்கிக்கொண்டு, சஞ்சரிக்கின்றமையால் அவைகள் இவ்விமயமலைக்கு, மலைகளுக்கு மன்னவன் என்ற பெயரை உண்மைப்படுத்த சாமரை வீசுவனபோல் காணப்படுகின்றனவாம்.

14. இம்மலையில் கின்னரமடந்தைகள் ஏதாவது ஒரு சமயத்தில் தங்கள் ஆடைகளை இழந்து வெட்கி நிற்கும் பொழுதெல்லாம் அவர்களிருக்கும் குகைகளின்

வாயிலே மேகங்கள் மூடுகின்றமையால், அவைகள அவர்களுக்கு ஒரு திரையை உண்டாக்கிக் கொடுப்பனபோலக் காணப்படுகின்றன.

15. இம்மலையில் வேடர்கள் மிருகங்களை வேட்டையாடி அயர்ந்திருக்கும் பொழுதெல்லாம் கங்கை அருவிகளினின்றும் நீர்த்திவலைகளைத் தாங்கியும் தேவதாரு மரத்தின்மேல் தவழ்ந்தும் வீசும் சுகமான காற்றானது, அவர்கள் தங்கள் மேனிகளில் கட்டிக்கொண்டிருக்கும் மயிற் றோகைகளைச் சற்றே அசைத்து அவர்களைச் சுகப்படுத்தி வைக்கின்றதன்றோ? *

16. இம்மலையின் உச்சியில் ஸப்தரிஷிகளால் பறிக்கப்பட்டு மிகுந்து நிற்கும் தாமரை மலர்களை அச்சப்தரிஷி மண்டலத்தின் கீழே விளங்கும் சூரியபகவான் அம்மலர்கள் உண்டாகும் ஓடைகளின்மீது மேல்நோக்கிப் போகும் தனது கிரணங்களை விழச்செய்து மலரச்செய்கின்றான். †

17. யாகத்துக்குச் சாதனமான சோமலதை முதலான வஸ்துக்களுக்கு இவ்விமயமலை காரணமாயிருப்பதையும், ‡ பூமியை இழுத்துத் தாக்கிப்பிடித்துக்கொண்டிருக்கும் பலம் இதனிடமிருப்பதையும், பிரமதேவர்

---

* ஒரு மலையின் உச்சியிலிருந்து மற்றொரு மலையின் உச்சிக்குப் பட்சிகள்போல் பறந்துபோக இமாலயத்தில் வேடர்கள் தங்கள் இரு விலாப்பக்கங்களிலும் மயில் தோகைகளைக் கட்டிக்கொள்ளுகின்றார்கள் என்பது உலகப்பிரஸித்தம்.

† சூரிய மண்டலத்துக்கு மேலாக இம்மலை ஓங்கி நிற்கின்றதென்பது தாற்பரியம்.

‡ ஒரு தேருக்கு அதனடியிலிருந்து உச்சி வரையில் உள்ளாக அமைக்கப்பட்டிருக்கும் உள்ளாணி அத்தேரின் பாகங்களை

கண்டு, இம்மலைக்கு யாகத்தில் எல்லாரும் அவிர்ப்பாகம் அளிக்க வேண்டும் என்ற திட்டத்தையும், இம்மலை மலைகளுக்கெல்லாம் மன்னவன் என்ற பட்டத்தையுந் தாமாகவே கொடுத்தார்.

கதையின் ஆரம்பம்

18. மேருவுக்குத் தோழரான இவ்விமவான் உலக மரியாதையை அறிந்தவராகையால் அதை யநுசரித்துத் தென்புலத்தார் மனத்தினின்று உதித்தவளும், எல்லா முனிவர்களாலும் வணங்கப்பெற்றவளும், தனது அழகுக்கு எதிரில்லா அழகு அமைந்தவளுமான மேனை என்பவளைத் தமது வம்சம் விளங்கும் பொருட்டு சாஸ்திரப்பிரகாரமாய் மணம்புரிந்தார்.

19. அவர்களிருவரும் இல்லற தருமத்தை நடத்திக்கொண்டு தங்கள் அன்புக்கும் அழகுக்கும் ஏற்றபடி உல்லாஸமாயிருக்குங் காலத்தில் வெகு மனோகரமான மடந்தைப் பருவத்திலிருக்கும் அவ்வுத்தமிக்குக் கருப்பம் வாய்த்தது.

20. அம்மேனகை முதல்முதல் மைனாகன் என்ற குமாரனைப் பெற்றாள். அவனே நாககன்னிகைகளுக்கேற்ற நாயகனாய், ஸமுத்திராஜனுக்கு இணைபிரியாத் தோழனாய், மலைகளின் சிறகுகளைவெட்ட வேண்டுமென்று

ஒன்றாகச் சேர்த்துப்பிடிக்கச் சாதகமாவதுபோல், மலையும் இப்பூமியின் உள்ளாக அமைக்கப்பட்டுப் பூமியை இழுத்துப் பிடித்துக்கொண்டு முனைமட்டில் மலை உருவாய் நமது கண்களுக்குக் காணும் உள்ளாணிபோல் விளங்குகிறது என்பதும் ஒருவித சித்தாந்தம்.

பெருங்கோபங்கொண்ட இந்திரனுடைய குலிசாயுதத்தினால் * உண்டாகும் காயத்தின் வேதனை இத்தன்மையது என்றும் அறியாதவனாய் விளங்கினான்.

21. மைனாகனை மேனை பெற்ற பிறகு, முன் ஜன்மத்தில் தக்ஷப்பிரஜாபதியின் பெண்ணாய்ப் பிறந்து ஈசனுடைய முன் மனைவியாயானபோது தனது தந்தை தனக்குச் செய்த அவமானத்தைச் சகிக்கவொண்ணாது, யோகத்தீ வளர்த்து அதில் குதித்துத்தனது பிராணனைப் போக்கிக்கொண்டவளாய் மகாபதிவிரதையெனப் பெயர் பெற்ற **தாக்ஷாயணி** என்பவள், மறுபடியும் தான் ஜனனமெடுப்பதற்காக அவ்விமயமலையின் மனைவியைத் தனது தாயாக வந்தடைந்தாள்†.

22. எல்லாவித கல்யாண குணங்களும் நிரம்பப்பெற்ற அம்மாது, மலைகளின் மன்னவரான இமவானுக்கும் பல நோன்புகள் நோற்ற பதிவிரதையாகிய மேனைக்கும் புதல்வியாய்த் தோன்றியது சிறிதேனும் வழுவின்றி நன்றாகப் பராமரிக்கப்படும் நீதியினிடம் உத்ஸாக குணத்தால் சம்பத்து உண்டாக்கப் பட்டதுபோல் சோபித்தது.

---

* இந்திரன் எல்லா மலைகளுடைய சிறகுகளையும் வெட்டின பொழுது மைனாகன் சமுத்திரத்தில் போய் ஒளித்துக்கொண்டான் என்பது புராண கதை.

† முன்னொரு காலத்தில் தாக்ஷாயணி தக்ஷருடைய யாகத்துக்காக வந்து தக்ஷர் தனது கணவராகிய பரமசிவனுக்குச் செய்த அவமானத்தைச் சகிக்க முடியாதவளாகத் தன்தந்தையையும் தனது கணவனையும் மறுபடி பார்க்க மனம் வெறுத்து, யோகத்தீவளர்த்துப் பிராணனை விட்டாள் என்பது கதை.

23. அவ்வுத்தமி பிறந்த நாள் எல்லாத் திசைகளும் நிர்மலமாய் விளங்கிக்கொண்டும், தூசு என்பது கொஞ்ச மேனு மில்லாத இளங்காற்று அசைந்துக்கொண்டும், ஆகா யத்தினின்று சங்கநாதத்துடன் மலர்மாரி பொழிந்து கொண்டும், அசையும் பொருள் அசையாப்பொருள் முத லிய எல்லாப் பொருள்களும் சுகப்பட்டுக்கொண்டும், இருக்கக் காணலாயிற்று.

24. புதிதாய்த் தோன்றிய மேகம் இடிபிடிக்கும் பொழுது விதூர மலையின் தாழ்வரையில் இரத்தின முளைகள் மேற்கிளம்பி விளங்குவதுபோல் மின்னற் கொடிபோல் சோபித்த அக்குழந்தையால் மேனையும் விளங்கலானுள் *.

25. அவ்வாறு தோன்றிய அப்பெண்குழந்தை சந்திர னுடைய இளங்கலைபோல நாளுக்குநாள் வளர ஆரம் பித்து, சந்திரனுடைய காந்தியைத் தங்களுக்குள் அடக் கிக் கொண்டிருக்கும் கலைகள் வளர வளர சந்திரனும் அதிக அழகைக் காட்டுவதுபோல இவளும் அதிக லாவ ணியத்தை வெளிக்காட்டலானுள்.

26. எல்லாப் பந்துக்களுக்கும் வேண்டியவளான அக்குழந்தையை, அந்தப் பந்துக்கள் தொன்றுதொட்டுக் குலத்துக் கமைந்தபடி பார்வதி† என்ற பெயரால் அழைக் கலானுர்கள். பார்வதி பிற்காலத்தில் தவஞ்செய்யப் புறப்படும்பொழுது "குழந்தாய்! உன்னுல் தவம் செய்ய

---

* விதூரமலை இரத்தினக்கனிகள் நிரம்பியிருப்பதாகவும், இடி யோசை உண்டாகும் பொழுதெல்லாம் இரத்தின முளை கள் அக்கனி களினின்று மேற்கிளம்புவதாகவும் ஒரு கதை.

† பர்வத ராஜன் மகள் பார்வதி யென்றபடி.

முடியாது", என்று தாய் தடுத்த காரணத்தால் அவள் "உமை" * என்ற மற்றொரு பெயரைப் பிறகு மடைந்தாள்.

27. இமவானுக்குக் குழந்தைகள் பலரென்றாலும் அவன் கண்கள் பார்வதியினிடம் ஒருபொழுதும் ஆவலடங்காதவண்ணம் அன்புபாராட்டி வந்தன. வஸந்த காலத்தில் எண்ணிறந்த மலர்கள் பூத்தபோதிலும் வண்டுக்கு மாமலரிலன்றோ அதிக அன்பு!

28. பெரும் பிரகாசத்தைக் கொடுக்கும் ஜ்வாலையால் விளக்கு தன்னைப் பெரியதாகக் கருதிக்கொள்ளுவது போலும், ஆகாசகங்கையால் சுவர்க்கம் தன்னைப்பெருமை பாராட்டிக் கொள்ளுவதுபோலும், வித்வான் இலக்கணந் தெரிந்ததால் இலக்கியத்தில் விளங்குவதுபோலும், இமவானும் அப்பார்வ்தியால் தான் அதிக பரிசுத்தியையும் கௌரவத்தையும் அடைந்து விட்டதாக எண்ணிக் கொள்ளலானார்.

29. அப்பார்வதியும் குழந்தைப்பருவத்தில் விளையாட்டு ஸந்தோஷத்தை முற்றிலும் அநுபவிப்பவளாய்த் தனது தோழிகளுடன் கங்கையின் மணல்திட்டுக்களில் திட்டாணி கட்டியும் பந்து விளையாடியும் பதுமைகளைக் குழந்தைகளாய்ப் பாவித்து வைத்துக்கொண்டு விளையாடியும் கழிக்கலானாள்.

---

* உமை என்பதற்கு வடமொழி உமா. உ என்றால் குழந்தாய் என்றும், மா என்றால் செய்யாதே என்றும் வடமொழியில் அருத்தம். மேற்கூறியபடி பார்வதி தவம் செய்யப் புறப்பட்ட பொழுது மேனகை உ! மா என்றாள்; அதாவது குழந்தாய்! நீ தவம் செய்யச் செல்லாதே என்றபடி. அக்காரணத்தால் உமை என்ற பெயர் பார்வதிக்கு வந்தது.

30. சூக்ஷ்மத்தில் அறிந்துகொள்ளும் சாமர்த்திய முள்ள அப் பார்வதிக்குப் படிப்புக் கற்றுக்கொள்ளும் வயது வந்ததும், சரத்காலத்திற் கங்கையை நாடி அன்னங்கள் வருவனபோலவும், இராக்காலத்திற் சோதிக் கொடியை நாடிப் பிரகாசம் வருவது போலவும், அவள் முற்பவத்திலறிந்திருந்த வித்தைகளெல்லாம் அவளை நாடி வந்தன.

31. சரீரத்துக்கு ஒருவித பிரயத்தனமும் நாம் செய்தலில்லாமலே அழகை வெளியிடுவதும் மத்தியம் முதலிய சாதனங்களின்றி மதத்தை உண்டாக்குவதும், மன்மதனுக்கு மலர்ப்பாணமல்லாதமற்றொருவித பாணம் என்று சொல்லப்பட்டதுமான யௌவனம் என்ற பருவத்தைப் பார்வதியானவள் தனது பெதும்பைப் பருவத்தைக் கடந்து அடைந்தாள்.

32. இவ்வாறு தோன்றிய யௌவனப் பருவத்தால் பார்வதியின் மேனியானது தூரியக்கோலால் கண்திறக் கப்பட்ட சித்திரம்போலும், சூரிய கிரணங்களால் மலர்த் தப்பட்ட தாமரை மலர்போலும், குற்றங்குறை என் பவை ஒன்றுமில்லாமல் எல்லாவிதத்திலும் சோபிக்க லாயிற்று.

பார்வதியின் பாதாங்குஷ்டந்தொடங்கி வருணனை

33. அவள் பாதங்கள் கொஞ்சம் மேலெடுப்பான நகங்களமைந்தவைகளாய், பூமியில் கால்வைக்கும்பொழு தெல்லாம் சிவப்பு நிறத்தை வெளியில் கக்குகின்றவைகள் போல் தோன்றுகின்றவைகளாய் விளங்கி தங்கள் வரம்பைவிட்டுப் பூமியின் மேல் வந்து நடமாடும் தாமரை மலர்களை ஒத்திருந்தன.

34. அவள் அழகாய் நடந்த நடையைப் பார்த்த அன்னப்புட்கள் அவள் கால் சதங்கை ஒலிக்கும் ஒலியைக் கற்றுக்கொண்டு அதற்குக் கைம்மாருக அவளுக்கு வேறு ஒரு வித்தையைக் கற்றுக்கொடுப்பான் அந்நடை பயிற்சி செய்விக்கப்பட்டதோ என்று சந்தேகிக்க வேண்டியதாயிருந்தது. *

35. அவளுடைய இரண்டு முழங்கால்களும் வட்டமாய்ப் பரந்து அழகாய் அதிக நீளமில்லாமலும் வர்த்துலமாயும் அமைக்கப் பட்டிருந்ததைப் பார்க்கும்பொழுது அவ்வுருவை அமைக்கப் பிரமதேவன் தான் சேகரித்த எல்லா அழகுகளையும் அம்முழங்கால்களிலேயே செலவிட்டு விட்டபடியால் மற்றைஅவயவங்களை அமைக்க வேறு அழகுகளைத் தேட அவன் சிரமப்பட்டான் என்று எண்ணவேண்டியிருந்தது.

36. உலகத்தில் தொடைக்கு உபமானமாய் யானைத் துதிக்கையையும் வாழைமரத்தையும் சொல்வது வழக்கம் என்றாலும், யானைத்துதிக்கைத்தோல் காடுமுரடாயிருப்பதாலும் வாழை ஒரே சீதளமாயிருப்பதாலும் உமையின் தொடைக்கு அவை யிரண்டும் உபமானமாகா.

37. வேறு ஒரு மடந்தையாலும் ஒருபொழுதும் மனத்தால் கூடக் கருதவுமுடியாத ஈசனுடைய மடியில்

---

* வித்தையால் வித்தை என்ற சாஸ்திரப்படி நமக்குத் தெரிந்த வித்தையை நாம் ஒருவனுக்குக் கற்றுக்கொடுத்து அதற்குப் பிரதியாக அவனுக்குத் தெரிந்த வித்தையை நாம் அவனிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் என்பது விதி. அன்னப்பறவைகள் பார்வதியினிடமிருந்து அவள் சதங்கை ஒலியைக் கற்றுக்கொண்டு அவளுக்கு தங்களுடைய நடை என்ற வித்தையைக் கற்றுக்கொடுத்தனபோலும். இந்தச் சுலோகத்தால் பார்வதியின் நடை, சதங்கை ஒலி இரண்டும் வருணிக்கப்பட்டனபோலும்.

பார்வதியின் நிதம்பம் ஏற்றிவைத்துக் கொள்ளப்பட்ட தென்பதினுலேயே அதன் அழகை நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலா மன்றே !

38. அப்பார்வதியின் அழகான உந்தியில் புகுந்த அவளுடைய உரோமாவலி அவள் ஒட்டியாணத்தில் நடு நாயகமாய் விளங்கிய நீலக்கல்லின் ஒளி அவள் இடையிற் கலையின் முடிப்பைக் கடந்து ஒளிப்பதுபோலும் சோபிக்க லாயிற்று.

39. யாகமேடைபோல் (மார்பு அகன்று இடை சிறுத்து) விளங்கிய தனது வயிற்றில் பார்வதி அழகான மூன்று மடிப்பு விழப்பெற்ருள். காமன் நடந்து போகும் பொருட்டு யௌவனன் என்ற கொத்தனுல் கட்டப்பட்ட படிகள்போலும் அவைகள் காணப்பட்டன.

40. கருங்காம்பு பெற்று ஒன்றுடன் மற்றென்று உரைந்துக்கொண்டு வளர்ந்த பார்வதியின் வெண்மையான முலைகள் "இழையிடைபுகாத" என்றவண்ணம் தங்கள் இடைவெளியில் தாமரைத்தண்டின் நூல்கூடப் புக இட மில்லாமல் அவ்வளவு நெருக்கமாய் விளங்கின.

41. அவளுடைய கைகள் சிரீஷ மலரைக்காட்டிலும் அதிக மிருதுவானவைகள் என்று எனக்குத் தோன்று கின்றது. ஏனெனில் முதலில் தோற்ற மன்மதன் அவைகளையே அன்றே ! சிவ பெருமானுடைய கழுத் துக்குப் பாசங்களாய்ச் செய்தான்.

42. பார்வதியின் கழுத்தும் அவள் அக்கழுத்தில் அணிந்திருந்த ஆணிமுத்தால் அமைக்கப்பட்ட மாலையும் ஒன்றையொன்று பரஸ்பரம் அழகுசெய்யும் மகிமை உண்

டானபடியால் எதை எது சிறப்பாகக் காட்டியது என்ற பெருமை அதிகமாகத் தோன்ருமல் ஒன்றை மற்றென்று சாமானியமாய் அலங்கரித்ததாகக் காணப்பட்டன.

43. எப்பொழுதும் சஞ்சலித்துக்கொண்டே யிருக்கும் லட்சுமீதேவி சந்திரனிடமிருக்கும் பொழுதெல்லாம் தாமரை மலரின் சுகத்தை அனுபவிக்க முடியாதவளாகவும் தாமரை மலரிடமிருக்கும் பொழுதெல்லாம் சந்திரனுடைய சுகத்தை அடைய முடியாதவளாகவும் தவித்தாள். * ஆனால் உமையின் முகத்தை அவ்விலக்குமி நாடிவந்தடைந்ததும் சந்திரன், தாமரை இவ்விரண்டினுடைய சுகத்தையும் ஒருங்கே அனுபவித்தாள்.

44. மாவிளந்தளிரின்மேல் வெண்மலரை வைத்துப் பார்த்தாலும் அல்லது பவளத்தின்மேல் நல்முத்தை வைத்துப் பார்த்தாலும் அக்காட்சி பார்வதி சிவந்த தனது உதட்டில் பற்களின் காந்தி பாவச்சிரிக்கும் புன்சிரிப்புக்கு ஒருவாறு ஒத்திருக்கும்.

45. வெகு மதுரமாய்ப் பேசும் அப்பார்வதி அமுதம் பொழியும் வண்ணம் பேசுங்கால், கோகிலத்தின் குரலும் கூட தந்திகள் தவருய் இயைக்கப்பட்டு வாசிக்கப்படும் வீணைபோல் நமது காதுகளுக்கு விகாரமாய்க் கேட்கும்.

46. அதிகக் காற்று வீசுமிடத்திலிருக்கும் கருங்குவளைமலரை ஒத்ததாக விளங்கிய அப்பார்வதியின்

---

* சந்திரன் இரவிலும் தாமரை பகலிலும் சோபிக்கின்றனவைகள். இரண்டையும் ஒரேகாலத்தில் இலட்சுமி அனுபவிக்காத காரணம் இதுதான். பார்வதியின் முகம் தாமரைபோலும் சந்திரன்போலும் விளங்கிற்று என்றபடி.

அழகான பார்வையானது அம்மாதால் மான் பேடுகளிடமிருந்து கற்றுக் கொள்ளப்பட்டதோ அல்லது அம்மான் பேடுகளால் அம்மாதினிடமிருந்து கற்றுக்கொள்ளப் பட்டதோ என்று சந்தேகிக்க வேண்டியதாக விருந்தது.

47. எழுதுகோலைக் கொண்டு மையால் எழுதப் பட்டவைகள் போல் விளங்கிய அப்பார்வதியின் விசாலமான புருவங்கள் எவ்வாறு சோபித்தனவென்றால் வெகு உல்லாஸத்துடன் விளங்கிய அவைகளைப் பார்த்த பிறகு மன்மதன் தன்னுடைய வில்லின் அழகே அழகு என்று அடைந்திருந்த கர்வத்தை விட்டான்.

48. கவரிமான்களுக்கு மனதில் சிறிதும் வெட்கமென்பது இருக்கும் என்கிற பட்சத்தில் அவைகள் பார்வதியின் கூந்தலைப் பார்த்த பிறகு தாங்கள் தங்கள் வால்களின்மேல் வைத்திருக்கும் அன்பைக் குறைத்துவிடும்.*

49. ஒப்பிடவேண்டிய எல்லா வஸ்துக்களையும் ஒருங்கு சேர்த்து அவ்வவைகளுக்கேற்ற இடங்களில் அவ்வவ் வஸ்துக்களை வைத்து வெகு சிரமத்தோடு பிரமனால் உண்டாக்கப்பட்டவள் போலவும், எல்லாவித அழகையும் ஒரே படத்தில்பார்க்க ஆசைகொண்ட அப்

* கவரிமான்களுக்குத் தங்கள் வால்களின்மேல் அதிக அன்பு என்றும் அவ்வாலினின்று ஒரு மயிர் உதிர்ந்தாலும் அவைகள் தங்கள் பிராணனை விட்டுவிடும் என்றும் அதை அறிந்தே கவரிமான்களைப் பிடிக்கச்செல்லும் வேடர்கள் அவைகளைத் தாங்கள் கொல்லாமல் காட்டில் முள்வேலி ஒன்று கட்டி அவ் வேலி வழியாய்க் கவரிமான்களைத் துரத்துகின்றார்கள் என்றும் அவ்வண்ணம் ஓட்டப்படும்பொழுது அம்மான்களின் வால்கள் முள்ளில் பட்டதும் மயிர் கலைந்த காரணத்தால் அவைகள் தங்கள் உயிரை மாய்க்கின்றன என்றும் சொல்லுகின்றார்கள்

பிரமனால் சிருஷ்டிக்கப் பட்டவள்போலவும் பார்வதி விளங்கினாள்.

50. (நாரதர் சொன்ன ஸந்தோஷ ஸமாசாரம்)— ஏதோ தன் மனப்போக்குப்படி சஞ்சரித்துக் கொண்டிருந்த நாரதர் ஒரு சமயத்தில் இமவானுக்கருகாமையில் பார்வதி நிற்கக்கண்டு அவள் சிவபெருமானுடைய பாதி சரீரத்தை அன்பால் கொள்ளைகொள்ளும் அவரது ஒரே மனைவியாய்ப் பின்னால் ஆகப்போகின்றாள் என்பதை அம்மலை மன்னவனிடம் சொல்லிப்போனார்.

51. (இமவான் தன் பெண்ணுக்கு வரன் தேடாமலிருந்தது)—பார்வதிக்கு மணத்துக்குத் தக்க வயது வந்திருந்தபோதிலும் இமவானும் நாரதர் சொன்ன சொல்லைக் கேட்ட பிறகு வேறொரு வரனையும் தேட மனமில்லாதவராயிருந்தார். மந்திரமோதி ஓமஞ் செய்யப்பட்ட அவிஸை ஒப்புக்கொள்ள அக்னியாலல்லாது மற்ற ஒளியால் முடியுமா ?

52. ஈசன் தன்னிடம் வந்து பெண்ணைக்கொடு என்று யாசிக்காதவரையில் தான் அவரிடம் சென்று என் பெண்ணை வாங்கிக்கொள் என்று சொல்ல மலைகள் மன்னவனுக்கு மனம்வரவில்லை ; ஏனெனில் நல்லோர்கள் தாங்களே போய்க் கேட்டால் எங்கு காரியமே நிறைவேறாமற் போய்விடுமோ என்ற பயத்தால் தங்களுக்கிஷ்டமான காரியங்களிலும் உதாஸீனர்களா யிருக்கின்றார்கள் அன்றோ ?

சிவபெருமான் தவம்புரிதல்

53. முன் ஜன்மத்தில் தாக்ஷாயணியானவள் தான் தக்ஷப்பிரஜாபதியினிடம் அடைந்த கோபத்தால் தனது

தேகத்தை என்றையதினம் அக்கினியில் விட்டாளோ அன்று முதல் சிவபெருமானும் விஷயத்தில் ஆசை ஒழிந்தவராய் மனைவியில்லாதவராகவே யிருந்தார்.

54. அன்றியுமவர் மான்தோல் தரித்து ஐம்புலன் களையும் அடக்கித் தவம் செய்யக் கருதி, கங்கை அருவி களின் சலத்திவலைகளால் நனைந்து நிற்கும் தேவதாரு விருக்ஷங்கள் நிரம்பியதாய்க் கஸ்தூரி மிருகத்தின் பரி மளம் வீசுவதாய்க் கின்னரர்கள் கானம் பண்ணிக்கொண் டிருப்பதாய் விளங்கும் இமாலயத்தின் ஒரு தாழ்வரையை அடைந்தார்.

55. அவருடைய பிரமதகணங்கள் தேவ புன்னை மலர்களைத் தங்கள் தலைகளிலணிந்தும் மிருதுவான மா உரிகளைத் தரித்துக்கொண்டும் காவிப்பொடிகளைத் தங்கள் மேனியின்மேல் பூசிக்கொண்டும் வாஸிக்கும் மூலிகைகள் நிரம்பிய மலைச்சார்புகளில் தங்கலானார்கள்.

56. சிவபெருமானுடைய இடபமும் கல்போல் உறைந்திருந்த பனிக்கட்டிகளைத் தனது கால் குளம்பாற் கீறிவிட்டுக்கொண்டு மதத்தால் மனோகரமாய் முக்காரம் போட்டுக்கொண்டு அக்காட்டில் சஞ்சரிக்கலாயிற்று. அவ் விடபத்தைக் கவயம் என்ற மிருகம் எப்பொழுதாவது பயந்து பார்த்தபொழுது அப்பார்வையைச் சகிக்கமுடியா மல் அவ்விடபம் சிங்க கர்ஜனைக்கு ஒப்பாய் கர்ஜிக்கும்.

57. அவ்விடத்தில் தனது எண்வகை மூர்த்தியில் ஒன்றாகிய அக்கினியை மூட்டி அதைச் சமித்துக்க ளால் வளர்த்து அதன்முன் உட்கார்ந்துகொண்டு தவத் தின் பயனைத் தானே மற்றவர்களுக்கு அளிக்கும் மகிமை

படைத்த மகாதேவர் ஏதோ காரணத்தால் தானே தவம் புரியலானர்.

58. இமவான் பரமசிவத்துக்குச் செய்த பூஜை.—மலைகளின் மன்னவனாகிய ஹிமவானும் ஒப்பற்ற மகிமை பொருந்தியவராய்த் தேவர்களால் வணங்கப்பெற்றவரா யிருக்கும் அச்சிவபெருமானைப் பூசைபண்ணி அவருக்குப் பணிவிடை செய்யும் பொருட்டு வெகு ஆசாரசீலையான தனது குமாரியை அவள்தோழிகளுடன் அச்சிவபெருமானுடைய ஆச்சிரமத்துக்கு அனுப்பினர்.

59. சிவபெருமானும் ஸ்திரீஸாமீப்பியம் தவத்துக்கு நேர்விரோதம் என்றிருந்தபோதிலும் பணிவிடைத்தொழில் செய்யவந்த பார்வதியை ஒப்புக்கொண்டார்; ஏனெனில் மனோவிகாரங்கள் உண்டாகும் காரணங்களின் நடுவிலிருந்துகொண்டிருந்தும் எவனொருவன் மனம் கலையாமலிருக்கின்றானோ அவனல்லவோ தீரன்?

60. அப்பார்வதியும் பூஜைக்கு வேண்டிய மலர்களைக்கொய்து கொண்டுவந்து வைத்தும், யாகமேடையை மெழுகிப் பெருக்கி அலங்கரித்து வைத்தும் சிவபெருமானுடைய தவத்துக்கு வேண்டிய தீர்த்தத்தை ஆசாரத்துடன் கொண்டுவந்து வைத்தும் தர்ப்பை முதலிய சாதனங்களைச் சம்பாதித்துக் கொடுத்தும் ஒவ்வொரு நாளும் சிவபெருமானை ஆதரிக்கலானாள்; அவ்வம்மணி இவ்வாறு தான் பட்டசிரமத்தை எல்லாம் அசசிவபெருமானுடைய தலையிலிருந்து பிரகாசிக்கும் சந்திர கிரணங்களினால் அகற்றிக்கொள்ளலானாள்.

இரண்டாவது சருக்கம்

பிரமதேவர் வரம்

1. பார்வதி அவ்வண்ணம் சிவபெருமானுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த காலத்தில் தாரகாசுரனுடைய ஹிம்ஸையால் மிகவும் நொந்துபோயிருந்த தேவர்கள் தேவேந்திரனை முன்னிட்டுக்கொண்டு பிரமதேவருடைய இருப்பிடத்தை நாடிச் சென்றார்கள்.

2. தூங்கும் தாமரை மலர்களுடன் காணப்படும் தாமரை ஓடை முன்பாக விடியற்கால சூரிய பகவான் தோன்றுவது போல வாடிய முகத்துடன் வந்து நின்ற தேவர்களுக்கு எதிரே பிரமதேவர் தோன்றினார்.

3. அவ்வாறு பிரமதேவர் தரிசனம் கொடுத்தவுடன் அத்தேவர்கள் எல்லாரும் எத்திசையிலும் முகத்தை யுடையவனும் எல்லா வித்தைகளுக்கு மீசனும் எல்லா உலகத்தையும் படைத்தவனுமான அத்தேவனைப் பொருளுடன் கூடியசொற்களால் பின்வருமாறு ஸ்தோத்திரம் பண்ணலானார்கள்.

4. தெய்வமே! உலகப்படைப்புக்கு முந்தி ஒரே உருவாயும் அதற்குப் பிறகு ஸத்வாஜதமோ குணங்களையே பிரித்துக்கொண்டு ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்திரன் என்ற முவ்வுருவமாய்ப் பேதங்கொண்டு மும்மூர்த்திகளாயும் விளங்கும் தெய்வமே! உமக்கு நமஸ்காரம்.

5. பிறப்பில்லாமல் தானே தோன்றிய தெய்வமே! ஜலத்தின் நடுவில் முதல்முதல் உம்மால் விதைக்கப்பட்ட

பழுதில்லா விதையிலிருந்தல்லவா ஸ்தாவர ஜங்கமமான இவ்வுலகம் யாவையும் உண்டாயிருக்கின்றது.

6. படைப்புக்கு முன் ஒருவராய் நின்ற தெய்வமே ! மூவித அவஸ்தைகளினால் உமது மகிமையை வெளிக்காட்டிக்கொண்டு சங்காரம், பரிபாலனம், படைப்பு இம்மூன்றுக்கும் ஒரே காரணமாய் விளங்குகிறீர்களல்லவா ?

7. புருஷன் என்றும் ஸ்திரீ என்றும் இவ்விரு உருவங்களையும் உண்டுபண்ண உமது தேகத்தை நீர் இரண்டாகப் பாகித்துக்கொண்டு அவ்விரு உருவங்களையும் சிருஷ்டித்தீர்கள் ; ஆகையால் இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் நீங்கள் தாயும் தந்தையுமாய் விளங்குகின்றீர்களன்றோ !

8. உங்களுக்கு இரவும் பகலும், அதாவது நீங்கள் தூங்கும் காலமும் விழித்திருக்கும் காலமும், இவ்வுலகத்தை அளவிடும் காலமாக ஏற்பட்டு, நீங்கள் தூங்கும் காலம் பிரளயகாலமாயும் நீங்கள் விழித்திருக்கும் காலம் உலகம் தோன்றி நிலைக்கும் காலமாயும் காண்கின்றனவன்றோ.

9. இப்பிரபஞ்சத்துக் கெல்லாம் நீங்களே காரணமாயிருந்து கொண்டு நீங்கள்மட்டும் காரண மற்றவர்களாய் விளங்குகின்றீர்கள். இவ்வுலகத்தின் அழிவுக்குக் காரணம் நீங்களே ; உமக்கோ அழிவென்பதே யில்லை. இந்த ஜகத்துக்கே ஆதிகாரணம் நீங்கள் ; உமக்கு ஆதி ஒருவருமில்லை. இந்த ஜகத்துக்கெல்லாம் ஈசன் நீங்களே ; உமக்குமேல் ஈசன் ஒருவனிருக்கின்றான் என்பது இல்லை.

10. தெய்வமே, உமது ஸ்வரூபத்தை நீங்களே அறிந்து கொள்ளுகின்றீர்கள். உம்மை நீரே உண்டாக்கிக் கொள்ளுகின்றீர்கள். எல்லா விதத்திலும் வெகு ஸாமர்த்திய முள்ளவராகையால் உமது ஆத்மாவிலேயே நீர் லயத்தையு மடைகின்றீர்கள். (மற்றவர்களைப்போல ஞானம், உற்பத்தி, லயம் இவைகளில் உமக்கு மற்றவர்களுடைய அபேக்ஷை வேண்டியதில்லை.)

11. (ஆறு, சமுத்திரம் இவைகள்போல்) ஜலரூபமாயிருப்பவர் நீங்களே! சேர்க்கையில் கடினமாய் (மலைபோல) இருப்பவரும் நீங்களே. (மட்பாண்டம்போல) இந்திரியங்களால் குறிப்பிடக்கூடியவர் நீங்களே. இந்திரியங்களால் குறிப்பிடப் படாதபடி பரமாணுரூபமாய் வியாபித்திருப்பவரும் நீங்களே; (பஞ்சுபோல) லேசா யிருப்பவரும் நீங்களே; (மலைபோல) கனமாயிருப்பவரும் நீங்களே; காரியரூபியாயிருப்பவரும் நீங்களே; காரணரூபியாயிருப்பவரும் நீங்களே; இவ்வாறு அணிமாதி ஐசுவரியங்களில் உம்மிடம் எல்லாவித ஐசுவரியங்களும் நன்றாக நிரம்பியிருக்கின்றன.

12. தெய்வமே! எந்தச் சொல்லின் ஆரம்பம் ஓங்காரமோ, எந்தச் சொல்லை மூவித நியாயங்களால் (உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம்) உச்சரிக்க வேண்டுமோ, எந்தச் சொல்லைச் சொல்லியே யாகம் பண்ணவேண்டுமோ, எந்தச் சொல்லின் பயன் மோக்ஷமோ, அந்தச் சொல்லாகிய வேதத்துக்குத் தாங்களன்றோ காரணம்.

13. ஸாங்கிய மதரீதியாய் ஆராயுங்கால் உம்மைத்தான் அறம் பொருள் இன்பம் வீடு என்ற எல்லாவித புருஷார்த்தங்களுக்கும் சிறப்பாகும் (பிரகிருதி) மூலகாரண

மாய்ச் சொல்லுகின்றூர்கள். அம்மூல காரணத்தையே நன்கு கண்டறிந்துகொண்டு செயலற்று நிலேத்த புருஷ ஞகவும் உங்களேயே சொல்லுகின்றூர்கள்.

14. பிதிருக்களுக்கெல்லாம் பிதா நீங்களே. தேவர் களுக்கெல்லாம் தெய்வம் நீங்களே. மேல் என்று சொல் லப்பட்டவைகளுக்கெல்லாம் மேலானவர் நீங்களே. தக்ஷர் முதலியவர்களே எல்லாம் உண்டாக்கினவர் நீங்களே.

15. எனறென்றைக்கும் அழிவின்றி விளங்குபவர் நீங்களே. அக்கினியில் ஓமம் பண்ணப்படும் அவிஸ் ரூபமாயிருப்பவரும் நீங்களே; யஜமானனுயிருந்து கொண்டு அந்த அவிஸை ஓமம் செய்கின்றவரும் நீங்களே; புசிக்கப்படும் அன்னமும் நீங்களே; அவ்வன்னத்தைப் புசிக்கின்றவரும் நீங்களே; எல்லாராலும் தவத்தின் மகிமையால் கண்டறிந்து கொள்ளப்பட வேண்டிய பராபர வஸ்து நீங்களே; அப் பராபர வஸ்துவைக் காண்கின்ற வரும் நீங்களே; எல்லாராலும் தியானம் பண்ணப்படும் பொருள் நீங்களே; அவ்வாறு தியானஞ் செய்கின்றவரும் நீங்களே.

16. இவ்வாறு தேவர்கள் வெகு உண்மையாகவும் மனப்பூர்வகமாயும் தோத்திரம் பண்ணினதைப் பிரம தேவர் கேட்டு அவர்களுக்கு அனுக்கிரகம் பண்ண விரும்பியவராய் பின்வருமாறு மறுமொழி சொல்லலானுர்.

17. வெகு புராணபுருஷராய் கவிதாவாயிருக்கும் அந்தப் பிரமதேவருடைய நான்கு வாய்களாலும் சொல் லப்பட்ட சொற்கள் நான்குமடங்கு பயன் அமைந்த வைகளாய் வெளிக்கிளம்பின.

18. எல்லாவித பல பராக்கிரமமும் பொருந்திய தேவர்களே! உங்கள் அதிகாரங்களை உங்கள் சாமர்த்தியத்தால் நீங்கள் அடைந்து இப்பொழுது ஒரேகாலத்தில் இங்கு வந்திருக்கும், நீண்ட கைபடைத்தவர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக.

19. ஏ, தேவர்களே! பனியால் மறைக்கப்பட்டிருக்கும் நக்ஷத்திரங்கள் காந்தி குறைந்திருப்பது போல் உங்கள் முகங்கள் முனபோல இயற்கையான காந்தியுடன் என் விளங்கவில்லை?

20. தேவேந்திரனுடைய வச்சிராயுதம் காந்தி குன்றி மின்னுமலிருக்குங் காரணத்தால் முனை மழுங்கிப்போனது போற் காணப்படுகின்றது.

21. சத்துருக்களால் ஒருபொழுதும் அணுக முடியாத வருணபகவானுடைய கைகளிலிருக்கும் பாசமும் காருடமந்திரத்தினல் தனது வல்லமையை யிழந்த ஸர்ப்பத்தின் அசக்தமான நிலைபெற்றிருப்பதாகக் காணப்படுகின்றது.

22. தனது கதாயுதத்தைக் கைவிட்டு அக்காரணத்தால் கிளைகள் எல்லாம் தறிக்கப்பெற்ற மரம்போற் காணப்படும் குபேரன் கை அவனது மனத்தில் அம்புபோற் குத்தும் ஏதோ ஒருவித அவமானத்தை வெளியிடுகின்றது.

23. ஒளியற்ற தனது தண்டாயுதத்தால் யமன் பூமியில் கோடு கிழித்துக்கொண் டிருப்பதால் ஒருநாளும் வீண்போகாத தனது யமதண்டத்தை ஒரு கொள்ளிக் கட்டையைக் கருதுவதுபோல் கருதி யிருக்கின்றான்.

24. தங்களுடைய ஒளிகுன்றிய காரணத்தால் இப்பன்னிரண்டு ஆதித்தியர்களும் சித்திரத்தில் எழுதப்

பட்ட ஆதித்ய பிம்பங்கள்போல் மற்றவர்கள் கூசாமல் கண்களைத் திறந்து தங்களைப் பார்க்கக்கூடிய நிலைமையை ஏனடைந்தார்கள் ?

25. மேட்டுவயலை நோக்கிப்பாயும் தண்ணீரின்வேகம் குறைவதுபோல், வாயுக்கள் ஏதோ குழம்பி நிற்ப தால் அவர்களுடைய வேகமும் குன்றி யிருப்பதுபோலுங் காண்கின்றது.

26. வாடித்தொங்கும் சடைகளின் நடுவில் நழுவிக் கொண்டு நிற்கும் சந்திரலேகைகளை யுடைய இப்பதி னொரு ருத்திரர்களுடைய முகங்களும் "ஹூங்காரம்" தங்களைவிட்டு அகன்றது என்பதைச் சொல்லுவது போலும் காண்கின்றன.

27. பொதுவிதிகளை அவற்றின் சிறப்புவிதிகள் விலக்கு போல இதற்குமுன் நற்பதவியிலிருந்த நீங்கள் உங்களைவிடப் பலமானவர்களால் அப்பதவிகளிலிருந்து ஓட்டப்பட்டீர்களா என்ன ?

28. என் குழந்தைகளே! எல்லாரும் ஒன்றுசேர்ந்து என்னிடம் என்ன வேண்டி வந்தீர்கள் ? உலகத்தைப் படைப்பதுமட்டும் என் வேலை என்றும், அவ்வுலகத்தை ரக்ஷிப்பது உங்கள்பாடு என்றும் உங்களுக்குத் தெரியாதா?

29. இவ்வாறு பிரமதேவன் கேட்டதும் தனது குருவாகிய பிரகஸ்பதியை மறுமொழி சொல்லும்படி இளங்காற்றால் அலைக்கப்படும் தாமரைக்குளம்போல விளங்கும் தனது ஆயிரம் கண்களினால் இந்திரன் சாடை காட்டினான்.

30. இந்திரனுடைய ஆயிரங்கண்களுக்கும் மேம் பட்ட இரண்டு கண்களே அமையப்பெற்ற இந்திர

பகவானுடைய (ஆயிரத்தோராவது) கண்ணுன பிரகஸ்பதியும் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு பிரமதேவரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுர்.

31. எல்லாவித ஐசுவரியங்களும் அமர்ந்த தெய்வமே! நீங்கள் சொன்னது உண்மையே. எங்கள் பதவிகள் சத்துருக்களால் அபகரித்துக் கொள்ளப்பட்டன. ஒவ்வொருவர் மனத்திலும் புகுந்து பார்க்கும் வல்லமை படைத்த உங்களுக்கு இது ஏன் இதுவரையில் புலப்படவில்லை?

32. தங்களிடமிருந்து வரம்பெற்றுச் செருக்கடைந்திருக்கும் தாரகன் என்னும் ஓர் அசுரன் ஓர் தூமகேது போல் இவ்வுலகத்தை நாசஞ்செய்ய வேண்டுமென்றே தோன்றியிருக்கின்ருன்.

33. அவனுடைய பட்டணத்தில் சூரியபகவான் தான் எவ்வளவுமட்டும் வெயிலடித்தால் அவனுடைய தாமரை ஓடைகளிலிருக்கும் தாமரைப் புஷ்பங்கள் மலருமோ அவ்வளவுமட்டுந்தான் வெயிலை அடிக்கவேண்டும்.

34. சந்திரபகவானே எந்நாளும் தனது எல்லாக் கலைகளோடும் அத் தாரகாசுரனைச் சேவித்து வருகின்ருன். ஈசுவரனுடைய தலையில் ஆபரணமாய் விளங்கும் அந்த ஒரு கலையைமட்டுமே சந்திரன் தன்னிடம் வரவழைத்துக் கொள்ளுகின்றதில்லை.

35. மலரைத் திருடினவனென்று எங்கு தன்னைத் தாரகன் தண்டிப்பானே என்று நடுங்கி அவன் தோட்டத்துக்குள் நுழைய வழியேயின்றி அவனருகாமையிலிருந்து கொண்டு ஒரு விசிறியினுல் வீசினுல் எவ்வளவு காற்றுண்டாகுமோ அவ்வளவு காற்றுக்குமேல் உண்டா

காதபடி பயந்து வாயுபகவான் தவழ்ந்துகொண்டு வருகின்ருன்.

36. ஆறு ருதுக்களும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இயற்கைபோல் மாறிவருவதைவிட்டு எப்பொழுதும் மலர்கள் கொய்துகொண்டு வந்து கொடுப்பதிலேயே கவனமுள்ளவர்களாய், தாரகனுடைய தோட்டக்காரர்கள் போல் அவனுக்குப் பணிவிடை செய்கின்ருர்கள்.

37. நதிகளுக்கெல்லாம் நாயகனுன சமுத்திராஜன் தாரகனுக்குத் தான் காணிக்கையாகக் கொடுக்கவேண்டிய ரத்தினங்கள் எப்பொழுது நன்ருக முதிரும் என்று சமுத்திர ஜலத்துக்குள் புகுந்து எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கின்ருன்.

38. வாஸுகி முதலான சர்ப்பராஜர்களும் இரவுகளில் எப்பொழுதும் பிரகாசிக்கும் தங்கள் சிரோமாணிக்கங்களை ஒரேரீதியாய் நின்றெரியும் நந்தா விளக்குகளாக ஏந்திக்கொண்டு அத் தாரகனுக்குப் பணிவிடை செய்கின்ருர்கள்.

39. இந்திரனும் அத்தாரகன் நமக்கு எப்பொழுது அநுக்கிரகம் பண்ணப்போகின்ருன் என்று அவனுடைய தயவை எதிர்பார்த்துக்கொண்டு கற்பகதருக்களிலுண்டாகும் மலர்களைக் கொய்து அவனிடம் தூரத்திலிருந்தபடியே கொடுத்துக் கொண்டு அத்தாரகனைத் தன்னிடம் நல்லவிதமாக ஏற்கும்படி பண்ணிக்கொள்ளுகின்ருர்.

40. இவ்வண்ணம் எல்லாராலும் பணிவிடை செய்யப் பெற்றபோதிலும் அத்தாரகாசுரன் மூவுலகங்களையும் இம்சிக்கின்ருன். தீயன் தனக்குத் தீமைசெய்யப் பெற்

ளுல் அடங்குவானேயன்றி நன்மைசெய்யப் பெற்ளுல் ஒரு போதும் அடங்கமாட்டான்.

41. தேவமடந்தைகளும்கூடத் தங்கள் கைகளால் வெகு கருணையுடன் கொய்யும் இளந்தளிர்கள் அமைந்த இந்திரனுடைய சிங்கார வனத்திலிருக்கும் மரங்களோ இப்பொழுது தாரகன் கைவசப்பட்டு அவனுல் வெட்டவும் முறிக்கவும்பட்டு அவஸ்தைப்படுகின்றன.

42. அத்தாரகாசுரன் தூங்கும்பொழுது அவனுல் சிறை வைக்கப்பட்ட தேவஸ்திரீகள், சுவாஸத்துக்கொப்பான இளங் காற்றுண்டாகும்படி தங்கள் கண்ணீர்த் திவலைகளை வாரித் தெளிக்கும் விசிறியால் விசிறிக் கொண்டிருக்கின்ளுர்கள்.

43. சூரிய பகவானுடைய குதிரைகளின் கால் குளம்பு பட்டுத் தேய்ந்திருக்கும் மேருமலையின் சிகரங் களை அத் தாரகன் பிடுங்கி தனது மாளிகைக்குள் அழ கான சிங்காரக் குன்றுகளாக வைத்துக்கொண் டிருக் கின்ளுன்.

44. தாரகாசுரனுடைய பொற்ளுமரைக்கு எது ஓடையென்ளுல் முன்னர் திசைக்கரிகளுடைய மதத்தால் வாஸித்துக்கொண்டிருக்கும் மந்தாகினியின் ஜலமே.

45. சுவர்க்கலோகத்தி லிருக்கின்றவர்களுக்குப் பூலோகத்தைப்போய் பார்த்து வருவோமென்ற ஆசையே போய்விட்டது. தாரகன் எங்கு வழியில் வந்து விடு வானே என்ற பயத்தாற் சுவர்க்கலோகத்தார்கள் விமானம் செல்லும் வழியும் புல் முளைத்துப்போயிற்று.

46. யாகம் பண்ணுகின்றவர்கள் தாங்கள் யாகஞ் செய்யும்பொழுது எங்களுக்குக் கொடுக்கும் அவிஸ்ஸை

நாங்கள் கண்களைத் திறந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுதே எங்கள் முன்னிலையில் அக்கினி பகவானு டைய வாயிலிருந்தபடியே தாரகாசுரன் பிடுங்கிக்கொண்டு போகிறான்.

47. இந்திரன் வெகுகாலமாய்த் தேடிப்பெற்ற உத்சை சிரவஸ் என்ற ஜாதிக்குதிரையை அவனது உடம்பிற் பிரிக்க வலாத புகழை அபகரித்துக்கொண்டு போவது போல் அத்தாரகன் அபகரித்துக்கொண்டுபோய்விட்டான்.

48. பெரும்வியாதிக்கு என்னதான் மேலான மருந்து கொடுத்தபோதிலும் பிரயோஜனப்படாமற் போவதுபோல அக்கொடிய அசுரனை அடக்க நாங்கள் செய்த எல்லாவித உபாயங்களும் பயனற்றவைகளாக முடிந்தன.

49. எந்த ஒரு இடத்தில் வெற்றி நமக்குக் கிடைக்குமென்று நாங்கள் ஆசைவைத்திருந்தோமோ அந்த விஷ்ணு சக்கிரமும் அவன் மார்பில் மோதி "பளிச்" என்று ஒரு ஒளியைமட்டும் உண்டாக்கிவிட்டு அவன் கழுத்தில் ஒரு மாலைபோல் விழுந்தது.

50. ஐராவதம் முதலிய யானைகளை வென்றுவிட்ட அவ் வசுரனுடைய யானைகள் புஷ்கரம் ஆவர்த்தகம் என்ற மேகங்களுடன் கொம்புமுட்டி விளையாடி வரு கின்றன.

51. தெய்வமே! மோட்சத்தை யடைய விரும்பு கின்றவர்கள் சம்சாரபந்தத்தை விட்டு ஒழிய கர்மத்தை வேருடன் அறுக்கும் தர்மத்தைத் தேடுவதுபோல அவ் வசுரனை அடக்க ஒரு படைத்தலைவனை எங்களுக்குச் சிருஷ்டித்துக் கொடுக்கவேண்டுமாய் நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

52. இந்திரபகவானது சத்ருருவாகிய தாரகாசுர னிடமிருந்து அவன் சிறைபிடித்து வைத்திருக்கும் ஜய லக்ஷ்மியை மீட்டுக்கொண்டு வரும்படியாக தேவர்கள் சேனையைப் போருக்கு இட்டுக்கொண்டுபோகும் பராக் கிரமமுள்ள சேனுபதியை நீங்கள் எங்களுக்கு அளிக்க வேண்டும்.

53. வாசஸ்பதி இவ்வாறு பேசி ஒய்ந்ததும், பிரம தேவர் மறுமொழி சொல்லலானுர்; அவருடைய பேச்சும் இடி இடித்து ஒய்ந்தவுடன் மழை பொழிந்தால் எவ் வளவு மனேகரமா யிருக்குமோ அதற்குமே லின்பகரமா யிருந்தது.

54. உங்களுடைய மனோதம் நிறைவேறப்போ கின்றது ; இன்னும் கொஞ்சகாலம் காத்திருங்கள்; ஆனுல் உங்கள் மனோதத்தை நிறைவேற்றி வைக்க ஒரு சேனு பதியைப் படைக்க நானே முயலமாட்டேன்.

55. அவ்வசுரன் என்னிடமிருந்தே பாக்கியம்பெற்ற வன். ஆகையால் என்னுலேயே அவனுக்கு நாசமுண் டாவது நியாயமல்ல. நச்சுமரமானுலும் நட்டவனே அதை வெட்டுவதென்ருல் தகாத காரியமன்ரே ?

56. முன்னுளில் அவ்வசுரன் தவம்புரிந்தபொழுது தேவர்களினுல் தனக்குச் சாவு உண்டாகக் கூடாதென்று வரம் வேண்டினுன். அதே வரத்தைத்தான் நானு மவனுக் குக் கொடுத்தேன். அப்படிச் செய்யலாமா என்ருலோ இவ்வுலகத்தையே எரிக்கும் மகிமை அடைந்த அவ் வசுரன் தவத்தீயை நான் அவ்வித வரங்கொடுத்து ஒரு வாறு அவித்தேன்.

57. போரில் வெகு பயிற்சிபெற்ற அத்தாரகாசுரனைவெல்ல சிவபெருமானிடமிருந்து உதிக்கும் வித்தாலல்லது மற்றெவராலும் முடியாது.

58. அச்சிவபெருமானோ தமோ குணத்தை நீக்கி பரமாத்ம ஸ்வரூபியாய் என்னாலும் விஷ்ணுபகவானாலும் அறிந்துகொள்ளக் கூடாத அதிசய மகிமை பொருந்தியவராய் விளங்குகின்றார்.

59. அயக்காந்தத்தால் இரும்பை இழுப்பதுபோல் தவத்தால் கட்டுண்டிருக்கும் சிவபெருமான் மனத்தை உமை என்ற உருவால் நீங்கள் இழுக்க முயலுங்கள்.

60. உமை என்ற மாது சிரோமணி ஈசனுடைய தேஜஸைச் சகிக்கும் ஆற்றலுடையவள். எனது தேஜஸை வகிக்க எனது உருவமான ஜலமும் ஈசனின் தேஜஸை வகிக்கப் பார்வதியும் என்று இவ்விரு சிருஷ்டிகளும் உண்டாக்கப்பட்டன.

61. சிவபெருமானுடைய ஆத்துமாவாய் விளங்கும் அவருடைய மகன்தான் உங்களுக்குச் சேனைத்தலைவனாக வந்து தனது பாராக்கிரமத்தால் உதவிசெய்து தாரகாசுரனால் இப்பொழுது சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தேவஸ்திரீகளை விடுவிக்கப் போகின்றான்.

62. இவ்வண்ணம் தேவர்களுக்கு வாக்களித்துவிட்டு இவ்வுலகத்தை யடைந்த பிரமதேவன் மறைந்துவிட்டார். தேவர்களும் தங்கள் மனதுக்குள் இன்ன காரியம் செய்யவேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொண்டு சுவர்க்க லோகம் சேர்ந்தார்கள்.

63. இந்திர பகவானும் ஈசுவரனை வசப்படுத்துவதற்காக மன்மதனை மனத்தில் வரித்துக்கொண்டு

வேகமாகக் காரியத்தை முடிக்க அதி வேகமாக நடந்து சுவர்க்கலோகம் சேர்ந்தான்.

64. அம்மன்மதன் தேவேந்திரனால் நினைக்கப்பட்ட மாத்திரத்தில் கட்டழகிகளுடைய புருவத்துக் கொப்பான அழகான முனைகளை உடையதும் ரதிதேவியின் வளையல்கள்போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டதுமான தனது வில்லைத் தோளில் தாங்கிக்கொண்டு தனது இணைபிரியா நண்பனான வசந்தன்கையில் மாந்தளிராகின்ற தனது பாணங்களை ஒப்பித்து, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு இந்திரன் முன்பாக வந்து நின்றான்.



மன்மதன் எரிபட்டது

மூன்றாவது சருக்கம்

மதன தகனம்

1. அம்மன்மதன் வந்ததும் இந்திரன் தேவர்களைப் பார்ப்பதை விட்டு தனது ஆயிரங் கண்களாலும் மன்மதனைப் பார்க்கலானான்; தங்களை அடுத்தவர்களிடம் பிரபுக்கள் வைக்கும் ஆதரவு தாங்கள் எதிர்பார்க்கும் பிரயோஜனத்துக்குத் தகுந்தபடி ஏற்றத்தாழ்வுகள் கொண்டிருக்குமன்றோ ?

2. இந்திரன் "இங்கு உட்காருங்கள்" என்று தனது ஆஸனத்துக்கு அருகாமையில் மன்மதனுக்கு ஆஸனங் கொடுக்கவே, அவ்வாறு தனக்குத் தனது யஜமானனிடமிருந்து கிடைத்த மரியாதையை அக்காமன் தலையால் வகித்து அவரிடம் பின்வருமாறு ரகசியமாய் பேசலானான்.

3. மனிதர்களுடைய பலத்தை நன்றாய் அறிந்த இந்திரபகவானே! ஐயா, இவ்வுலகத்தில் என்னால் தங்களுக்கு என்ன உதவி நடக்கவேண்டுமென்பதைப்பற்றிக் கட்டளையிட வேண்டுகின்றேன். தங்களுடைய ஏவுதலை முடித்துவைத்தலால் நான் தாங்கள் என்னிடம் காட்டிய அனுக்கிரகத்தை விளங்கும்படி செய்துவைக்க விரும்புகிறேன்.

4. எந்த மனிதன் தங்கள் பதவியை அடைய விரும்பி அதிகமாகத் தவம் புரிந்துகொண்டு தங்களுடைய மனதிற்கு அசூயையை உண்டுபண்ணி யிருக்

கின்றான் ? இந்தக்ஷணமே நான் அவனைப் பாணம்பூட்டிய எனது வில்லின் கட்டளைக்கு உள்ளாக்கி வைக்கின்றேன்.

5. பயந்து மறுபிறப்பு என்ற துக்கத்தினின்று தன்னை விடுவித்துக்கொள்ள மோட்சமார்க்கத்தை நாடி எவன் உமக்கிஷ்டமில்லாமல் தவம் புரிகின்றான் சொல்லும். புருவங்களை வளைத்தேற்றிப் பிறகு தாழ்த்தி விசாலக்கண்களால் மருட்டி அழைக்கும் கட்டழகிகளின் பார்வைவலையில் கட்டி அவனை நான் உருட்டுகின்றேன்.

6. உமது சத்துரு சுக்கிராசாரியாரிட மிருந்து நீதி சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டவனாக விருந்தபோதிலும் அவனிடம் இன்பம் என்ற தூதனை நான் அனுப்பி, பெரும் வெள்ளம் நதியின் இருகரைகளையும் பிளப்பதுபோல் அவனுடைய அறம் பொருள் என்ற இரு பெரும் பயன்களையும் பிளந்துவிடுகின்றேன்.

7. உம்மால் ஒருபொழுதும் அணுகமுடியாத ஏக பர்த்தா விரதத்தைக் கைப்பற்றியவளாய் எந்தப் பதிவிரதை அழகால் மட்டும் சஞ்சலமான உமது மனத்துக்குள் புகுந்துஉம்மை வருத்துகின்றாள். அக்கட்டழகியைத் தனது வெட்கத்தைவிட்டு உமது கழுத்தில் தானே வலியவந்து|காடாலிங்கனம் செய்துகொள்ள நான் செய்து வைக்கின்றேன்.

8. ஐயா, காமுகரே! எந்த மடந்தை உம்மிடம் பிரணய கலகஞ் செய்து நீங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொண்ட போதிலும் கோபத்தை விடாமல் உம்மை அலட்சியம் பண்ணுகின்றாள். அவளுக்கு அதிக காமத்தீயை இப்பொழுதே மூட்டி அவளைத் தளிர்ப்படுக்கையில் படுத்துத் தவிக்கும்படி நான் இதோ செய்கின்றேன்.

9. ஐயா வீரரே! உங்களுடைய வச்சிராயுதம் சற்று சுகமாயிருக்கட்டும்; என்மேல் மனமிரங்குங்கள், தேவ சத்துருவாயிருக்கும் எவனை நான் அடக்கவேண்டும் வெளியிடுங்கள். எனது பாணத்தால் அவனுடைய புஜ பலத்தை நான் வீணாகச் செய்து, கோபத்தால் உதடுகள் துடித்துக்கொண்டு நிற்கும் மடந்தைகளையும் கண்டு அவன் நடுநடுங்கும்படி செய்து வைக்கின்றேன்.

10. தங்களுடைய அனுக்கிரகம் மட்டுமிருந்தால் எனது ஆயுதம் மலர்க்கணையா யிருந்தபோதிலும் வஸந்தன் ஒருவனை மட்டுமே எனக்குத் துணையாகக்கொண்டு, பினாகம் என்ற வில்லைக் கைப்பிடித்திருக்கும் ஈசுவரனைக் கூட தைரியத்தை இழக்கும்படி செய்யவல்லவன்; அப்படியிருக்க மற்ற வில்லாளிகள் எனக்கு ஒரு பொருட்டா?

11. இவ்வாறு காமன் சொல்லவே இந்திரன் தனது தொடைமேல் போட்டிருந்த பாதத்தை எடுத்து பாத பீடத்தின்மேல் ஊன்றி நேராக உட்கார்ந்து தான் கருதிய காரியத்தை முடித்துக்கொடுக்க சக்தி உண்டென்று ஏற்கனவே ஒருவாறு தெரிவித்த மன்மதனை நோக்கிப் பின்வருமாறு பேசலானான்.

12. என் நண்பரே! நீங்கள் சொன்ன எல்லாவித சாமர்த்திய விருதுகளும் உமக்குத் தகுமென்பது ஸந்தேகமா? எனக்கு எப்பொழுதும் உதவியாய் விளங்குவன இரண்டுவித ஆயுதங்கள்: வச்சிராயுதம் ஒன்று, தாங்கள் இரண்டு; வச்சிராயுதம் தவத்தின் பலம்படைத்த பெரியவர்களிடம் மழுங்கிவிடும். நீங்களோ எத்திசையிலும் செல்பவர்கள்; எப்பொழுதும் வீண்போகாத உபகாரமா யிருப்பவர்கள்.

13. உங்கள் வல்லமை எனக்கு நன்ருகத் தெரியும். அக்காரணத்தாலேயே நானே போய் நடத்தவேண்டிய பெருங்காரியத்திற்கு உம்மை எனக்குச் சமானமாக எண்ணி அனுப்புகின்றேன். பூபாரத்தை ஆதிசேஷன் தன்னைப்போல் வகிக்கவல்லன் என்றறிந்தல்லவோ கிருஷ்ணபகவான், அவரை அத்தொழில் செய்யும்படி நியமித்திருக்கிருர் !

14. சிவபெருமான்மேல் அம்பு எய்ய முடியும் என்று நீங்கள் சொன்னதுமே எங்கள் காரியம் கைகூடிவிட்டதாக நாங்கள் நினைத்துவிட்டோம். பெரிய சத்துருவிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் தேவர்களுடைய வேண்டுகோளும் இதுவே என்று கருதிக்கொள்ளும்.

15. ஈசனுர் ஈன்றெடுக்கும் குமாரனைத் தங்கள் சேனதிபதியாய் அடைந்து தங்கள் சத்துருவை வெற்றிகொள்ள தேவர்கள் விரும்புகின்ருர்கள். எல்லாவித மந்திரங்களுக்கு மிருப்பிடமாய் நிஜதத்துவத்தில் மூழ்கி நிற்கும் அவ்வீசனேயும் கலக்க உமது ஒரேபாணம் போதுமன்ருே ?

16. ஐம்புலன்களையும் அடக்கியிருக்கும் அச்சிவபெருமானுக்கு மகா பரிசுத்தமுள்ளவளான பார்வதியிடம் மோகமுண்டாகும்படி செய்ய நீங்கள் முயலவேண்டும். மடந்தைகளுக்குள் ஈசனுக்குத் தகுந்த மடந்தை அவள் ஒருத்திதான் என்று பிரமதேவர் சொல்லிவிட்டார்.

17. இமயமலைத் தாழ்வரையில் தவம்புரியும் ஈசனுக்குப் பார்வதி தனது தந்தையின் கட்டளைப்படி பணிவிடை செய்து வருகின்ருள் என்ற சமாசாரம் நான்

அப்ஸர கணங்களிடமிருந்து கேள்விப்பட்டேன். அக் கணமெல்லாம் எனது தூதர்களன்றோ?

18. ஆகையால் எங்கள் காரியத்தை முடித்துவைக்க நீங்கள் உடனே புறப்படுங்கள். தேவகாரியமிது என்றாலும் வேறொரு காரியத்தைக் கொண்டே முடிவு பெறவேண்டியதா யிருக்கின்றது. விதைத்த விதை தான் முளைகாணும்முன் ஜலத்தை எதிர்பார்த்து நிற்பது போல் இக்காரியமும் உமது உதவியையே முக்கிய காரணமாய் எதிர்பார்த்து நிற்கின்றது.

19. தேவர்கள் வெற்றியடைதற்கு மூலகாரணமா யிருக்கும் ஈசனிடம் அம்பு செலுத்தும் வல்லமை உமக்கு ஒருவருக்கேயன்றோ இருக்கின்றது? உம்மைவிட பாக்கிய சாலி வேறுண்டா? மற்றவர்களால் செய்யமுடியாத சாதாரண காரியமுங்கூட அதைச் செய்து முடிப்பவனுக்குப் புகழை விளைவிக்கின்றது. (சிவபெருமானிடம் அம்பெய்யும் இப்பெருங்காரியம் உமக்குப் புகழை விளைவிக்கும் என்பதில் சந்தேகமும் உண்டோ?)

20. இப்பொழுது உம்மை யாசிப்பவர்களோ இங்கு ஒருங்கு கூடியிருக்கும் எல்லாத் தேவர்களும்; நீங்கள் செய்யப்போகின்ற காரியமோ இம்மூவுலகங்களுக்கும் நன்மை பயப்பது; அக்காரியத்தையோ நீங்கள் ஒரே பாணத்தால் நிறைவேற்றப் போகின்றீர்கள். அப்பாணத்தால் தேகத்தில் ஏதாவது காயம் உண்டாகுமென்ற பயமோ இல்லை. ஆச்சரியம்! ஆச்சரியம்!! உமது வல்லமை தங்களுக்கு மிருக்கக்கூடாதா என்று எல்லாரும் ஆசைகொள்ளும் வல்லமையாக விருக்கிறது.

21. ஐயா காமனே! வஸந்தன் எப்பொழுதும் உம்முடன் கூடவே யிருப்பவராகையால் நீங்களும் உதவி செய்ய வேண்டுமென்று நான் அவருக்கு உபசாரம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் உமக்கு எப்பொழுதும் உதவி செய்பவரே. நெருப்புக்கு உதவி செய்யவேண்டுமென்று காற்றை யாராவது வேண்டிக்கொள்வதுமுண்டா?

22. மன்மதன் அப்படியே ஆகட்டுமென்று இந்திரனுடைய கட்டளையை யஜமானன் கொடுத்த மாலையைச் சிரஸால் வகிப்பதுபோல் வகித்தவனாய் அவ்விடம் விட்டுப் புறப்பட்டான். ஐராவதத்தை ஒட்டி ஒட்டிக் காய்த்திருந்த தனது கையால் இந்திரனும் அம்மன்மதனைத் தட்டிக்கொடுத்து வழியனுப்பினான்.

23. அன்பான தோழன் வசந்தனும் தனது மனைவி ரதிதேவியும் அஞ்சின மனத்துடன் பின்தொடர மன்மதன் தனது தேகம் நாசமாய்ப் போனபோதிலும் தேவர்கள் காரியம் எப்படியாவது நிறைவேறினாற் போதுமென்று கருதினவனாய், ஈசன் தவம்புரியும் இமயமலையின் ஆச்சிரமத்தை நோக்கிப் புறப்பட்டான்.

24. அந்தச் சிவபெருமான் ஆச்சிரமத்தில் தவம் புரியும் முனிகளுடைய தவத்துக்கு இடையூறாய், மன்மதனுக்கு மிகவும் உபகாரமாய், வந்த வஸந்தன் தனது உருவத்துடன் பிரகாசித்துக்கொண்டு சோபிக்கலானான்.

வஸந்தகால வருணனை

25. காலமல்லாத காலத்தில் சூரியபகவான் வடதிசையை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கவே தென்திசை என்ற மாதுசிரோமணி தனது நாயகன் தன்னை விட்டுப்

பிரிந்த துக்கத்தால் பெருமூச்சு விடுவதுபோல் வாஸனை யோடுகூடிய தென்றற்காற்றைத் தனது முகத்தால் வெளி விடலானுள்.

26. அசோகமரம் அடிமுதல் தளிருடன் மல ரெடுக்கத் தொடங்கிற்று. சலங்கை ஒலிக்கும் நூபுரங் களணிந்த கட்டழகிகளின் கால்களால் உதைக்கப்பட்டுத் தான் மலர் கொடுக்கவேண்டுமென்று அவைகள் காத்துக் கொண்டிருக்கவில்லை. *

27. மன்மதனுக்குப் பாணங்களைச் செய்து கொடுக் கும் வஸந்தன் (என்ற கருமான்) அப்பாணங்களாகின்ற உடல்களுக்கு இரண்டு பக்கங்களிலேயும் கட்டப்பட்ட இறகுகள்போல் விளங்கும் இளந்தளிர்களை அமைத்து முடித்து மன்மதனுடைய பெயரின் எழுத்துகளை அப் பாணங்களின்மேல் பொறிப்பதுபோல் அம்மலர்களின் மேல் வண்டுகளை உட்காரவைத்தான்.

28. கருணிகார மலர் பலவித உயர்ந்த நிறங்களுடன் கூடி விளங்கியபோதிலும் வாஸனையற்றதாக விருந்ததால் பார்ப்பவர்கள் மனத்தை அது வருத்திற்று. பெரும் பாலும் பிரமதேவனுடைய முயற்சி எல்லாவித உத்தம

---

* அசோகமரங்கள் புஷ்பிக்காவிடில் உத்தமிகள் தண்டை களணிந்த கால்களால் உதைத்தால் அவைகள் புஷ்பிக்கும் என் பது ஓர்விதக் கொள்கை. அவ்வாறே மகிழமரம் மடந்தைகள் தங்கள் வாயில் கள்ளை ஊற்றிக்கொண்டு அம்மரங்கள் மேல் உமிழ்ந்தால் புஷ்பிக்கின்றன வென்பதும், உத்தமிகளால் பார்க்கப்பட்ட மாத்திரத்தில் மருதனை மலர்கின்ற தென்பதும், கட்டிக்கொண்ட மாத்திரத்தில் திலகம் என்ற மரம் மலர்கின்ற தென்பதும் கொள்கை.

குணங்களையும் ஓரிடத்திலேயே சேர்த்துவைக்கும் கருத் தற்றதன்றோ ?

29. நன்ருக மலராதபடியால் இளஞ்சந்திரன்போல் வளைந்து வெகு சிவப்பாய் விளங்கிய பலாசமுகைகள் அப்பொழுதுதான் வஸந்தன் என்ற நாயகனுடன் காத லிற் கலந்த வனதேவதையின் மார்பின்மேல் காணப்படும் நகக்குறிகள்போல் சோபித்தன.

30. வஸந்த லட்சுமி வண்டுகளின் வரிசைகள் படிந்து அழகாய்க்காணும் திலகமலரையே தனது முகத் துக்கு ஒரு திலகமாக அணிந்து மாந்தளிராகிய தனது உதட்டை இளஞ் சூரியகாந்தியாகின்ற சிவப்பினல் அலங்கரித்துக் கொள்ளலானுள்.

31. கொன்றைமலர்க் கொத்துகளினின்று உதிரும் பூந்தாதுகளால் தங்கள் பார்வை மறைக்கப்பட்டவைக ளாய் காற்றுக்கெதிராக மர்மர சத்தத்துடன் சருகுகள் உதிரும் வனத்தில் மான்கள் மதத்துடன் சஞ்சரிக்கலா யின. *

32. மாந்தளிர்களைப் புசித்த காரணத்தால் வெகு மதுரமான குரலுடன் ஆண்குயில்கள் கூவினது தங்கள் கணவர்களிடம் ஊடல்கொண்டிருந்த மடந்தைகளுக்கு ஊடல் தவிர்க்கும்படி மன்மதன் இட்ட கட்டளையாய் விளங்கிற்று.

33. பனிநீங்கிய காரணத்தால் வெடிப்பற்ற உதடு களை உடையவர்களும் குங்குமம் தரிக்காத காரணத்தால் நன்ருக வெளுத்த முகமுடையவர்களுமான அப்ஸர

* எவ்வளவோ ஸங்கடங்களிருந்தும் மதத்தின் மிகுதி யால் மான்கள் அவ்வாறு சஞ்சரித்தன என்றபடி.

மடந்தைகளுக்கு அவர்கள் பச்சை குத்திக்கொண்டிருந்த இடங்களில் வேர்வை தோன்றலாயிற்று.

34. சிவபெருமானுடைய தபோவனத்திலிருந்த முனிவர்கள், இவ்வாறு காலமல்லாத காலத்தில் வஸந்தன் தோன்றியதைக் கண்டு, தங்களுடைய மனோவிகாரங்களை ஒருவாறு அடக்கிக்கொண்டு தங்கள் சித்தத்தை நிலைநிறுத்த வெகு சிரமப்பட்டார்கள்.

35. அன்றியும் அவ்விடத்தில் மன்மதன் தன் தோளில் வில்லைத் தாங்கிக்கொண்டு ரதியுடன்கூட வரவே ஸ்தாவர ஜங்கமங்கள் எல்லாம் அதிக அன்பின் ரஸத்தோடுகூடிய சிருங்கார சேஷ்டையைச் செய்கைகளால் வெளியிடலாயின.

சிருங்கார சேஷ்டைகள்

36. வண்டுகள் மலர்களாகின்ற ஒரே பாத்திரத்தினின்று தேனைத் தங்கள் நாயகிகளுடன் அவர்கள் குடித்தபின் குடிக்கலாயின. கிருஷ்ணஸார மான் தங்கள் பேடுகளை அவைகள் ஸ்பர்ச ஸுகத்தால் கண்களை ஆனந்தமாக மூடிக்கொண்டு ஸந்தோஷிக்கும்படி தங்கள் கொம்புகளால் சொரிந்து கொடுக்கலாயின.

37. தாமரைத்தாதின் மணம்வீசும் உமிழ்ஜலத்தைப் பெண் யானையானது அதிக அன்புடன் ஆண் யானைக்குத் தன் துதிக்கையால் கொடுக்கலாயிற்று; சக்கிரவாகப்புள் தான் பாதி புசித்து மிகுந்துநின்ற தாமரைத் தண்டைப் புசிக்கும்படி தனது நாயகியிடம் கொடுக்கலாயிற்று.

38. சிரமத்தால் தோன்றிய வியர்வைத் திவலைகளால் தங்கள் பச்சிலைப் பொட்டுகள் கொஞ்சம் கலைய

மலர்மது உண்டு கண்கள் சுழல விளங்கும் தன் காதலி யின் முகத்தைக் கிம்புருஷன் அவள் பாடி ஓய்ந்ததும் முத்தமிட்டுக்கொள்ளலானுன்.

39. நன்ருக மலர் நிரம்பிய பூங்கொத்துக்களே ஸ்தனங்களாகவும், பிரகாசிக்கும் இளந்தளிர்களே மனோ கரமான உதடுகளாகவும் பெற்று அழகான மடந்தைகள் போல் விளங்கும் கொடிகளே வளைந்த தங்கள் கிளேகளா கின்ற கைகளால் மரங்களும் தழுவிக்கொள்ளலாயின.

40. அவ்வண்ணம் வசந்தன் விளங்கிய காலத்தில் அப்சரகானம் இடைவிடாமல் காதில் விழுந்துகொண்டே யிருந்தபோதிலும் ஈசன் தனது தவத்திலேயே முற்றி லும் ஆழ்ந்தியவராகவே யிருந்தார். ஐம்புலன்களேயும் அடக்கியாளும் துறவிகளுக்கு இவ்விதமான இடையூறு கள் தவத்தைக் கெடுக்கும் வலிமையுள்ளவைக ளாகா வன்ருே!

41. அச்சமயத்தில் நந்திகேசுரரும் தனது இடது கையில் பொற்பிரம்புபிடித்து ஒருவிரலேத் தனது மூக்கின் நுனியில் வைத்து, சிவபெருமான் கொடிவீட்டு வாயி லில் நின்றுகொண்டு பிரமதகணங்களே நோக்கி "சபலம் வேண்டாம்" என்று கட்டளேயிடலானுர்.

42. அவ்வாறு அவர் கட்டளேயிட்டதும் மரங்கள் அசைவற்றும் வண்டுகள் ஒலியற்றும் பறவைகள் கூச்ச லற்றும் மிருகங்கள் சஞ்சாரமற்றும் அக்காடு முழுவதும் சித்திரத்தில் எழுதப்பட்ட காடுபோல் சலனமே யில்லா மல் விளங்கலாயிற்று.

43. ஓர் ஊருக்குப் பிரயாணம் புறப்படுகின்றவன் தான் போகும் திசையில் சுக்கிரன் இருக்கக்கண்டால் அத்

திசையை நேர் நோக்கிச் செல்லாமல் வேறு திசை வழியே சுற்றிச்செல்வதுபோல மன்மதனும் ஈசனுக்கு எதிராகப் போவதைவிட்டு அச்சிவபெருமானுடைய பக்கங்களில் தேவதாருப் புதரடர்ந்து விளங்கும் இடத்தை நாடி அவருடைய தபோவனத்தில் நுழைந்தான்.

44. தனது சரீரத்தை ஒழிக்க வெகு ஸமீபகாலத்தை முன்னிட்டு நின்ற அந்த மன்மதன் தேவதாரு மரங்களின் கீழ் ஓர் திட்டாணியின்மேல் புலித்தோல் விரித்து தவத்தில் ஆழ்ந்தி அம்முக்கண்ணன் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

தவத்திலிருந்த சிவபெருமானுடைய வருணனை

45. வீராஸனமிட்டு நிஷ்டையிலுட்கார்ந்த காரணத்தால் தமது முன்தேகம் அசைவற்று நேராக நிமிர்ந்து கொஞ்சம் வளைந்து விளங்கிய இரு தோள்கள் எடுத்துக் காட்ட, தமது இரு உள்ளங்கைகளையும் மலர்த்தி ஒன்றின்மேலொன்றாய்த் தனது மடியில் தாமரைமலர் பூத்ததுபோல் விளங்க வைத்துக்கொண்டு சிவபெருமான் தவம் புரிந்தார்.

46. தமது ஜடாஸமூகத்தை மேல்தூக்கி, புஜங்களில் கட்டித் தமது காதுகளில் இருமடிப்பாக உருத்திராக்ஷமாலை தரித்து, தமது கழுத்தண்டை முடிபோடப்பட்ட காரணத்தால் அதிகக் கருப்பாக விளங்கும் கருப்பு மான்தோலை மேல் போர்த்தியவராய் சிவபெருமான் தவம் புரிந்தார்.

47. புருவங்களின் அசைவு சிறிதேனுமின்றி ஒளி முழுமையும் கீழ்நோக்கிப் பாயத் தமது மூக்கின் முனை

யையே கொஞ்சம் பிரகாசித்துக்கொண்டு அசைவற்றவைகளாயும் வெகு உக்கிரமுள்ளவைகளாயும் காணப்பட்ட கருவிழிகளை உடைய கண்களினுல் குறியாகப் பார்த்துக்கொண்டு சிவபெருமான் தவம் புரிந்தார்.

48. தமது தேகத்துக்குள் புகுந்து சஞ்சரிக்கும் பிராணுபான முதலிய வாயுக்களையெல்லாம் அடக்கிய காரணத்தால் மழையின் குழப்பத்துக்கு முந்தி சஞ்சலமற்று விளங்கும் மேகம்போலும் அலைகள் ஓய்ந்துநிற்கும் குளம்போலும் காற்றற்றவிடத்தில் அசைவற்று எரியும் விளக்குப்போலும் ஈசனுர் விளங்கினுர்.

49. பிரமகபாலக் கண்ணினின்று மேற்கிளம்பிய சோதியால் தாமரைத்தண்டு நூலினும் மேன்மையாய் விளங்கும் இளம் சந்திர கலையின் அழகை வாடும்படி செய்துகொண்டு சிவபெருமான் தவம்புரிந்தார்.

50. ஒன்பது வாயில்களையும் கட்டி மனதின் சஞ்சாரத்தை அடக்கி சமாதியினுல் வசமாக்கிக்கொண்ட அழிவற்ற ஆத்மாவென்று பெரியோர்கள் முறையிடும் தமது ஆத்துமாவைத் தம்மிடத்திலேயே கண்ணுற்றுக்கொண்டு சிவபெருமான் தவம்புரியலானுர்.

51. அவ்வாறு தவம்புரிந்துகொண்டு மனத்தால் கூட அணுக முடியாதவராய் விளங்கிய அச்சிவபெருமானை மன்மதன் சமீபத்தில் கண்டதும் பயத்தால் மெய் பதறி தனது கையைவிட்டு நழுவி விழுந்த பாணத்தையும் வில்லையுங்கூடக் கவனியாதவனுய் நடுங்கலானுன்.

52. அவ்வாறு அழிந்த அவன் பலத்தைத் தனது மேனியின் அழகால் மறுபடி மூடிவைப்பவள்போல் அச்

சமயத்தில் பார்வதி வனதேவதைகளால் தொடரப்பட்டு அவ்விடம் வந்து தோன்றினுள்.

53. பதுமராக மணியின் அழகைத் தமது அழகால் விலக்கிய அசோக மலர்களேயும், பொன்னின் ஒளியைத் தமது ஒளியால் வென்ற கர்ணிகாரமலர்களேயும், முத்துக்களின் மாலேபோல் விளங்கிய ஸிந்துவாரமலர் மாலேயையும் இன்னும் வஸந்த காலத்தில் மலர்ந்த மலர்களேயே தனது ஆபரணங்களாய் அணிந்து அவ்வம்மணி வந்தாள்.

54. தனது ஸ்தனபாரத்தால் கொஞ்சம் வளேந்தவளாய், இளஞ்சூரியன் காந்திக்கொப்பான காந்தியுடன் சோபித்த வஸ்திரமுடுத்தி, அவ்வுத்தமி நன்ருக மலர் நிரம்பிய பூங்கொத்தால் வளேந்து இளந்தளிர் எடுத்து நடமாடும் கொடிபோலும் காணலானுள்.

55. வைக்கத்தகுந்த இடமறிந்து மன்மதனுல் தனது வில்லுக்கு இரண்டாவது நாண்போல் சேமித்து வைக்கப்பட்டு சோபித்துக்கொண்டிருந்த மகிழமலர் மாலேயாகின்ற ஒட்டியாணத்தை அது தனது இடையை விட்டு நழுவும் பொழுதெல்லாம் தனது கையால் பற்றிக்கொண்டு அப்பார்வதி வந்துகொண்டிருந்தாள்.

56. மணம்வீசும் தனது முகக்கள்ளேக் குடிக்க ஆசையுடன் வந்து தனது உதட்டி னருகாமையில் பறந்துகொண்டிருக்கும் வண்டுகளே, வெருண்ட கண்களுடன் அடிக்கடி அவ்வுத்தமி விளேயாட்டாகத் தான் தனது கையில் பிடித்துக்கொண்டு வந்த தாமரைமலரால் ஓட்டிக்கொண்டே வந்தாள்.

57. ஓர் அவயவத்திலாவது கொஞ்சமேனும் ஊனமின்றி விளங்கிக்கொண்டும் இரதீதேவிக்கும் வெட்கத்தை

உண்டுபண்ணிக்கொண்டும் நின்ற அம்மாதரசியை மன் மதன் பார்த்ததும், சிவபெருமான் ஐம்புலன்களையும் எத் தனைதான் அடக்கினவர் என்றிருந்த போதிலும், தனது காரியம் முடிவுபெற்றது என்று எண்ணலானான்.

58. உமையும் தனக்கு இனிமேல் கணவராகப் போகும் சம்புவின் இருப்பிடத்தின் வாயிலில் வந்து நின் றாள். அக்கணத்தில் சிவபெருமானும் தமக்குள் பரமாத் மாவை யோகக்கண்ணால் கண்டுவிட்டு தமது நிஷ்டையை முடித்தார்.

59. அதுவரையில் பாதாள உலகத்தில் வெகு சிர மப்பட்டு மூச்சுபிடித்துத் தனது படத்தின்மேல் பூமி யைத் தூக்கிக்கொண்டு நின்ற ஆதிசேஷன் கொஞ்ச மிளைப்பாற ஈசன் மெதுவாகத்தமது மூச்சை வெளி விட்டு வீராஸனத்தைக் கலைத்து உட்காரலானார்.

60. அப்பொழுது நந்திகேசுவரன் அவரிடம் வந்து வணங்கி பார்வதி பணிவிடை செய்ய வந்திருப்பதாகத் தெரிவித்தான். அவர் புருவத்தை யசைத்ததால் யஜ மானுடைய உத்தரவாயிற்றென்பதை அறிந்துகொண்டு அப்பார்வதியை உள்ளே போகவிட்டான்.

61. பார்வதி தான் நமஸ்காரம் பண்ணுவதற்கு முந்தி தனது தோழிகள் தங்கள் கைகளால் கொய்து கொண்டுவந்திருந்த வஸந்தகாலத்திய மலர்களை இடையே தளிர்களும் கலந்துநிற்க தனது கைகளால் எடுத்து ஈச னுடைய திருவடிகளில் இறைத்தாள்.

62. உமையும் தனது கருங்கூந்தல் நடுவில் விளங் கிய வகிர் சோபிக்கவும் கொண்டையில் அணிந்திருந்த கர்ணிகார மலர் நழுவவும் காதில் வைத்திருந்த தளிர்கள்

சிதறவும் தலையை வணங்கி ஈசுவரன் முன்பாக நமஸ்காரம் பண்ணினாள்.

63. "மற்றுமொரு மடந்தையை நாடாத கணவனை நீ அடைவாயாக" என்று அவள் உண்மையாகவே ஈசுவரனால் ஆசீர்வசனம் சொல்லப் பெற்றாள். ஈசனார் சொன்ன சொல் இவ்வுலகத்தில் எங்கேயாவது பொய்யாய்ப் போனதுமுண்டா?

64. மன்மதனும் அதுதான் தனது பாணத்தைப் பிரயோகிப்பதற்கு ஏற்ற தருணம் என்று அந்துபோல் நெருப்பைப் பார்த்தவனாய் உமையின் முன்பாகச் சிவனைக் குறிப்பிட்டுத் தனது வில்லின் நாணை அடிக்கடி மீட்டலானான்.

65. பிறகு பார்வதி தாமரைபோல் சிவந்திருந்த தனது கையால், சூரியபகவானுடைய கிரணங்களால் புலர்த்தப்பட்ட ஆகாசகங்கையின் தாமரைமணிமாலையை, தவசியாயிருந்த சிவபெருமானுக்குக் கொடுக்கலானாள்.

66. பணிவிடை செய்கிறவர்களிடம் தாம் எப்பொழுதும் பாராட்டிவரும் அன்பினால் அம்முக்கண்ணனும் அம்மாலையைத் தமது கையை நீட்டி வாங்கலானார். மலர்க்கணையோனும் ஒருபொழுதும் வீண்போகாத ஸம்மோகனம் என்ற கணையைத் தனது வில்லில் பூட்டிவிட்டான்.

67. சந்திரன் உதயமாகும் காலத்தில் சமுத்திரம் கொஞ்சம் கரைகடப்பதுபோல் ஈசுவரனும் கொஞ்சம் மனோதிடம் இழந்தவராய், கோவைப் பழம்போலச் சிவந்த உதட்டுடன் விளங்கும் உமையின் முகத்தைத் தமது மூன்று கண்களாலும் !பார்க்கலானார்.

68. பார்வதியும் மலர் எடுத்த இளம் கதம்பமரம் போல் விளங்கும் தனது மேனியால் காதலைக் காட்டுகின்ற வளாய் வெட்கத்தால் பதைத்த கண்கள் அமைந்த அழகான முகத்துடன் நாணி நின்றாள்.

69. அம்முக்கண்ணரோ ஐம்புலன்களையும் ஏற்கனவே அடக்கினவராகையால் அவ்வாறு கலங்கிய ஆறும்புலனாகிய தம்மனத்தையும் வெகு உறுதியுடன் அடக்கித் தமது மனம் அவ்வாறு விகாரப்பட்டதற்குக் காரணத்தை அறிந்துகொள்ளத் தமது கண்ணைத் திறந்து தம்மைச் சுற்றி நாற்புறங்களிலும் பார்த்தார்.

70. தனது வலக்கடைக்கண்ணண்டை பிடிபிடித்தவனாய், தோள்வளைத்து, இடக்கால் குந்தி உட்கார்ந்து, தனதுவில்லை ஒருசக்கரம்போல முற்றிலும் நாணிழுத்துத் தம்மைக் குறிப்பிட்டுப் பாணம்போட மன்மதன் உட்கார்ந்திருந்ததைக் கண்டார்.

71. தமது தவத்தைக் குலைக்கவந்த காரணத்தால் கோபம் பொங்க புருவங்களை நெறித்துக்கொண்டு பார்க்கச் சகிக்காத கடுமையுள்ள முகத்தை அமைத்துக் கொண்டு விளங்கிய ஈசனார் மூன்றாவது கண்ணினின்று ஒருநொடியில் மின்னிக்கொண்டு ஒருநெருப்பின் பொறி கிளம்பிற்று.

72. ஆகாயத்தில் தேவர்கள் எல்லாரும் "ஸ்வாமி! கோபத்தை அடக்குங்கள். அடக்குங்கள்" என்று கதறிக்கொண்டிருக்கும்பொழுதே சிவனார் கண்ணினின்று உண்டான அந்நெருப்பு மன்மதன் தேகத்தின் சாம்பலே மிகுந்து நிற்கும்படி எரித்துவிட்டது.

73. தாங்கமுடியாத அவமானம் வந்த காரணத்தால் இந்திரிய வியாபாரங்கள் ஸ்தம்பித்துப்போய் மூர்ச்சை யடைந்த ரதிதேவி ஒரு முகூர்த்தகாலம் தனது கணவன் போன துக்கம் அறியாதவளாய் சிவபெருமானுல் அது வரையில் அனுக்கிரகம் செய்யப்பட்டவள்போ லானுள்.

74. ஒரு இடியானது பெரும் விருக்ஷத்தை முறித் தெறிவதுபோலத் தமது தவத்துக்கு வந்த இடை யூற்றை ஈசனவ்வாறு முறித்து மாதர் ஸமூகத்தைவிட்டு நீங்க விரும்பி தமது பூதகணங்களுடன் மறைந்தார்.

75. பார்வதியும் தனது தந்தை கொண்டிருந்த மேலான எண்ணமும் தனது மேனியின் அழகும் வீணு னவேயென்று எண்ணிக்கொண்டு, தனது தோழிமார்கள் கண்ணெதிரில் அவ்விதஅவமானம் தனக்கு உண்டா னமையால் அதிக வெட்கப்பட்டவளாய் உத்ஸாகமற்ற வளாய் வெகு மனவருத்தமுற்று தனது தந்தைவீட்டை நோக்கித் திரும்பினுள்.

76. ஈசனுர் செய்த கோலாகலத்தால் பயந்து தன் னைக்கண்டதும் கண்களை மூடித் திகைத்து நின்றுவிட்ட தனது பெண்ணினிடம் இமவான் மனமிரங்கி, அவ ளைத் தனது கைகளால் தூக்கிக்கொண்டு, தனது இரு தந்தங்களின்மேலும் விழுந்திருக்கும் தாமரைத்தண்டை ஐராவதம் தூக்கிக்கொண்டு போவதுபோல் விளங்கிக் கொண்டு, வேகமாய்ச் செல்லும் பொருட்டுத் தன் தேகத் தை நீட்டிக்கொண்டவனுய் இமவான் தான் சாதாரண மாய்ப்போகும்வழியைவிட்டு விலகி வேறு வழியாய்த்தன் மாளிகையை நோக்கிச் சென்றுன்.

நான்காவது சருக்கம்

ரதிவிலாபம்


1. சோகமுற்று விழுந்திருந்த ரதிதேவி, தாங்கமுடியாத வேதனையை உண்டுபண்ணும் புதுவைதவ்யம் நேர்ந்ததை அறிவிப்பதற்காக விதியினுல் எழுப்பப்பட்டவள் போல், மூர்ச்சை தெளிந்து ஒன்றுந் தோன்ருதவளாய் எழுந்துட்கார்ந்தாள்.

2. மூர்ச்சை தெளிந்தவுடன் அவள் தன் கண்களைத் திறந்து தனக்கு எந்தப் பொருள் முக்கியமோ அதைத்தேடிப் பார்க்கலானுள். எப்பொழுதும் ஆவலே அடங்காமல் அவைகள் பார்த்துக்கொண்டிருக்கும் பொருள் இனி ஒருபொழுதும் காணக்கூடாதவண்ணம் அழிந்துபோனதை அவைகள் அறிந்து கொள்ளவில்லே.

3. "என் பிராணநாதா! நீங்கள் உயிருடனிருக்கின்றீர்களா" என்று சொல்லிக்கொண்டே அவள் எழுந்திருந்தபொழுது அவள் தன் முன்பாக சிவபெருமானுடைய கோபத்தீயே ஒரு புருஷ உருவான சாம்பர்ப் பதுமையாய் நிற்கக் கண்டாள்.

4. அவ்வாறிருக்கக் கண்டதும் அவள் மறுபடியும் மனஞ்சோர்ந்து மண்ணில் புரண்டு கூந்தலே அவிழ்த்துக் கொண்டு தன்னுடன் கூட அக்காட்டையே புலம்பச் செய்கின்றவள்போல் கதறிப் புலம்பலானுள்.

5. "ஐயா, விலாஸ புருஷர்களுக்கு உவமை எடுத்துக்காட்ட அழகால் ஒப்பிடப்படும் உமது உருவம் இவ்



இரதியின் புலம்பல்

வாறான கதியை அடைந்திருக்கின்றதே. அதைக் கண்டும் நானோ அங்கங்குலையாமல் அப்படியே யிருக்கின்றேனே! மடந்தைகள் கடினசித்தமுள்ளவர்கள் என்று சொல்ல இதைவிட வேறு திருஷ்டாந்தமும் வேண்டுமோ?

6. "உம்மையே நம்பி உயிர்வைத்திருந்த என்னை அகலவிட்டு, தண்ணீரையே நம்பி உயிர் தரித்திருக்கும் தாமரையைவிட்டுக் கரை உடைந்ததும் தண்ணீர் ஓடிவிடுவதுபோல, ஒரு நிமிஷத்தில் என்மேல் நீங்கள் வைத்திருந்த அன்பவ்வளவையும் மறந்து எங்கு ஓடிவிட்டீர்கள்?

7. "தாங்கள் எனக்கு ஒருபொழுதும் மனக்கோணலாய் நடந்துகொள்ளவேயில்லை. நானும் தங்களுக்கு ஒருபொழுதும் இடையூறாக நடக்கவேயில்லையே. அப்படியிருக்க எனிப்பொழுது அழுது நிற்கும் எனக்கு ஒரு காரணமு மில்லாமல் நீங்கள் தரிசனம் கொடுக்கமாட்டேன் என்கின்றீர்கள்?

8. "என் பிராணநாதரே! நீங்கள் வேறு மடந்தைகளை நினைத்துத் தூக்கத்தில் பிதற்றும்பொழுது நான் எனது ஒட்டியாணக்கயிற்றால் அடித்ததையும், மலர்களை உங்கள்மேல் எறிந்தபொழுது அவைகளின் தாது உங்கள் கண்களில் விழுந்து அவைகளைக் கலக்கினதையும், நான் காதணியாய் அணிந்துகொண்டிருந்த மலர்களால் உம்மை நான் அடித்ததையும் நீங்கள் மனத்தில் எண்ணிக்கொண்டு எனக்குத் தரிசனம் கொடுக்காம லிருக்கின்றீர்களா என்ன?

9. "'அடி ரதி! நீ என் உள்ளத்தில் வஸிக்கின்றாய்' என்று என்னைப்பார்த்து நீங்கள் அன்பாகச் சொன்ன வார்த்தைகள் அவ்வளவும் பொய்யான வார்த்தைகள் என்

பது இப்பொழுதுதான் தெரிந்தது. அவைகள் உபசார வார்த்தைகளாய் இல்லாவிடில் நீங்களிப்பொழுது தேகமே யில்லாமலிருக்க எனக்கு மட்டும் ஒரு சிறு காயங்கூட இல்லாமலிருப்பது எப்படி நியாயமாகும்.

10. "மற்றொரு உலகத்துக்குப் புதிதாகப் போயி ருக்கும் உங்கள் வழியைப் பற்றிக்கொண்டு நானும் இதோ வந்து உங்களிடம் அகத்தியம் சேருகின்றேன். எனக்கு ஒன்றும் அதிக நஷ்டம் வரவில்லை. அந்தோ! விதி இவ்வுலகத்தையே யன்றோ மோசஞ்செய்துவிட்டது. ஏனெனில் உடம்பைப் படைத்த எல்லாருக்கும் ஸுகம் என்பது உங்களாலல்லவா இதுவரையி லிருந்தது.

11. "காரிருள் மண்டிய இரவில் முற்றிலும் மறைக் கப்பட்ட பட்டினத்தெருக்கள் வழியாய், கார்மேகம் கர்ச் சித்துப் பயத்தை உண்டாக்கும் நிசியிலும் நாயகர்களைத் தங்கள் நாயகிகள் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வல்லமை உங்களுக்கல்லவோ இருந்தது. இனி யாரா லவ்வாறு செய்யமுடியும்?

12. "சிவப்பான கண்களைச் சுழற்றிக்கொண்டும் சொல்லுக்குச் சொல் பேச்சைக் குளிரப் பண்ணிக்கொண் டும் விளங்கும் மதுவின் மதம் என்பது மடந்தைகளுக்கு இனி நீங்களில்லாத வரையில் வீணாக ஏற்பட்டதாயிற்று அன்றோ?

13. "ஐயா சரீரமற்றவரே! அன்பான உறவாகிய தங்களுடைய தேகம் இருந்தது கதையாக விடிந்ததை சந்திரன் தெரிந்துகொண்டு இனி தனது உதயம் பயனற் றது என்று கருதி கிருஷ்ணபட்சம் போனபோதிலும்

தான் மெலிந்துபோன துக்கத்தை வெகு சிரமத்துடன் ஒழிக்கப்போகின்றான்.*

14. " கொஞ்சம் பசுமையாயும் கொஞ்சம் சிவப்பாயு மிருக்கும் காம்பை உடையதும், மதுரமாய்க் கூவும் ஆண் கோகிலத்தின் சத்தத்தால் தனது வரவை வெளிப் படுத்துகின்றதுமான புதிதாய்த் தோன்றிய மாமலர் இனி யாருடைய பாணமாய் விளங்கப் போகின்றது சொல்லுங்கள் ?

15. " வண்டுகளின் வரிசைகளை நீங்கள் அநேகந் தடவைகளில் உங்களுடைய வில்லின் நாணாக உபயோகித் திருக்கின்றீர்கள். தாங்க முடியாத துக்கத்தால் நான் புலம்பும்பொழுது அவ்வண்டு வரிசைகளும் என்னுடன் கூட தங்களுடைய பரிதாபகரமான குரலால் புலம்பு கின்றனபோல விளங்குகின்றன.

16. "மறுபடி தாங்கள் தங்களுடைய மனோகரமான தேகத்தை அடைந்து எழுந்துட்கார்ந்துகொண்டு மதுர மாய்ப் பேசுவதில் இயற்கையாகவே வெகு சாமர்த்திய முள்ளவைகளான கோகிலங்களைக் காதல் விஷயத்தில் தூதர்களாக அனுப்புங்கள்.

17. "தலையால்வணங்கித் தாங்கள் மெய்பதற ஆலிங் கனத்தை வேண்டிக்கொண்டதையும் இன்னும் ரகசியத் தில் நம்மிருவருக்குள்ளும் நடந்த அனேக லீலைகளையும் நினைக்க நினைக்க எனக்குத் துக்கம் அடங்கவில்லையே.

18. "ரதியில் வல்லவரே, நீங்களே உங்கள் கைகளால்

---

* இனி தான் வளருவதால் பயன் என்ன என்று கரு தியபடி.

என் மேனியில் அணிவித்த வசந்தகாலத்து மலர்கள் அப்படியே யிருக்கின்றனவே ! உங்களுடைய அழகான தேகம் மட்டும் கண்ணுக்குக் காணுமல் போய்விட்டதெப்படி ?

19. "நீங்கள் என் காலுக்கு நலுங்கு இட்டுக்கொண்டிருந்தபொழுது அந்நலுங்கு முடியுமுன் உங்களைத் தேவர்கள் அபேக்ஷித்தார்கள். நீங்கள் புறப்பட்டுப்போய்விட்டீர்கள். ஆகையால் தாங்கள் சீக்கிரம் புறப்பட்டு மறுபடி வந்து எனது இடக்கால் நலுங்கையும் தீட்டி முடியுங்கள்.

20. "தேவலோகத்து அழகான மடந்தைகள் உம்மை மயக்கித் தங்கள் வசமாக்கிக் கொள்ளும் முன்னம் நான் அக்கினியின் வழியாய் அவ்வுலகம் சேர்ந்து மறுபடியும் உங்கள் மடியிலேறி உட்காருவேன்.

21. "நான் உடன்கட்டை ஏறி உம்மைப் பின்தொடரப்போகின்றேன் என்றாலும் மன்மதனைவிட்டுப் பிரிந்து ஒரு க்ஷணப்பொழுதாவது இரதி தனிமையில் இவ்வுலகத்தில் பிழைத்திருந்தாள் என்ற அபவாதம் எனக்கு வந்துவிட்டதே !

22. "தெய்வலோகம் சேர்ந்துவிட்ட உமக்குக் கடைசியாகச் செய்யவேண்டிய சிங்காரம் நான் என்னவாய்ச் செய்வேன் ? உயிராலும் உடலாலும் இதுவரையில் ஒருவருக்கும் வராத நாசமல்லவோ ஒரேதடவையில் உமக்கு வந்தது.

23. "நீங்கள் உமது மடியில் வில்லை வைத்து அதைச் சீர்திருத்திக்கொண்டும் புன்சிரிப்புடன் வஸந்தனுடன் பேசிக்கொண்டும் கடைக்கண்ணால் என்னைப் பார்த்துக் கொண்டு மிருப்பீர்களே ! அவைகளை எல்லாம் நான் நினைத்து நினைத்துத் துக்கிக்கின்றேன்.

24. உமது வில்லை மலரால் சிங்காரிக்கும் உமது பிராண சிநேகிதனான வசந்தன் எங்கு போய்விட்டான்? கடுஞ்சின மடைந்த சிவபெருமானால் அவனும் தனது நண்பன் போய்விட்ட நாசத்தில் போக்கப்பட்டானா என்ன?"

25. அவ்வளவு பரிதாபகரமாய் அவ்வம்மணி சொன்ன அச்சொல்லால் விஷத்தில் தோய்த்த அம்பு மார்பிற் குத்துவதுபோல மனத்திற் குத்துண்ட வசந்தன் சோகத்தில் மூழ்கிக் கிடந்த இரதியை ஆறுதல் செய்ய அவள் முன்பாக வந்து நின்றான்.

26. அவனைக் கண்டதும் அவள் அதிகமாகக் கதறி தனது மார்பின்மேல் அதிகமாக அடித்துக் கொள்ளலானாள். உறவினர்களைக் கண்டதே துக்கமானது வாயிற் கதவு திறக்கப்பட்டதும் காற்று அதிகமாக வீசுவது போல் அதிகப்படுகிறதன்றோ!

27. வெகு துக்கப்பட்டுக்கொண்டிருந்த இரதி அவனைப்பார்த்து "உன் நண்பனுடைய தேகத்தில் என்ன மிகுந்திருக்கின்றது பார். மாடப்புறாப்போல் வெகுவித அழகான காந்திகளுடன் விளங்கிய அத்தேகம் இப்பொழுது காற்றடிக்கச் சாம்பலாய்ப் பறக்கின்றது பார்.

28. "ஐயா, என் பிராணநாதரே. இப்பொழுதாவது நீங்கள் எங்கள் முன்பாகத் தோன்றி உங்கள் தேகத்தைக் காட்டக்கூடாதா. உங்களைப் பார்க்கவேண்டுமென்று வசந்தன் வெகு ஆசை கொண்டிருக்கின்றான். ஆடவர்கள் அன்பு சில வேளையில் மடந்தைகளிடம் குறைந்துபோகலாம். நண்பர்களிடம் ஒருபொழுதும் குறைவுபடமாட்டாதென்றல்லவோ சொல்லுகின்றார்கள்.

29. "இவ்வஸந்தன் ஒருவனைத் தங்கள் பக்கத்தில் வைத்துக்கொண்டல்லவா நீங்கள் தேவர்கள் அஸுரர்கள் இவர்கள் நிரம்பிய இவ்வுலகம் யாவையும் தாமரைத்தண்டின் நூல்போன்ற நாணை யுடையதும் மலர்க்கணையை ஏற்றப் பெற்றதுமான உமது வில்லால் ஆட்டி வைத்தீர்கள்.

30. "இனியேது போனவர் போனவரே. அடா வஸந்தா! உனது நண்பர் காற்றால் அவிக்கப்பட்ட தீபம் போல் மறுபடி திரும்பி வரப்போவதில்லை. நான் அந்த நண்பராகிய விளக்கின் திரி என்றும் தாளமுடியாத துக்கத்தால் இப்பொழுது நான் புகைந்து கொண்டிருக்கின்றேன் என்றும் என்னை நீ கருதுவாயாக.

31. "மன்மதனைமட்டும் எடுத்துக்கொண்டு என்னை விட்டு விட்டுப்போனவிதி எனக்குப் பாதி வைதவ்யத்தை ஏற்கனவே கொடுத்துவிட்டது. ஒருபொழுதும் அழியாத ஆதாரவான மரத்தை யானை முறித்தெறிந்தால் அதில் ஏறிப் படர்ந்திருக்கும் கொடியும் கீழே விழத்தான் வேண்டுமன்றோ?

32. "ஆகையால் உறவின் முறையார்கள் தங்கள் இறந்த பந்துக்களின் ஆத்துமார்த்தமாகக் கடைசிகிரியை என்ற சடங்கு செய்தலை ஒன்றும்செய்ய முடியாமல் தவிக்கும் என்னை நீ தீயில் ஏற்றிவைத்து என் கணவனுடைய அருகாமைக்கு அனுப்புவாயாக.

33. "சந்திரனுடன் கூடவே அவன் மனைவியாகிய சந்திரகாந்தியும் (கௌமுதி) மறைந்து விடுகின்றது, மேகத்துடன்* மின்னலும் போய்விடுகின்றது; பெண்கள்

---

* மின்னலை மேகத்தின் மனைவியாக ஒப்புக்கொள்ளும் ஒரு கொள்கை.

தங்கள் கணவனைப் பின்தொடர வேண்டுமென்ற சித்தாந்தம் உயிரில்லாத பிராணிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

34. "வெகு அழகாய் விளங்கும் என் கணவனுடைய சாம்பலை யென் மேனியின்மேல் பூசிக்கொண்டு, நான் இளந்தளிராலாகிய மெத்தையில் எவ்வளவு சுகமாகப் படுப்பேனோ அவ்வளவு சந்தோஷமாய்த் தீயில் படுத்துக் கொள்ளுவேன்.

35. "வஸந்தா! நீ எவ்வளவோ தடவைகளில் எங்களுக்குத் தளிர் மெத்தை பரப்பிக் கொடுத்து உதவிசெய்திருக்கின்றாயல்லவா. நான் உன்னை அஞ்சலி பந்தம் பண்ணி யாசிக்கின்றேன். நமஸ்காரம் பண்ணி வேண்டிக் கொள்ளுகின்றேன். சடுதியில் நீ எனக்குச் சிதை அடுக்கிக் கொடுப்பாயாக.

36. "அவ்வாறுசெய்து என்மேல் கொள்ளிவைத்துத் தென்றல் காற்றைக் கிளப்பி அத்தீ சடுதியில் மண்டும்படி செய்வாயாக. நானின்றி ஒரு நிமிஷம்கூட தனிமையில் உனது நண்பர் இருக்கமாட்டார் என்பது உனக்குத் தெரியுமே.

37. " இவ்வண்ணம் செய்து முடித்தபிறகு ஒரே கைத்தண்ணீர் எங்களிருவரையும் உத்தேசித்து நீ இறைப்பாயானால் உனது பந்து தனிமையில் தண்ணீர் குடிக்காமல் என்னுடன் சேர்ந்து அதே தண்ணீரைப் பிரிக்காமல் குடிப்பார்.

38. "வசந்தனே! எங்களுக்குப் பிண்டம் தர்ப்பணம் முதலியவைகள் கொடுக்கும்பொழுது அவைகளில் மாமலர்க்கொத்துகளையும் கலந்து நீ கொடுப்பாயாக,

உனது நண்பர் எப்பொழுதும் மாமலர்களில் விருப்ப முள்ளவர் என்பது உனக்குத் தெரியுமன்றோ."

39. இவ்விதமாய்ப் பிராணனைவிடத் தீர்மானித் திருந்த ரதியை ஆகாயத்திலிருந்து உண்டான ஆகாச வாணி, நன்றாக நீர் வற்றிப்போன குளத்தில் பரிதவிக் கும் பெண்மீனை மழைபொழிதல் முதல்முதல் சந்தோ ஷித்து வைப்பதுபோல், ஆறுதல் செய்யலாயிற்று.

40. "ரதியே,உனது கணவன் உனக்கு வெகுகாலங் கிட்டாமலிருக்கமாட்டான். சிவபெருமான் கண்ணின் தீயில் விளக்கில் விட்டிற்பூச்சிபோல் அவன் ஏன் நாச மடைந்தான் என்ற காரணத்தைச் சொல்லுகின்றேன் நீ கேட்பாயாக.

41. "அவன் பிரமதேவருக்குக் காதலை உண்டாக்கி தனது குமாரியாகிய ஸரஸ்வதியிடம் மோகம் பிறக்கும் படி செய்தான். அதன்பிறகு அப்பிரமதேவர் தனது மோகத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு அம்மன்மத னைச் சபித்தார். அச்சாபத்தின் பயனை அவனிப்பொழுது அனுபவித்தான்.

42. "பார்வதியின் தவத்தால் அவள் வசத்துக்கு வரும் ஈசனர் அவ்வம்மணியைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளும்பொழுது அவர் ஆனந்தமடைந்து மன் மதனை மறுபடியும் அவனுடைய தேகத்துடன் சேர்த்து வைக்கப் போகின்றார்.

43. "தருமன் என்ற பிரஜாபதி மன்மதனுக்குச் சாபமுடிவு எப்பொழுது என்று பிரமதேவரைக் கேட்ட பொழுது அதைப்பற்றி இவ்வாறு ஸரஸ்வதியிடம் பிரம தேவர் சொன்னர். முதல் முதல் இடிக்கும் அதன் பிறகு

அமிருதத்துக்கும் (ஜலத்துக்கும்) மேகங்களும் ஐம் புலன்களை அடக்கியவர்களும் காரணமன்றோ!*

44. "ஆகையால் சுபத்தை எதிர்பார்க்கவேண்டிய வளே! இனிமேல் உன் கணவன் உன்னிடம் வந்து சேருவானாகையால் அதற்காக உன் தேகத்தை நீ காப் பாற்றிக் கொள்ளுவாயாக; நதியின் வெள்ளத்தை முற்றி லும் சூர்யன் குடித்துவிடுகின்றான் என்றாலும் கோடை நீங்கினதும் மறுபடியும் அவ்வாற்றில் ஜலம் நிரம்புகின்ற தன்றோ."

45. இவ்வாறு ஏதோ ஒரு உருவம் கண்ணுக்குப் புலப்படாமலே ஆகாயத்தில் நின்று சொல்லி தன் பிரா ணனை விடச் செய்திருந்த நிச்சயத்திலிருந்து ரதியின் புத்தியை மாற்றிற்று. அவ்வாகாயவாணி சொன்ன சொல் லின் நம்பிக்கையின்மேல் அழகான வசனங்களினால் இனிமையாகப் பேசி வஸந்தன் அவளை ஆறுதல்செய் தான்.

46. அதன் பிறகு ரதியும் சோகத்தால் மேனி மெலிந்தவளாய் பகல்காலத்தில் தோன்றிய சந்திரபிம்பம் தனது கிரணங்கள் ஒளியற்று இரவை எதிர்பார்த்து நிற்பதுபோல் தனது கஷ்டத்தின் முடிவை எதிர்பார்த்த வளாய்ப் பிழைத்திருந்தாள்.

---

* சாபத்தை முதலில் கொடுத்துக் கெடுத்து அதன் பிறகு சாபமுடிவைச் சொல்லி க்ஷேமமுண்டாக்கி வைக்கின்றவர்கள் ஐம்புலன்களையும் அடக்கியவர்கள் என்றபடி.

ஐந்தாவது சருக்கம்

தவத்தின் பயன்

மேற்குறித்தபடி தனது கண்கள் முன்பாக ஈசன் மன்மதனை எரித்துவிடவே பார்வதி தனது மனோதங்களெல்லாம் வீணானவளாய்த் தன் மனதுக்குள் தனது அழகையும் வெறுத்துக்கொள்ளலானாள். ஏனெனில் அழகின் பயன் காதலன் மனதைக் கவரச் செய்தலன்றோ!

2. தவத்தினால் ஒரே வஸ்துவைத் தியானித்து அதை யடையப்பெற்று தனது சௌந்தரியத்தைப் பயன் பெற்றதாகச் செய்யப் பார்வதி எண்ணினாள். தவத்தாலன்றி மற்ற எவ்விதத்தாலே அவ்விதமான நேசமும் அவ்விதமான கணவனும் ஆக இவ்விரண்டும் கிட்டும் ?

3. கைலாஸபதியினிடம் தனது மனத்தைச் செலுத்தி தவத்தில் முயற்சி யுடையவளாய் பார்வதியாகிய தன் பெண்ணிருப்பதை மேனை கேட்டு அவளைத் தன்மார்போடு அணைத்துக் கட்டிக்கொண்டு வெகு சிரமசாத்தியமான தவத்தினின்றும் அவளை விலக்கும்பொருட்டு பின்வருமாறு சொல்லலுற்றாள்.

4. குழந்தாய்! உன் மனதுக்கு இஷ்டமான தேவதைகள் * நமது வீட்டிலேயே யிருக்கின்றார்கள். அத்தேவதைகளை ஆராதிக்கலாகாதா? தவம் எங்கே, உனது தேகம் எங்கே? வெகு மென்மையாயிருக்கும் சிரீஷமலர் வண்டுகள் தன்மேல் வந்துட்கார்ந்தால் அவைகளைத்

---

* சசீதேவி முதலியர்.

தாங்கிக்கொள்ளும். பறவைகள் உட்கார்ந்தால் அவைகளைத் தாங்க முடியுமா?

5. இவ்வண்ணம் தான் என்ன சொன்னபோதிலும் தனது பெண் உறுதியான நிச்சயத்துடனிருப்பதை மேனை கண்டுகொண்டு அவளைத் தவத்தினின்று தடுக்க முடியாதவளானாள். தனக்கு இஷ்டமான காரியத்தைச் சாதிப்பதில் உறுதிகொண்டிருக்கும் மனத்தையும் கீழ்நோக்கிப் பாய்ந்துகொண்டிருக்கும் நீர்ப்போக்கையும் யாரால் திருப்ப முடியும்?

6. தவம்புரிய நிச்சயித்துவிட்ட அப்பார்வதி அவ்வித நிச்சயத்தை ஏற்கனவே அறிந்திருந்த தனது தந்தைக்குத் தனது அன்பான தோழி ஒருத்தி மூலமாகத் தனது கருத்தைத் தெரிவித்துத் தவத்தின் பயன் தனக்குக் கிட்டும்வரையில் ஆச்சிரமத்தில் போய் வசிக்கத் தனக்கு விடை கொடுக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

7. கௌரி தனது பெருமைக்குத் தக்கவாறு நிச்சயித்திருப்பதை அவளுடைய மகிமை தங்கிய தந்தை கண்டு சந்தோஷித்து அவளுக்கு விடை கொடுத்தனுப்பவே, பிற்காலத்தில் ஜனங்களுக்குள் கௌரீகிரகம் என்று பெயர் வழங்கப்பெற்ற மயில்கள் விளையாடும் ஆசிரமத்துக்கு அவ்வம்மணி சென்றாள்.

8. ஒருவராலும் தடுக்கமுடியாத உறுதிகொண்ட பார்வதி, தனது மார்பில் பூசியிருக்கும் சந்தனத்தை அதன்மேல் புரளுவதால் கலைக்கும் முத்துத் தாழ்வடத்தை அகற்றி, இளஞ்சூரியனுக்கொப்பான நிற

முடைய மாவுரியைத் தனது மார்பை மூடக் கட்டிக் கொண்டாள்.

9. நன்ருகச் சிங்காரிக்கப்பட்ட அளகத்தால் அவ் வம்மணியின் முகம் எவ்வளவு அழகாய் விளங்கிற்ருே அதே அழகுடன் அவள் தனது அளகத்தைச் சடையா கத் திரித்துக்கொண்டபோதிலும் விளங்கிற்று. தாமரை வண்டுவரிசைக ளிருத்தலால்மட்டுமன்றி, பாசிக்கொத்து கள் மறைப்பதாலும் அழகாகவே பிரகாசிக்கின்றதல்லவா?

10. ஒவ்வொரு நிமிஷமும் தனக்கு மயிர்க்கூச்சை உண்டாக்குவதும் தனது இடையைச் சிவக்கச் செய்வது மான தருப்பைக் கயிற்றைத் தான் நோற்கும் தவத்தின் பொருட்டு முன்பு தான் ஒட்டியாண மணிந்திருந்த இடை யில் முப்புரியாய்ச் சுற்றிக் கட்டிக்கொண்டாள்.

11. தனது உதடுகளுக்குச் செங்குழம்புச் சாயந் தீட்டுவதையும் தனது ஸ்தனங்களின்மேல் பட்டு வருவ தால் சிவப்பு நிறம்பெற்ற பந்தை யடிப்பதையும் ஒழிந்த அவள் கை தருப்பையைக் கொய்வதினுல் காயம் பட்டு ருத்ராக்ஷமாலையை எப்பொழுதும் பற்றி ஜபத்திலிருப்ப தாய் விளங்கிற்று.

12. விலையுயர்ந்து மெத்தென்ற படுக்கையில் தூங் கும்பொழுதும் தனது தலையில் அணிந்திருக்கும் மலர் அப்படுக்கையில் உதிர்ந்தாலும் பொருத மெல்லிய மேனியளாகிய அப்பார்வதி தனது கையையே தலையணை யாக மடித்து வைத்துக்கொண்டு வெறுந்தரையில் இப் பொழுது படுக்கலாளுள்.

13. தவத்திலிருந்த அவ்வுத்தமி தனது இரண்டு ஆஸ்திகளை மறுபடி தனக்கு வேண்டும்பொழுது வாங்கிக்

கொள்ளலாம் என்று சேமத்திரவியமாக இரண்டு வஸ்துக்களினிடம் ஒப்புவித்தாள். அவை யாவை, எவைகளிடமெனில், மெல்லிய கொடிகளிடம் தனது விலாஸமான நடையையும், மான்பேடுகளிடம் தனது சஞ்சலமான பார்வையையும்.

14. பார்வதி சோம்பலின்றித் தானாகவே தனது குடமாகின்ற ஸ்தனங்களால் தண்ணீராகிற பாலை வார்த்து அவ்வாச்சிரமத்தில் கன்றுகள் வைத்து மரங்களை வளர்க்கலானாள். அவள் தான் முதல்முதல் அவ்வாறு வளர்த்த குழந்தைகளாகிய அம்மரங்களிடம் வைத்திருந்த அபிமானத்தைப் பின்பு குமாரக்கடவுளால்கூட மாற்றமுடியவில்லை.

15. காட்டில் விளையும் தானியங்களிட்டு அவளால் வளர்க்கப்பெற்ற மான்கள் அவளிடம் எவ்வளவு அன்பு பாராட்டினவென்றால் எப்பொழுதாவது ஸந்தோஷத்தால் அவளுடைய தோழிகள் பார்வதியின் கண்களை அம்மான்களுடைய கண்களுடன் வைத்து அளவு எடுத்து ஒப்பிட்டுப் பார்க்க முயன்றால் அதற்கு அவைகள் இணங்கின.

16. நியமத்துடன் ஸ்நானம்பண்ணி அக்கினியில் ஹோமம்பண்ணி மரவுரி உடுத்து வேதங்களை ஓதிக்கொண்டிருக்கும் அப்பார்வதியைப் பார்க்க மாமுனிவர்கள் அவ்வாச்சிரமத்தை நாடி வரலானார்கள். (சிறியவர்களைப் பார்க்க பெரியவர்கள் வருவார்களாவென்றால்) அறத்தால் முதிர்ந்தவர்களுக்கு வயது பார்க்கவேண்டுவதில்லை.

17. இயற்கையிற் சண்டையிடும் விலங்குகள் அச்சண்டையை விட்டவைகளாயும், மரங்கள் ஏராளமான கனி

வர்க்கங்களைப் பழுத்துதவுவதினால் அதிதிகளுக்கு விருந்தளிக்கின்றவைகளாயும், புதிதாகக் கட்டப்பட்ட பர்ன சாலைகளின் இடையில் அக்கினிஹோத்திர அக்கினிகள் விளங்குகின்றவைகளாயும், இவ்வாறு எல்லாவிதத்தாலும் வெகு பரிசுத்தமானதாக அப்பார்வதி தவம் பண்ணின ஆச்சிரமம் சோபித்தது.

18. அவ்வுத்தமி அதுகாறும் செய்த தவத்தால் தனது மனோரதம் நிறைவேறவில்லையே என்று எண்ணிய பொழுதெல்லாம் தனது சரீரம் வெகு மெலிந்துபோயிற்றே என்ற அச்சம் கொஞ்சமேனுமில்லாமல் தான் ஏற்கெனவே செய்துவந்த தவத்தைக் காட்டிலும் அதிகமாய்த் தவம் புரியலானாள்.

19. பந்துவிளையாட்டாலும்கூட வருத்தமடையும் மென்மையான மேனியுள்ள அவள், முனிகள் செய்யும் கடோரமான தவத்தில் ஆழ்ந்தாள். அவள்மேனி தங்கத் தாமரையாய் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததென்பது திண்ணம். இயற்கையில் தாமரை மிருதுவென்றாலும் தங்கமானதால் கடினமாகவும் விளங்குமன்றோ?

20. எப்பொழுதும் புன்னகை நகைக்கும் அம்மெல்லிய இடையாள் வெயிற்காலத்தில் தன்னைச்சுற்றி நாற்புறங்களிலேயும் தீ வளர்த்து அவ்வக்கினிகள் கொழுந்துவிட்டெரியும்பொழுது அவைகளின் நடுவில் உட்கார்ந்து வேறொன்றையும் பார்க்காமல் பார்ப்பவர்கள் கண்களைக் கூசச்செய்யும் சோதிபொருந்திய * சூரிய பிம்பத்தையே இடைவிடாமல் பார்த்து வந்தாள்.

---

* சூரியனே ஐந்தாவது அக்கினி. பஞ்சாக்கினி மத்தியிலிருந்து பார்வதி தவம்புரிந்தாள் என்றபடி.

21. சூரியனுடைய கிரணங்களினுல் அவ்வாறு நன்ருகத் தகிக்கப்பட்ட அப்பார்வதியின் முகம் தாமரைமலர் போல் வாடாத காந்தியையே வகிக்கலாயிற்று. ஆனுல்அவளுடைய விசாலமான கடைக்கண்வழிகளில்மட்டும் கொஞ்சம் கறுப்புநிறத்தை அக்கிரணங்கள் உண்டுபண்ணின.

22. வேண்டிக்கொள்ளாமல் நமது மேல் விழும் நீர (அதாவது மழை) அமிர்தஸ்வரூபமாய் விளங்கும் சந்திரனுடைய கிரணங்கள் இவைகளிரண்டுந் தாம் அவளுக்கு உணவாக விருந்தன. அவள் போஷணை மரங்களின் போஷணையைவிட வேருக விருக்கவில்லை.

23. ஆகாயத்துத்தீ (சூரியன்) கட்டைகளால் மூட்டப்பட்ட தீ (நெருப்பு), இவைகளாகிய பலவிதத்தீயில் (பஞ்சாக்கினியால்) நன்ருகப் புழுங்கப்பெற்ற அப்பார்வதி வெயிற்காலம் நீங்கி முதல்மழை பொழிந்ததும் பூமி ஆவியைக் கிளப்புவதுபோல் தானும் தன் மேனியிலிருந்து ஆவி கிளம்பி விளங்கினுள். *

24. முதல் முதல் விழுந்த மழைத்துளிகள் ஒரு கணப்பொழுது அவள் கண்ணிமையில் தங்கி அதனின்று அவள் உதட்டில் படிந்து அப்புறம் அவள் குசங்களின்மேல் விழுந்து சிதறி அவைகளின் கீழ் விளங்கும் வயிற்றின் மும்மடிப்பில் மறைந்து வழிந்தோடி அவள் கண்ணிமையில் விழுந்த வெகு நேரத்துக்கப்பால் அவள் உந்தியை அடைந்தன.

25. இடைவிடாது காற்றுடன் கூடிப் பெருமழை பொழியும் பொழுதெல்லாம் ஓர்வித மூட்டமுமின்றி நிற்

* கொதிக்கும் ஆவி கிளம்ப பெருமூச்சுடன் கண்ணீர் விட்டாள் என்றபடி.

கும் கற்பாறையில் உட்கார்ந்து தவம் புரியும் பார்வதி செய்த பெருந்தவத்துக்குச் சாட்சிகள் அவளைத் தங்களது மின்னலாகின்ற கண்ணுல் இடைவிடாது பார்த்துக் கொண்டிருந்த இரவுகளே.

26. பனிக்காற்று வீசும் தை மாதத்திரவுகளில் பார்வதி ஜலத்தின் நடுவில் நின்றுகொண்டு ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்து வெகு கனிவுடன் ஒன்றை மற்றொன்று கூவியழைக்கும் சக்கிரவாகப் பட்சிகளைப் பார்த்து மனந் தவிக்கின்றவளாய்த் தவம்புரியலானுள்.

27. தாமரை மலர்போல் வாசனைவீசும் சுவாசமமைந்த தனது முகத்தில் குளிருக்கு நடுங்கும் உதடுகள் அத்தாமரையின் இதழை ஒத்திருந்த காரணத்தால், தாமரை ஓடையில் நின்று தவம்புரிந்த பார்வதி அவ்வோடை தாமரைமலரின் சோபையைப் பனிக்காலத்தாலிழந்திருந்த போதிலும் தாமரை மலரோடுகூடிய அழகுடன் விளங்குவதாகவே செய்தாள்.

28. மரத்தினின்று தானுகவே உதிரும் (பர்ணத்தை) சருகைப் புசித்துக்கொண்டு தவம்புரிவது வெகு மேன்மையான தவம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அச்சருகை (பர்ணத்தை) க்கூட பார்வதி தனக்கு வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டபடியால் அச்சங்கதியை யறிந்த பெரியவர்கள் * அக்காரணத்தால் பார்வதிக்கு அபர்ணை என்று பெயரிடலானுர்கள்.

29. தாமரைத் தண்டைவிட வெகு மெல்லியதான தனது மேனியை இவ்வண்ணமான தவங்களி

---

* சருகைக்கூட புசிக்காமல் தவம்புரிந்தவள் என்றபடி.

ஞல் இரவும் பகலும் பார்வதி இளைக்கப் பண்ணிக் கொண்டு மாமுனிவர்கள் தங்களுடைய கடினமான தேகத்துடன் செய்யும் தவத்தையும் தனது தவத்துக்கு வெகு கீழ்ப்பட்டதாகப் பண்ணிவிட்டாள்.

30. இவ்விதமாய்ப் பார்வதி தவம்புரிந்தபொழுது ஒருநாள் ஓர் பிரமசாரி மான்தோல் மேற்போர்த்து, பலாசக்கொம்பு கைப்பற்றி, கம்பீரமாகப் பேசிக்கொண்டு,அந்தணர் காந்தி முகத்தில் விளங்க, தலையில் சடைமின்ன, பிரமசாரி ஆசிரமமே உருவெடுத்துவந்ததோ என்று பார்ப்பவர்கள் திகைக்க அப்பார்வதியின் ஆச்சிரமத்துக்கு வந்தான்.

31. அதிதிகளுக்குப் பூசைசெய்யக் கடமைப்பட்டிருந்த பார்வதி அவனுக்கு விதிப்படி வெகு மரியாதையாகப் பூஜைசெய்தாள். ஏனெனில் தங்கள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்ட பெரியவர்கள் தங்களைக்காண வருபவர்கள் தங்களையொத்தவர்கள்தாம் என்றபோதிலும் தங்களை நாடிவருபவர்கள் தங்களைவிடப் பெரியவர்களென்றே நினைத்து விசேஷ மரியாதைகள் செய்வதே வழக்கம்.

32. சாஸ்திரப்பிரகாரம் தனக்கு நடந்த மரியாதைகளை அப்பிரமசாரி ஏற்றுக்கொண்டு கொஞ்ச நேரம் இளைப்பாறுவதாகக் காட்டி உமையை வெகு மரியாதையுடன் நோக்கி வரம்பைவிட்டு விலகாதவஞகிய அவன் பின்வருமாறு பேசலாஞன்.

33. அம்மணி! உமது தவத்தைச் சரிவர நடத்த உமக்குத் தருப்பை பலாசக்குச்சி .இவைகளிவ்விடத்தில் எளிதாகக் கிடைக்கின்றனவா? இவ்விடத்து ஜலம் நீங்கள்

விதிப்பிரகாரம் ஸ்நானம்செய்ய உமக்கு ஒத்திருக்கின் றதா? உமது சக்திக்குத் தக்கபடி அதிகமாயில்லாமல் வேண்டியமட்டும் நீங்கள் தவத்தை நடத்தி வருகின் றீர்களா? அறத்தைச் சரிவரத் தேடிக்கொள்ள சரீர மன்றோ முதல் முதல் சௌக்கியமாக விருக்கவேண்டும்?

34. நீங்கள் உமது கைகளால் ஜலத்தை எடுத்து அர்க்யமாகக் கொடுக்கும் நீரால் முளைத்த கொடிகள் நன்றாகத் தளிர்விட்டு விளங்குகின்றனவா? வெகு நாளாகச் செங்குழம்புச்சாயம் காணாமலே தமது இயல் பான சிவப்பு நிறத்துடன் விளங்கும் உங்களுடைய உதட்டுக்காந்திக்கு அத்தளிர்கள் ஒப்பானவைகளாக வேண்டுமல்லவா?

35. நீங்கள் பாராட்டும் செல்வத்தால் உமது கையி லிருக்கும் தர்ப்பையைப் பிடித்திழுக்கும் மான்களிடம் உங்களுடைய அன்பு குறைவில்லாம லிருக்கின்றதா? தாமரை இதழ்போன்ற கண்களைப் பெற்றவளே! அம் மான்களன்றோ தங்களுடைய சஞ்சலமான கண்களால் உங்களுடைய கண்களைக் கொள்ளைகொண்டவைகள்போல் காணப்படுகின்றன.

36. பார்வதி! நல்ல உருவம் பாவமான துறையில் ஒருபொழுதும் இறங்காது என்ற உலகச்சொல் அவ்வள வும் உண்மையே. விசாலமான கண்களைப் பெற்றவளே! உமது நல்லொழுக்கம் மாமுனிவர்களுக்கும் உபதேசம் செய்பத்தக்க உதாரணமாக விளங்குகின்றதல்லவா.

37. மாசற்ற உங்களுடைய ஒழுக்கத்தால் இம வான் எவ்வளவு பரிசுத்தியைத் தமது குடும்பத்துடன் அடைந்தாரோ அவ்வளவு பரிசுத்தத்தை ஸப்த ரிஷிகள்

பலியாக வாரியிரைக்கும் மலர்களைத்தாங்கி ஆனந்தத்தோடு ஆகாய மார்க்கமாய் ஓடிவந்து தம்மேல் விழும் கங்கையின் ஜலத்தாலும் அவர் அடையவில்லை.

38. பெருங்கருத்தமைந்த பாவாய்! உம்மைப் பார்த்த பிறகு அறம் பொருள் இன்பம் என்ற இம்மூன்றுக்குள் அறந்தான் உயர்ந்தது என்று எனக்குத் தோன்றி விட்டது ; ஏனெனில் நீங்கள் பொருள் இன்பம் இவைகளை உம்மிடத்திலிருந்து அகற்றி அறத்தைமட்டும் தழுவி வருகின்றீர்களல்லவா ?

39. நீங்கள் செய்த மேன்மையான மரியாதையை ஏற்றுக்கொண்ட என்னை நீங்கள் ஏதோ அயலான் என்று கருதவேண்டாம். ஏனெனில், வணங்கிய மேனியுடன் விளங்கும் உத்தமியே ! நட்பு * என்பது ஏழு பேச்சுகள் மட்டில் பேசினமாத்திரத்தாலேயே விளைகின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

40. இவ்வளவு தூரம் பொறுத்துக்கொண்டு என் பேச்சைக் கேட்டு வரும் உத்தமியே ! நான் இப்பொழுது உமது நண்பனாய் விட்டபடியாலும் அந்தணன் என்ற காரணத்தால் இதைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும் என்ற அவா எனக்கு உதித்திருக்கிறபடியாலும், நான் ஏதோ சில சங்கதி தங்களைக் கேட்கவேண்டுமென்றிருக்கின்றேன். ரகஸியம் இல்லாத பக்ஷத்தில் அவைகளுக்கு மறுமொழி தாங்கள் எனக்குச் சொல்ல வேண்டுகிறேன்.

41. முதல் பிரமாவாகிய (ஹிரண்யகருப்பருடைய) வமிசத்தில் நீங்கள் பிறந்திருக்கின்றீர்கள். உங்க

---

* ஆகையால் நான் உமது நண்பன் என்று அந்தப் பிரமசாரி எடுத்துக் காட்டியபடி.

ளுடைய அழகோ இம்மூவுலகங்களிலுமுள்ள அழகு களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து அமைக்கப்பட்டது போலிருக்கின்றது. ஐசுவரியமும் இனி நீங்கள் போய்த் தேடவேண்டாவண்ணம் உங்களிடத்திலேயே அமைந் திருக்கிறது. உங்களுடைய பிராயமோ இளம்பிராயம். இவ்வண்ணம் எல்லாமமைந்திருக்க இவைகளுக்கு மேல் எவ்விதப்பயனை நாடி நீங்கள் தவம் புரிகின்றீர்கள்? அதை எனக்குச் சொல்லவேண்டும்.

42. வெகு தைரியமுள்ள மடந்தைகள் தங்களால் சகிக்கமுடியாத அபசாரம் தங்களுக்கு ஸம்பவித்த கார ணத்தால் இவ்வாறாகத் தவம்புரியப் புகுவதுண்டு. ஆனால் மெல்லிய இடையீர்! எற்கனவே விசாரித்திருக்கும் சமா சாரங்களால் அவ்வண்ணம் உங்களுக்கு எதும் அபசாரம் சம்பவித்திருப்பதாகத் தெரியவேயில்லை.

43. இனிய பார்வையுடையீர்! உமது மேனியோ ஒருநாளும் சோகத்துக்கு எலாதது. தந்தை வீட்டில் உமக்கு என்ன அவமானம் நடந்திருக்கக்கூடும்? வேற் றாள் உமக்கு அவமானத்தை விளைவித்திருப்பான் என் பது ஒருநாளுமிருக்கமுடியாது. எவனாவது பாம்பின் கூரான இரத்தின ஊசிபோன்ற பல்லில் தனது கையை அழுத்தத் துணிவானா?

44. இவ்விளம்பிராயத்தில் நீங்கள் நகைகளணி வதைவிட்டுக் கிழத்தனத்துக்கு எற்றதாயிருக்கும் மாவுரி உடுத்தீர்கள். சாயங்காலத்தில் ஒளியுடன் பிரகாசிக்கும் சந்திரன் நட்சத்திரங்களிவைகளுடன் சோபிக்கும் முன் னிரா ஒளியற்ற விடியற்காலமாய் மாறுமோ?

45. தவத்தால் நீங்கள் தேவலோகத்தைஅடைவது உமது விருப்பமேல் உங்களுடைய சிரமம் வீண். ஏனெனில் உங்களுடைய தந்தையின் இருப்பிடங்கள் அவ்வளவும் தேவபூமிகளே. கணவனைப் பெறுவது கருத்தேல் அதற்குத் தவம் ஏதுக்கு? இரத்தினம் தன்னை ஒருவன் ஏற்க வேண்டுமென்று தானகப் போய்த் தேடமாட்டாதே? அது தேடப் படுமன்றோ!

(இவ்வாறு பிரமசாரி சொல்லும் பொழுது பார்வதி பெருமூச்சுவிட)

46. தெரிந்தது நீங்கள் விடும் பெருமூச்சால் எனக்கு! ஆனல் என் மனதிற்கு மட்டும் இன்னும் ஸந்தேகமேயிருக்கின்றது. நீங்கள் போய்ப் பிரார்த்திக்கவேண்டுமளவு ஒருவனும் நெஞ்சுறுதியுள்ளவனக இருக்கவேமாட்டான் நீங்கள் பிரார்த்தித்த பிறகும் உங்கள் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளாதவனு முண்டோ?

47. அடடா! நீங்கள் காதலிக்கும் அவ்விளைஞன் வெகு கடினசித்தமுள்ளவன யிருக்கவேண்டும். ஏனெனில் வெகுகாலமாய்க் காதணியாகிய தாமரை அணியப் பெறுமல் தொள்ளையாய்க் காணும் உங்களுடைய காதுகளின் மேல் முதிர்ந்த நெற்கதிர்கள் போல் விலவிலப்பாகத் தொங்கும் உங்களுடைய சடைகளைப் பார்த்த பின்னும் அவன் மனமிரங்காம லிருக்கின்றனன்றோ?

48. முனிவர்களே செய்யத்தகுந்த விரதங்களை நீங்கள் செய்வதால் மிகவும் வாடி,நகைகள் பூட்டப்பட வேண்டிய அங்கங்கள் எல்லாம் சூரிய கிரணங்களால் கறுத்து, பகற்காலத்தில் தோன்றிய சந்திர ரேகைபோல் உருமாறியிருக்கும் உங்களைப் பார்த்தும் எவன் மனது இரங்க

வில்லையோ அவனுக்குக் கருணையென்பது கொஞ்சமேனு மிருத்தலாமோ ?

49. நீங்கள் கருதியிருக்கும் காதலன் தான் அதிக அழகுள்ளவன் என்ற செருக்கால் மோசம் போயிருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். ஆகையாற்றான் வளைந்த புருவங்கள் பெற்று அழகாய் விளங்கும் உங்கள் கண்களுக்கு முன்பாக அவன் வெகுநாளாகத் தனது முகத்தைக் காட்டாமல் மறைத்துத் திரிகிறான்.

50. பார்வதி, இன்னும் எத்தனை நாள்தான் தவம் புரிந்து உங்களுடைய தேகத்தைச் சிரமப்படுத்திக்கொள் வதாக நீங்கள் கருதியிருக்கின்றீர்கள் ? நான் என் முற் பிறப்பில் தேடிக்கொண்ட தவம் என்னிடமிருக்கின்றது. அதில் பாதி நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். அதை யும் கைப்பற்றி உங்களுடைய மனோரதத்தைச் சீக்கிரத் தில் நீங்கள் நிறைவேற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் ஆசை கொண்டிருக்கும் அந்நாயகன் பெயரைமட்டும் சொல் லுங்கள்."

51. இவ்வண்ணம் அவ்வந்தணன் பார்வதியின் மனத்திலிருந்த கருத்துக்குட் புகுந்து சொல்லவே பார் வதி தனது கருத்தைத் தானாக வெளியிட முடியாதவ ளாக விருந்தாள். ஆனால் அவள் மையைவிட்டு ஒழிந்த தனது கண்களைத் திருப்பி தனக்குச் சமீபத்திலிருந்த தோழியைப் பார்த்தாள்.

52. அவள் தோழியும் அப்பிரமசாரிக்கு மறு மொழி சொல்லலானாள். ஐயா ஸாதுவே, இவ்வம்மணி எக்காரணத்தால் ஒரு தாமரைமலரை வெயிலுக்குக் குடை யாகப் பிடிப்பதுபோல் தமது மென்மையான தேகத்தைத்

தவத்துக்குச் சாதனமாக்கிக்கொண்டாள் என்பதைப் பற்றி உமக்குத் தெரிந்துகொள்ள அவாவிருந்தால் சொல்லுகிறேன் ; கேளுங்கள் :—

53. வெகு செருக்குள்ள இவ்வுத்தமி இந்திரன் முதலான எட்டுத்திக்குப் பாலகர்களையும் வேண்டாம் என்று அவமதித்துவிட்டு மன்மதனையே எரித்த காரணத்தால் ஒருபொழுதும் அழகுக்கு அடங்காத பினாகபாணியையே தனக்குக் கணவனாக அடைய விரும்புகின்றாள்.

54. மன்மதன் உயிருடனிருந்த காலத்திலேயும் புரம்மூன்றெரித்தோன் போட்ட ஹூங்காரத்தால் அவன்மேல் படாமல் திரும்பிவந்த மன்மதபாணமானது அம்மன்மதனிப்பொழுது இறந்து அழிந்தே போன போதிலும் இப்பார்வதியின் உள்ளத்தில்மட்டும் நன்றாகத் தைத்திருக்கின்றது.

55. அதுமுதல் பார்வதி தனது தந்தைவீட்டில் தமது கூந்தல் நெற்றிச் சாந்தால் அழுக்கடைய மன்மதாவஸ்தைகொண்டு வெப்பந்தணிய பனியே கல்லாய் உறைந்திருக்கும் பாறையில் உட்கார்ந்தும் சுகமடையாதவளாயிருந்தாள். *

56. சிவபெருமானுடைய சரித்திரம் உரைக்கப்படும் பொழுதெல்லாம், பார்வதி தனது கண்களில் நீர் ததும்ப வாய்குளற வனங்களில் தன்னுடன் கூடிப்பாடும் கின்னர மடந்தைகளையும் பலதடவைகளில் அழுதுகொண்டே பாடி நிற்கச் செய்தாள்.

---

* இவ்வாறு குளிர்ந்தவிடங்களில் உட்கார்ந்தால் இவ்வித அவஸ்தை நீங்கும் என்பது கொள்கை. பார்வதிக்குமட்டும் நீங்கவேயில்லை என்பது கவியின் கருத்து.

57. அன்றியும் அவள் ஒவ்வொரு இரவும் மூன்று ஜாமம் முற்றிலும் விழித்திருந்து கடைசியாய்க் கொஞ்சம் மெய்யயர்ந்து கண்மூடி உடனே விழித்துக்கொண்டு, ஏ நீலகண்டா, நீங்கள் எங்குப் போகின்றீர் என்று கூவி ஒருருவும் அருகிலில்லாமலிருக்கையிலேயே ஏதோ ஒருவர் கழுத்தில் தான் கையைப்போட்டு அணைத்துக் கொள்ளுவதாகக் கட்டிக்கொள்வாள்.

58. எல்லாப் பெரியோர்களும் எங்கும் நிறைந்தவர் என்று உம்மைச் சொல்லுகின்றார்களே. அப்படியிருக்க உள்ளத்தை முற்றிலும் நான் உம்மிடத்தில் செலுத்தியிருக்கின்றது மட்டும் உமக்கு ஏன் தெரியவில்லை என்று இம்மடந்தை தனது உள்ளங்கையில் சிவபெருமான் உருவத்தை எழுதி அவரை மனதுக்குள்ளேயே நிந்திப்பாள்.

59. இப்பார்வதி இவ்வாறு தான் என்னதான் முயன்றும் சிவனை அடைய முடியாமல் தவத்தையன்றி வேறு வழி காணாதவளாய், தந்தையின் அனுமதிபெற்று தவம் புரிய எங்களுடன் இவ்வாச்சிரமம் வந்தாள்.

60. இங்கு இவள் செய்த தவத்துக்குச் சாட்சிகளாய் விளங்கும் இவள் வைத்த மரங்கள் பழங்களோடு நிரம்பியவைகளாய்க் காணப்பட்டுங்கூட பிறைசூடியின் விஷயமாய் இவள் கொண்டிருக்கும் மனோரதமட்டும் இன்னும் முளை கிளம்பியதாகக்கூடக் காணப்படவில்லை.

61. எத்தனைதான் பிரார்த்தித்தும் இதுவரையிற் கிட்டாத அச்சிவபெருமான், தவத்தால் மெய்மெலிந்தவளும் தோழிகளாகிய எங்களால் எப்பொழுதும் கண்ணுங்கண்ணீருமாய்ப் பார்க்கப் பெறுபவளுமான பார்வதியிடம் எப்பொழுது மனமிரங்கி, நன்றாக உழப்பட்டு

மழையின்மையால் பரிதாபமான நிலைமையில் இருக்கும் நிலத்தின்மேல் இந்திரன் மனமிரங்குவதுபோல், அவள் மனத்தைக் குளிரப்பண்ணுவானோ அதுதான் எங்களுக்குத் தெரியவில்லை.

62. பார்வதியின் கருத்தை நன்றாக அறிந்த அத்தோழி ஒன்றையும் ஒளிக்காமல் இவ்வாறு உள்ளதை உள்ளபடி அம்மாணவனிடம் சொல்லவே, அவன் அதைக் கேட்டுத் தான் சந்தோஷப்பட்டதாக ஏதும் காட்டிக்கொள்ளாமல் பார்வதியைப் பார்த்து "அம்மணி, இது உண்மைதானா, அல்லது பரிகாஸமா" என்று கேட்கலானான்.

63. அப்பொழுது பார்வதி தாமரை முகிழ்போல் விரல்கள் மடக்கியிருந்த தனது வலக்கை நுனியில் தனது ஜபமாலையைப் பற்றியவளாய் தான் வெகு நேரமாக இன்னதான் பேசவேண்டும் என்று நிர்ணயித்துக்கொண்டிருந்த சொற்களை வெகு கிரமத்துடன் சுருங்கிய சொற்களால் பின்வருமாறு சொல்லலானாள்.

64. வேதங்களை அறிந்தவர்களில் உத்தமரே, இதுவரை எனது தோழி சொன்னதைக் கேட்டீரே, அப்படியே நான் பெரும்பதவியை அடைய விரும்பினவளாகவே இருக்கின்றேன். அப்பெரும்பதவியை அடைய இந்தத் தவம் எப்படிப் போதும்? ஆனால் அப்படி எண்ணி தவத்தை விட்டுவிடவும் மனம் வரவில்லை. ஆசைக்கு அளவில்லையன்றோ!

65. அதைக் கேட்டதும் அப்பிரமசாரி மறுபடி பேசலானான். எனக்கு மகேசுரனை நன்றாகத் தெரியும்! நீங்களோ அவனிடம் காதல் கொண்டவரா யிருக்கின்றீர்கள்! அசுபமான காரியங்களைச் செய்வதிலேயே அவ

னுக்கு எப்பொழுதும் அதிக ஆசையாகையால் நீங்கள் அவன்மேல் கொண்டிருக்கும் ஆசைக்கு இடங்கொடுக்க எனக்கு மனமில்லை.

66. அற்ப வஸ்துவில் வீண் அபிமானம் வைத்த வளே! முதல் முதல் கலியாணச்சரடு கட்டப் பெறும் உமது கையால் நாகப்பாம்பைக் கடகமாக அணிந்திருக்கும் சிவனது கையை நீங்கள் எவ்வாறு பிடிப்பீர்கள்?

67. நீங்களே உங்களுக்குத் தெரிந்தமட்டில் யோசித்துப்பாருங்கள், அழகான அன்னப்பட்சிகளின் உரு விழைக்கப்பெற்ற உங்களுடைய கலியாணப்பட்டுச்சேலையும் இரத்தத்துளிகள் சொட்டும் அவரது ஆனைத்தோலும் ஒன்றுடன் மற்றொன்று முடிபோட இசையுமா?

68. திட்டாணிகளில் மலர்கள் பரப்பி அதன்மேல் உலாவும் செங்குழம்புச்சாயம் பூசிய உங்கள் பாதங்கள் எங்கும் தலைமயிர் சிதறிக்கிடக்கும் சுடுகாட்டில் அலையும்படி நேரிடுவதை உமது மாற்றான்கூட சகிக்கமாட்டானே.

69. முக்கண்ணன் மார்பில் நீங்கள் அணையும்படி நேரிட்டால் அதைவிட ஒவ்வாமை வேறுமுண்டோ! அரிசந்தன நற்சாந்தணிந்த உங்கள் மார்பில் சுடுகாட்டுச் சாம்பலன்றோ படியும்?

70. இன்னும் ஒரு முதன்மையான அவமானத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். உங்கள் கலியாணமானவுடன் யானையின் மேலேறி ராஜகுமாரிக்குத் தக்கபடி நீங்கள் நகர்வலம் வரவேண்டியதாக விருக்க நீங்கள் கிழ எருத்தின்மேல் ஏறியல்லவோ உட்காரவேண்டியதா யிருக்கும். அப்பொழுது நகரத்து ஜனங்கள் எல்லாரும் சிரித்த

முகத்துடன் பரிகாசம் பண்ணியல்லவோ உங்களைப் பார்ப்பார்கள்?

71. ஈசனுடன் சேரவேண்டும் என்ற ஆசையுடனிருக்கும் இருவர்களைப்பற்றித்தான் நானிப்பொழுது விசாரப்பட வேண்டியிருக்கின்றது. அவர்கள் யாரெனில் ஏற்கெனவே ஈசனுடன் சேர்ந்துவிட்ட வெகு சாந்திபடைத்த சந்திரனுடைய கலை ஒன்று. மற்றது இவ்வுலகத்தின் கண்களுக்குச் சந்திரகாந்திபோல் விளங்கும் நீங்கள்.

72. சுடலையாடியின் முகத்தின் அழகோ முக்கண்கள்கொண்ட அழகு! அவன் பிறப்போ வான்முறை தெரியாத பிறப்பு. அவனுடைய ஐசுவரியமோ திகம்பரன் (ஆடை அற்றோன்) என்ற அவன் பெயராலேயே வெளிப்படுகின்றது. இளம் மானின் கண்களுடையாய்! உலகத்தார் தங்கள் மாப்பிள்ளைகளிடம் நாடிப் பார்க்கும் இலட்சணங்களில் ஏதாவது சிறிதேனும் முக்கண்ணனிடம் இருக்கின்றதா நீங்களே யோசித்துப் பாருங்கள்.

73. ஆகையால் விரும்பத் தகாத தன்மை பெற்ற இக்காரியத்திலிருந்து உங்கள் மனத்தை அகற்றுங்கள். அவ்வாறிருக்கும் அவனெங்கே, எல்லாவித உயர்ந்த பாக்கியங்களும் பெற்று இவ்வாறிருக்கும் நீங்கள் எங்கே. மயானத்தில் நட்டிருக்கும் கழுமரத்துக்குப் போய் வேதியர்கள் யாகஸ்தம்பத்திற்குச் செய்யும் பூஜைகளெல்லாம் செய்வதைப் பெரியோர்கள் ஒப்புவார்களா?

74. இவ்வாறு அவ்வந்தணன் தன் மனதுக்கு விரோதமாகப் பேசவே பார்வதி துடிக்கும் தனது உதட்

டில் தனது கோபத்தை வெளிக்காட்டுகின்றவளாய் ஓரங் களில் சிவந்து புருவங்களால் நெருக்கப்பெற்ற தனது கண்களைச் சுழற்றி அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

75. அன்றியும் பின்வருமாறு அவனைப் பார்த்துச் சொல்லலானாள் :—சிவபெருமானை நீ உண்மையாக அறிந்துகொள்ளாதபடியால் நீ இவ்வாறு பேசுகிறாய். எளி தில் உலகத்தாரால் ஆராய்ந்தறிய முடியாதவரும் மனத் தால் எட்டமுடியாதவருமான பெரியோர்களை மூடர்கள் எப்பொழுதும் நிந்திப்பது வழக்கம்.

76. தனக்கு வரும் ஆபத்துகளை விலக்கவேண்டிய வனும் அல்லது ஐசுவரியங்களை அடையவேண்டிய வனுமே சுபமான காரியத்தையே நாடிச் செய்துகொண் டிருப்பான். இவ்வுலகங்களுக்கெல்லாம் அடைக்கலமா யிருந்துகொண்டு ஓர்வித ஆசையும் பற்றுமில்லாத ஈச னுக்கு ஆசையை மனதில் விளைவிக்கும் இவ்விதச் சுபங் கள் எதுக்கு ?

77. ஒன்றுமில்லாதவரா யிருந்தும் அவர் எல்லா வித ஸம்பத்துக்களுக்கு மிருப்பிடமாய் விளங்குகின்றார். அவர் மயானத்தில் வஸித்துக்கொண்டே மூவ்வுலகங் களுக்கும் நாதனாய் விளங்குகின்றார். அவர் பயங்கர மான உருவங்கொண்டவர் என்றாலும் அவர் பெயர் அழ கானவர் (சிவன்) என்பது அன்றோ ? இதுவரையில் சிவ பெருமானை உண்மையாக ஆராய்ந்தறிந்தவர்கள் ஒருவரு மில்லையன்றோ !

78. ஒரு சமயத்தில் அவர் தனது மேனியை நகைகளால் சிங்காரித்துக் கொண்டிருப்பார். மற்றொரு சமயத்தில் பாம்புகளையே அணிந்து விளங்குவார். ஒரு

சமயத்தில் அவர் யானைத்தோல் உடுத்திருப்பார். மற்றொரு சமயத்தில் வெண்பட்டு உடுத்திருப்பார். தன் தலைமேல்ஒருபொழுது மண்டை ஓட்டைக் கவிழ்த்துக்கொண்டிருப்பார். மற்றொருபொழுது சந்திரனையே அணிந்திருப்பார். வெவ்வேறான எட்டு சுரூபங்கொண்ட ஜகதீசனுடைய திருமேனியைக்கண்டு அறிந்தவர்களுமுண்டோ!

79. சுடலைச் சாம்பலுமன்றோ அவர் மேனியில் பட்ட மாத்திரத்தில் மற்றவர்களைப் பரிசுத்தம்பண்ணும் மேலான பதவியை அடைகின்றது? அவர் அம்பலத்தில் திருத்தாண்டவம் செய்யும்பொழுது அவர் மார்பி னின்று உதிரும் அச்சுடலைச்சாம்பலைத் தலையில் வகித்துக் கொள்ள தேவர்களும் காத்து நிற்கின்றார்களன்றோ!

80. ஏதுமற்ற அச்சிவன் எருதை உதைத்துச் செல்வரேனும் மதம் பெருகும் ஐராவதத்தில் ஏறிவரும் இந்திரன், அவர் பாதங்களைத் தனது தலையால் வணங்கி, தன் தலையி லணியப்பெற்றுச் செவ்வனே மலர்ந்த மந்தாரை மலர்களின் பூந்தாதுகள் அவருடைய கால் விரலை அலங்காரம் பண்ண தண்டனிடுகின்றான்.

81. ஒன்றுக்கும் பற்றாத நீ, சிவபெருமானிடம் தோஷங்கள் இவை என்று எடுத்துச் சொல்லும்பொழுது ஒன்றை மட்டும் உண்மையாகச் சொன்னாய். தானாய்த் தோன்றிய பிரமதேவருக்கே மூலகாரணமாய்ச் சிவ பெருமானை மாமுனிவர்கள் குறிக்கும்பொழுது அவருக்கு மூலகாரணத்தைக் கண்டறிய எவரால் முடியும்?

82. உன்னுடன் விவாதம் செய்வதில் என்ன பிரயோஜனம்? நீ கேள்விபட்டபடியே சிவபெருமான் உன்

மட்டில் முற்றிலுமிருக்கட்டும். நானோ சிவபெருமானிடம் என்னாசையை நிரந்தரமாய் வைத்துவிட்டேன். தமது மனத்தின் போக்குப்படியே நடக்கின்றவர்களுக்கு உலக நிந்தையும் ஒரு பொருட்டோ ?

83. அடி தோழி ! இவனை இங்கு விட்டு அப்புறப் படுத்து. இவன் உதடு அசைவதைப் பார்த்தால் இவன் மறுபடியும் ஏதோ பேச யத்தனிக்கிறவன்போல் காண்கிறான். பெரியவர்களை நிந்தித்துப் பேசுகிறவன் மட்டுமே பாவியல்ல, அவன் செய்யும் நிந்தையைக் கேட் கின்றவர்களும் பாவிகளாவார்கள்.

84. அல்லது நாமே இவ்விடம்விட்டு வேறிடம் போவோம் என்று சொல்லிக்கொண்டே அச்சிறுமி தனது குசங்களின்மேல் போர்த்திபிருந்த முன்றானை நடக்கும் வேகக்காற்றிற் பறக்க அவ்விடம்விட்டுச் செல்லலானாள். இடபக்கொடியோனும் உடனே தனது நிஜ உருவங் கொண்டு புன்சிரிப்புடன் அவளைப்பற்றிப் பிடித்துக் கொண்டான்.

85. சிவபெருமானைக் கண்டதும் அப்பார்வதி மெய் பதற தேகமெல்லாம் வியர்வை ஓட வெட்கந்தோன்ற எடுத்தகாலை முன்வைக்காமல் அப்படியே நிறுத்திக் கொண்டு, வெகு வேகவாக ஓடிவரும் வெள்ளமானது தனக்கு குறுக்கே ஒரு பெரும் மலை ஓங்கி நிற்கக்கண்ட தும் முன்னும் போகமுடியாமல் பின்னும் போகமுடியா மல் குழம்பித்தேங்கி நிற்பதுபோல், மனம்பதறி நின்றாள்.

86. "பார்வதி, இன்றுமுதல் நான் உனக்கு அடிமை யாய்விட்டேன். உனது தவத்தால் நீ என்னை விலைக்கு வாங்கிவிட்டாய்" என்று சந்திரசேகரன் சொல்லவே

பார்வதி ஒரு பெருமூச்செறிந்து அன்றைத்தினம் வரையில் தான் தவம்செய்வதில் பட்டிருந்த சிரமமெல்லாம் அகலப் பெற்றவளானாள். நாம் பட்ட சிரமத்துக்குத் தக்க பயன் நமக்குக் கிடைத்துவிட்டால் அந்தச் சிரமம் சிரமமாக அதன் பிறகு தோன்றவே தோன்றுதல்லவா ?

ஆறாவது சருக்கம்


உமையை வரித்தல்

அவ்வாறு தேவதேவன் தன்னிடம் அருள்புரிந்த பின்பு பார்வதியும் இரகசியமாய் தனது தோழியிடம் சிவ பெருமானுக்கு ஒரு சமாசாரம் சொல்லியனுப்பினாள். அது யாதெனில் சிவபெருமானுக்குத் தன்னைக் கன்னிகா தானம் செய்துகொடுப்பதற்குத் தனது தந்தையாகிய இமவானது அனுமதிபெறல் வேண்டும் என்பதேயாம்.

2. அவ்வண்ணம் தனது தோழி மூலமாய்ச் சிவ பெருமானுக்குச் சமாசாரம் சொல்லியனுப்பின பின்னர் அப்பார்வதி அவரிடம் மாறாத அன்புடன் பதைக்கின்றவ ளானாள். வசந்தகாலத்தில் எப்பொழுதும் குதூகலத் துடன் விளங்கும் கட்டுமாமரத்தின் கிளை தன்னிடம் குயில் வந்துட்காரக் காண்பதை எதிர்பார்த்துக்கொண்டு தவித்து நிற்குமன்றோ!

3. மன்மதனையே தீயிட்டு எரித்த அச்சிவபெரு மானும் அப்படியே அனுமதி பெறுவதாக ஒப்புக்கொண்டு, பிரியப் பிரியமற்றவராய் உமையிடம் விடைபெற்று அவ்விடம்விட்டு நீங்கி, சோதி உருவாய் விளங்கும் ஆங்கி ரஸர் முதலான ஏழு ரிஷிகளையும் தம் மனத்தால் கருத லானார்.

4. தவத்தையே தங்கள் தனமாகக்கொண்ட அம் மாமுனிவர்கள் தங்கள் தேகப்பிரபை சமூகத்தால் ஆகா



உமையின் வழிபாடு

யத்தையே பிரகாசிக்கச் செய்துகொண்டு அருந்ததியுடன் கூட ஈசனுர் முன்பாக உடனே வந்து தோன்றினுர்கள்.

5. கரையில் ஓங்கிநிற்கும் மந்தார மாத்தின் மலர் உதிரப்பெற்று அலைகள் அம்மலர்களையே வாரி வீச, திக்குக்கஜங்களின் மதமணம் பரிமளிக்க விளங்காநிற்கும் ஆகாய கங்கையின் ஜலத்தில் ஸ்நாநம் செய்தவர்களாய்,

6. நல் முத்தாலாகிய பூணூல் அணிந்து, பொன் மரவுரி பூண்டு, இரத்தினக் கற்களே கோக்கப்பட்ட ஜப மாலை கைப்பற்றி, துறவறம் சேர்ந்த கற்ப தருக்கள்போல் விளங்குகின்றவர்களாய்,

7. தாம் ஸூரிய மண்டலத்துக்கு மேலே ஸஞ்சரிக்கின்றவர்களாகையால் தங்களிருப்பிடத்துக்குக் கீழாகத் தனது குதிரைகளை ஓட்டிச்செல்லும் சூரிய பகவான் தன் தேரிற்கட்டிய கொடியைத் தாழ்த்தி நமஸ்காரத்துடன் கண்களை மேலெடுத்துத் தங்களைப் பார்க்கப் பெற்றவர்களாய்,

8. மகா விஷ்ணுவின் வராஹ அவதாரத்தின் கோரப்பல்லைத் தான் கையால் பற்றவே அவரால் ஆதாவுடன் தூக்கி ஏந்தப்பெற்ற பூதேவியுடன் பிரளய காலத்திலும் அழிவின்றிச் சுகமாய் இளைப்பாறுகின்றவர்களாய்,

9. பிரமதேவருக்கு அடுத்த பதவியில் அவர் படைத்து நிறுத்தியதின்மேல் மிகுந்திருந்த படைப்புகளையும் படைத்த காரணத்தால் பெரியோர்களால் பழைய பிரம தேவர்கள் என்று புகழப்படுகின்றவர்களாய்,

10. முற்பவத்தில் நிர்மலமான தவத்தின் அருளடைந்து அத்தவத்தின் பயனை முனிவர்களா யிருந்த

போதிலும் இச்சன்மத்திலும் அனுபவிக்கின்றவர்களாய் (விளங்கிய அம் மாமுனிவர்கள் ஏழு பெயர்களும் அங்கு வந்து தோன்றினார்கள்.)

11. அவர்கள் நடுவில், தனது கணவன் பாதங்களி லேயே மனம் பதிந்தவளாய், மகாபதிவிரதையாய், தவத் தின் பயனே உருவெடுத்து வந்தாற்போலச் சோபிக்கின்ற வளாய் அருந்ததி தேவி வெகு அழகாக விளங்கலானாள்.

12. ஈசனார் அம்மாது சிரோன்மணியையும் அம் மாமுனிவர்களையும் ஏற்றத் தாழ்வின்றி ஒரேவிதமாய் உபசரிக்கலானார். பெரியோர்கள் ஸ்திரீ புருஷன் என்ற வித்தியாஸத்தை ஒருபொழுதும் கவனியார்கள். நல் லொழுக்கம் ஒன்றேயன்றோ அவர்கள் எப்பொழுதும் கொண்டாடிப் புகழும் குணம்!

13. அருந்ததியைக் கண்டபிறகு தாமும் மனை யாட்டியை வெகு சீக்கிரம் அடைய வேண்டும் என்ற ஆவல் ஈசனாருக்குத் தோன்றிற்று. யாகம் முதலிய இல் லறச் சடங்குகளுக்கு மனைவியன்றோ இன்றி யமையாச் சாதனம்?

14. இல்லறத்தின் பொருட்டு ஈசனார் பார்வதியைத் தமது மனத்தில் வரித்ததும், தான் முதலிற் செய்த குற்றத்தை நினைத்து நடுங்கிநின்ற மன்மதனுடைய பிராணனும் மறுபடியும் சுவாசம்பெற்றது போலாயிற்று.

15. அம் மாமுனிவர்கள் எல்லோரும் ஈசனாரை வணங்கியபின்னர் ஜகத்குருவாகிய அக்கடவுளைப்பார்த்து, வேதமொழுகும் தங்கள் வாய்களால் அன்பு ததும்பிய தங்கள் மேனி மயிர்க்கூச்செறிய, பின்வருமாறு சொல்ல லானார்கள்.

16. நாங்கள் நியமபூர்வகமாய் இதுவரையில் ஓதிய வேதமும் நாங்கள் இன்றுவரை முறைப்படி வளர்த்து வந்த ஓமமும் நாங்கள் செய்துவந்த தவமும் இவைகள் எல்லாவற்றினுடைய பயனும் இன்றுதான் எங்களுக்கு நிறைவேறினது.

17. உங்கள் மனமோ ஒருவருடைய வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத மனம். அவ்விதமாகிய உங்கள் மனத்தாலேயே எல்லா உலகங்களுக்கும் ஈசனாகிய நீங்களே எங்களை நினைக்கும்படியான பாக்கியம் பெற்றோமென்றால் எங்கள்பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

18. எவனொருவன் உங்களை உள்ளத்தால் ஆராய்ந்தறிகின்றானோ, அதாவது எவன் உள்ளத்தில் நீங்கள் விளங்குகின்றீர்களோ, அவனே பெரியோர்களில் பெரியோன். அப்படியிருக்க வேதத்துக்கே பிரமாணமாக விளங்கும் உங்கள் மனதில் இருக்கும் எங்கள் பெருமைக்குக் கங்குகரை ஏது ?

19. சூரியபகவான் சந்திரபகவான் இவர்களுடைய பதவியைக்காட்டிலும் மேலான பதவியில் நாங்கள் ஏற்கனவே யிருக்கின்றோம் என்பது நிச்சயம். இன்று தாங்கள் எங்களை நினைத்தமாத்திரத்தால் அப்பதவியைக்காட்டிலும் இன்னும் மேலான பதவியை அடைந்தோம் என்பது திண்ணம்.

20. தங்கள் அருட்பிரசாதம்பெற்ற நாங்கள் இப்பொழுது மிகவும் மேன்மை பெற்றவர்களாகவே மதித்துக்கொண்டிருக்கிறோம். பேரியோர்களால் அன்பு பாராட்டப் பெற்றால் நம் நற்குணங்களில் நமக்கிருக்கும் நம்பிக்கை எப்பொழுதும் அதிகப்படுவது சுபாவ மன்றோ ?

21. முக்கண்படைத்த கடவுளே, நீங்களே எங்களை நினைத்த காரணத்தால் எங்கள் உள்ளத்திலிருக்கும் ஸந்தோஷத்தை நாங்கள் வாய்விட்டுச் சொல்லவும் வேண்டுமா ? நீங்கள் எல்லாருடைய உள்ளங்களிலேயும் புகுந்து பார்ப்பவர் அன்றோ !

22. நாங்கள் இப்பொழுது தங்களை நேராகக் கண்டு விட்டோம் ; ஆனாலும் தங்களுடைய தத்துவத்தை அறிய எங்களுக்குச் சக்தி யேது ? ஆகையால் கருணைகூர்ந்து தங்களுடைய நிஜஸ்வரூபத்தைக் காட்டுங்கள். தாங்கள் புத்திக்கு எட்டாதவர்களாயிற்றே ! தங்களுடைய உருவத்தை நாங்கள் அறிய தாங்களே சொல்ல வேண்டுமன்றோ ?

23. தாங்களிப்பொழுது இருக்கும் கோலம் எல்லோருக்கும் கட்புலனாகும் பிரபஞ்சத்தைப் படைக்கும் கோலமா ; அல்லது அதை இரட்சிக்கும் கோலமா ; அல்லது அதை ஸங்காரம் பண்ணும் கோலமா. இம் மூவிதக் கோலங்களில் இது எக்கோலம் ?

24. ஒருகால் எங்கள் வேண்டுகோள் பெரும் புருஷார்த்த விசாரமா யிருக்கின்றபடியால் அதற்கு மறுமொழி அப்புறம் வாட்டும். எங்களைத் தாங்கள் நினைக்கலானீர்கள், உடனே நாங்களும் இவ்விடம் சித்தமாய் வந்துவிட்டோம்; இனி நாங்கள் நடந்துகொள்ள வேண்டியதென்ன ? அதைக் கட்டளையிடுங்கள்.

பரமசிவத்தின் மறுமொழி

25. அவ்வாறு முனிவர்கள் வேண்ட, ஈசனார் தமது தலைமேல் பிரகாசிக்கும் பிறைச் சந்திரகலையின் சிறிதே

யான காந்தியானது தமது அட்டகாஸத்தில் சோபிக்கும் பற்களின் காந்தியால் பெருக, மறுமொழி சொல்லலானுர்.

26. முனிவர்களே, நான் செய்யப்புகும் காரியம் ஒன்ருவது எனது சொந்த பிரயோஜனத்தை உத்தேசித்துப் புகும் காரியமில்லை என்பது உங்களுக்குத் தெரியுமே. நான் எனது எண்மூர்த்தி ஸ்வரூபங்களால் வெவ்வேறுருவம்கொண்டு எப்பொழுதும் உலக நன்மைக்காகவே உழைக்கின்றேன்.

27. அதிக தாகத்தால் வருந்தும் சாதகப் பறவைகள் மேகத்தினின்று மழையை வேண்டிக்கொள்வதுபோல, தங்கள் சத்துருக்களால் ஹிம்ஸை யடைந்திருக்கும் தேவர்கள் எப்பொழுதும் பிறருக்குதவி செய்வதையே நோன்பாகக் கொண்டிருக்கும் என்னிடம் வந்து, நான் ஒரு குமாரனை அவர்களுக்கு உதவிசெய்ய அளிக்கவேண்டும் என்று யாசித்தார்கள்.

28. ஹோமத்தீயை உண்டுபண்ண யஜமானன் அரணியை விரும்புவது போலத் தேவகாரியத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு ஒரு குமாரனை அடைய நான் இப்பொழுது பார்வதியை விவாகம் செய்துகொள்ள விரும்புகின்றேன்.

29. நீங்கள் ஹிமவானிடம் எனக்காகச் சென்று அக்கன்னிகையைக் கேட்கவேண்டும். பெரியவர்கள் முடித்துவைக்கும் சம்பந்தங்கள் ஒருபொழுதும் கெட்டுப் போகாவல்லவா ?

30. வெகு புகழ் பெற்றவராயும் உயர்ந்த வம்சத்தில் தோன்றியவராயும் பூமியின் பாரத்தையே வகிக்கின்றவராயுமிருக்கின்ற ஹிமவானுடன் நானிப்பொழுது சம்

பந்தம் பண்ணப்போவதை தீர்க்காலோசனை செய்து செய்யும் சம்பந்தமாகவே நீங்கள் கருதவேண்டும்.

31. அவருடைய கன்னிகை விஷயமாய் ஹிமவானிடம் எவ்வாறு கேட்கவேண்டும் என்பது நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுவதில்லை. ஏனெனில் நீங்கள் இவ்விஷயமாய் இயற்றியிருக்கும் ஸ்மிருதியையல்லவா எல்லாப் பெரியோர்களும் ஆதாரமாகக் கொண்டாடுகின்றார்கள்.

32. வெகு உத்தமியான அருந்ததியும், இந்த விவாக விஷயத்தில் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும். விவாகம் முதலிய இவ்வண்ணமான காரியங்களில் பெண்டுகள் ஸாமர்த்தியமல்லவா அதிகமாக எப்பொழுதும் ஸித்தியைக் கொடுக்கின்றது.

33. ஆகையால் நீங்கள் ஹிமவானுடைய நகரமாகிய ஓஷதிப்ரஸ்தத்துக்கு இக்காரியத்தை நிறைவேற்றி வைக்க ஏகுங்கள். மஹாகோசி என்ற நதிவிழும் இடத்தில் அவ்விமயமலையில் நாம் மறுபடி ஸந்திப்போம்.

34. யோகிகளுக்குள் முதல்வரான அவ்வீசனுரே தமது கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஆரம்பிக்கவே, பிரம்ம தேவருடைய புதல்வர்களான அத்தபஸிகள் தாங்கள் ஏற்கனவே கலியாணம் செய்து கொண்டு கிரகஸ்தாச்ரமத்திலிருக்கும் வெட்கத்தைத் துறந்தார்கள்.

35. "அப்படியே" என்று அம்முனிவர்கள் ஒப்புக்கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டார்கள். ஈசனும் தாம் ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தைப் போய்ச் சேர்ந்தார்.

36. மனதுக்கொப்பான வேகத்துடன் சென்ற அம்மாமுனிவர்கள் கத்திபோல் நீலநிறம் பெற்று விளங்கிய ஆகாயமார்க்கமாகப் பிரயாணப்பட்டு ஓஷதிபிரஸ்த நகரம் சேர்ந்தார்கள்.

ஓஷதிபிரஸ்த நகர வருணனை

37. எல்லாவித ஐசுவரியங்களும் நிரம்பி விளங்கும் குபேரன் பட்டணமாகிய அளகையை அடுத்து ஸ்வர்க்கத்திலிருந்து உமிழப்பெற்ற ஒரு நகரம் மறுபடி பூமியில் கட்டிவைக்கப் பட்டதுபோல் அவ்வோஷதிபிரஸ்தம் விளங்கலாயிற்று.

38. நாற்புறமும் கங்கையின் பிரவாகத்தால் சூழப்பட்டதாயும், மதில்களில் விளங்கும் சோதிக்கொடிகள் அமைந்ததாயும், பெரும் மாணிக்கக் கற்களால் கட்டப்பட்ட கோபுரவாசல்கள் பொருந்தியதாயுமிருந்த கோட்டையா யிருந்தபோதிலும் அந்நகரம் வெகு ரமணியமாய்ச் சோபித்தது.

39. அந்நகரத்து யானைகள் சிங்கத்தின் பயத்தை வென்றவைகள், 'அதாவது சிங்கத்தைக் காட்டிலும் அதிக பலமுள்ளவைகள் என்றபடி;' அந்நகரத்துக் குதிரைகளோ இந்திரபகவானுடைய குதிரையாகின்ற உச்சைசிரவஸ் என்ற குதிரையின் வம்சத்திலுதித்தவைகள். அந்நகரத்துப் புருஷஜனங்கள் யக்ஷர்களும் கின்னரர்களுமாகவும் பெண்டுகள் வனதேவதைகளாகவு மிருந்தார்கள்.

40. அந்நகரத்து மாளிகைகளின் உச்சியில் எப்பொழுதும் மேகங்கள் திரியாநிற்கும். அவைகள் ஒலிக்கும்போது உண்டாகும் எதிரொலி அம்மாளிகைகளில்

வாசிக்கப்படும் முரசவாத்திய நாதத்துக்கு லயம் கொடுப்பதுபோல் காணப்படும்.

41. அந்நகரத்தில் ஓங்கிநிற்கும் கற்பகத்தருக்களின் கிளைகளில் அசைந்தாடும் துணிகளே அந்நகரத்தார்கள் சிரமப்பட்டுக் கட்டாத கொடிகளாய் விளங்கலாயின.

42. அந்நகரத்தில் இராக்காலத்தில் படிகக்கற்களால் கட்டப்பட்ட மாளிகைகளின் உச்சியில் ஜனங்கள் உல்லாஸமாக உட்கார்ந்து பானம்செய்யும் பொழுது ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்கள் அப்பளிங்கு கற்களுள் பிரதிபலித்துத் தென்படுகிற தோற்றத்தால் அப்பளிங்கு பூமியில் இறைக்கப்பட்ட வெண்மலர்களாய் விளங்குகின்றன.

43. அந்நகரத்து மடந்தைகள் இருள் மண்டிய இரவுகளிலும் தங்கள் காதலரை நாடிச்செல்லும்பொழுது ஆங்காங்கு விளங்கும் சோதிக்கொடியின் ஒளியால் தாங்கள் போகும் வழி காட்டப்பட்டவர்களாய் இருளின் கொடுமை இன்னதென்றே அறியாதவர்களா யிருக்கின்றார்கள்.

44. அவ்வூரில் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த வயது என்பது யௌவனம்தான். அவ்வூராரை நாசம் பண்ணுகிறவன் மன்மதனே யல்லாது யமனல்ல; மெய்மறந்த தூக்கம் என்பது மன்மத ஸுகத்தின் சிரமத்தால் உண்டாகும் தூக்கம் ஒன்றேதான். *

* கிழத்தனம் மரணம் இவ்விரண்டும் ஓஷதிப் பிரஸ்தத்தில் இல்லை என்றபடி.

45. அவ்வூரில் இளைஞர்கள் வணங்கி வேண்டிக் கொள்வதெல்லாம் புருவம் நெறிக்க உதடு துடிக்கத் தமது அழகிய கைவிரல்களால் சுகமாய் அடிக்கும் கட்டழிகளின் கோபம் நீங்கி அவர்கள் தங்களை ஆதரித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஒன்றேதான். *

46. அவ்வூரில் சந்தன விருக்ஷத்தின் நிழலில் வித்தியாதரர்கள் என்ற வழிப்போக்கர்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள். பரிமளம் வீசும் கந்தமாதன பருவதம் அவ்வூருக்கு அடுத்த சிங்காரத்தோட்டம்.

47. அவ்வண்ணம் விளங்கிய அவ்வோஷதிபிரஸ்தத்தை அத்தேவமுனிவர்கள் கண்டவுடன் சுவர்க்க லோகத்தில் சுகம் என்று தாங்கள் அதுவரையில் கருதியிருந்தது பிசகான அபிப்பிராயம் என்று நினைக்கலானார்கள்.

48. அம்முனிவர்கள் வெகு வேகமாய் இறங்கும் பொழுது அவர்களுடைய ஜடைகள் சித்திரத்தில் எழுதப்பட்டவைபோல அசைவற்று சோபிக்க, அந்நகரத்து வாயிற்காப்போர்கள் தங்கள் தலை நிமிர்த்தித் திகைத்துப் பார்த்துக்கொண்டிருக்க, வெகு வேகமாக ஹிமவானுடைய மாளிகையை அடைந்தார்கள்.

49. பெரியோர்களும் பின் சிறியோர்களுமாய் ஆகாயத்தினின்று கீழ் இறங்கிய அம்முனி சமூகம் ஜலத்துக்குள் பிரதிபிம்பித்துக் காணப்படும் சூரியபிம்பவரிசைகள் போலும் விளங்கினது.

---

* சத்துருக்களின் கோபத்துக்குப் பயப்படுகின்றவர்கள் அங்கில்லை என்றபடி.

50. அவ்வாறு தம்மை நாடி வந்து கொண்டிருந்தவர்களும் தம்மால் ஆராதிக்கப்படவேண்டிய சிறப்பு வாய்ந்தவர்களுமான அம்முனிவர்களை ஹிமவான், தமது கரங்களில் அர்க்யம் எடுத்துக்கொண்டு, வெகு பலமாய் வைக்கப்படுவதால் பூமியையே வளையச்செய்யும் காலடி வைத்து நடந்து, வெகு தூரத்திலவர்கள் வரும்பொழுதே எதிர்கொண்டு சென்றார்.

51. நற்செங்கற் பொடியடைந்த தமது தாழ்வரைகளை செவ்வுதடாகவும் தமது தேவதாரு விருக்ஷங்களை பெருங்கைகளாகவும் இயற்கையாகத் தமக்கேற்பட்டிருக்கும் இலையே மார்பாகவும் அவர்தாமே சொல்லிக்கொள்ளாமலே ஹிமவானென்று எல்லோரும் அறிந்து கொள்ளும்படி விளங்கலானார்.

52. அவ்விமவான் சாஸ்திரப்பிரகாரம் அந்த ஸப்தரிஷிகளுக்கும் மரியாதை பண்ணி, தாமே அவர்களுக்கு வழியைக் காட்டிக்கொண்டு,வெகு பரிசுத்தமானவர்களாய் விளங்காநின்ற அம்முனிவர்களைத் தமது அரண்மனைக்குள் உபசரித்து, உள்கட்டுக்குள் அழைத்துப் போனார்.

53. அவ்விடத்தில் பிரம்பாலாகிய ஆஸனங்களில் அம்மாமுனிவர்களை ஹிமவான் இருக்கச்செய்து அவர்கள் உத்தரவுப்படி தாமும் உட்கார்ந்து அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு பின்வருமாறு பேசலுற்றார் :—

54. "முனிவர்களே ! தங்களை நான் இன்று கண்டு கொள்ளும்படி பெற்ற பாக்கியமும், நான் எதிர்பார்க்காமல் தாங்களே யிவ்விடம் வரும்படி நான் அடைந்த ஸம்பத்தும், மேகங்காணுமல் மழை பொழிந்ததுபோலும்,

பூப்பூக்காமல் பழம் பழுத்ததுபோலும் எனக்கு விளங்கு கின்றன.

55. தாங்கள் இன்று என்மேல் கருணை புரிந்த கடாக்ஷத்தால் நான் என்னை, ஒரு மூடன் திடீரென்று புத்திமானுய்விட்டால் எவ்வாறு தன்னை எண்ணிக்கொள் வானே அதுபோலும், இரும்புமயமாயிருந்த ஒரு பொருள் ஓரேநொடியில் தங்கமாய் மாறினுல் அது எவ் விதப் பெருமை அடையுமோ அதுபோலும், எண்ணிக் கொள்ளுகின்றேன்.

56. இன்று முதல் எல்லாப் பிராணிகளும் தங்கள் தங்கள் பரிசுத்தப்பதவியை வேண்டி என்னை நாடிவரும் மகிமையை நான் அடைந்துவிட்டேன். ஏனெனில் தங் களைப்போன்ற மாமுனிவர்கள் எங்கெங்கு ஒரு நிமிஷ காலமாவது வாஸம் செய்கின்ருர்களோ அவ்விடம் தீர்த் தம் என்ற மகிமையை அடைகின்ற தன்ருே ?

57. அந்தண உத்தமர்களே ! நான் பரிசுத்த மடைந் திருக்கின்றது இரண்டு மகிமையாற்ருன் என்று நான் எண்ணியிருக்கின்றேன். அவைகள் யாவை யெனில், என் தலையில் கங்கையின் பிரவாஹம் விழுவதாலும், தாங்க ளிப்பொழுது காலலம்பிய ஜலம் என் வீட்டில் விழுந்த தாலும்தான்.

58. எனக்கோ என்தேகம் இருவித அமைப்பாக விருக்கிறது. அசையும் தேகம் (ஜங்கமம்) ஒன்று ; அசையாத்தேகம் (ஸ்தாவரம்) மற்ருென்று. இவ்விரு வித தேகங்களையும் நான் உங்களுக்கு ஊழியம் செய் வதில் அமர்த்தியிருக்கின்றேன். அசையுந் தேகம் உங்க ளுக்குப் பணிவிடை ஏவல் செய்வதற்கும் அசையாத்

தேகம் உங்கள் கால் மிதிப்பதற்குமாக நீங்கள் அனுக்கிரகம் பண்ணவேண்டும்.

59. என் தேகம் எல்லாத் திசைகளிலேயும் வியாபித்து நின்றபோதிலும் உங்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று என்னிடம் இப்பொழுது பொங்கியிருக்கும், அவாவானது தங்கிநிற்கப் போதுமாக என் தேகத்திலிப்பொழுது இடமில்லை.

60. வெகு ஒளிபொருந்தி பிரகாசிக்கும் உங்கள் தரிசனத்தால் எனது குகைகளுக்குள்ளிருக்கும் இருள் அகன்றதுடன், என் உள்ளத்தில் ரஜோ குணத்தையும் தாண்டி நிற்கும் தமோகுணம் என்ற அக்ஞான இருளும் நீக்கப்பட்டது.

61. என்னுலுங்களுக்கு ஏதாவது ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கும் என்பதை நான் நினைக்க இடமே இல்லை. அப்படி ஏதாவது ஒருகாலிருக்குமாயின் அது ஏன் என்னல் முடித்துக் கொடுக்கமுடியாமலிருக்கும்? அதெல்லாம் ஒன்றுமல்ல, தாங்கள் இங்கு வந்ததெல்லாம் என்னைப் பரிசுத்தம்பண்ணி வைக்கவேண்டியே என்று நான் நினைக்கின்றேன்.

62. உங்களுக்கோ ஒன்றிலும் ஆசையேயில்லையாயினும் ஏதாவது ஒருவித அடிமைத் தொழில் செய்ய எனக்குக் கட்டளையிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில் சேவகர்கள் தங்கள் யஜமானர்கள் அதிகமாகத் தங்களை ஒரு வேலையில் ஏவினுற்ருன் தங்களிடம் யஜமானர்கள் அதிக கருணை வைத்திருப்பதாக எண்ண விடமுண்டு.

63. இதோ நானிருக்கின்றேன். அதோ என்மனைவி யிருக்கின்ருள். எங்கள் வமிசத்தின் உயிராக விளங்கும் எனது குமாரத்தியும் இதோ விருக்கின்ருள். எங்களுள் யாரைக்கொண்டு உங்களுக்கு என்ன காரியமாக வேண்டுமோ, கட்டளையிடுங்கள். இரத்தினம் முதலிய வஸ்துக்களைப்பற்றி எனக்கு அவசியமேயில்லை. எல்லாம் உங்களுடையதாகவே நீங்கள் எண்ணலாம்."

64. இவ்வாறு இமவான் சொல்லவே, அதே பொருளை மறுபடியும் இரண்டாவது தடவை எடுத்துச் சொல்லுவதுபோல் அவர் பேசின சப்தம் குகையாகின்ற முகத்தினின்று எதிரொலியால் வெளிக்கிளம்பிக் கேட்கலாயிற்று.

65. அவ்வாறு இமவான் பேசி ஓய்ந்ததும் முனிவர்கள் தங்களுக்குள் பேசுவதில் முதல்வரான அங்கிரஸரை மறுமொழி சொல்ல ஏவலானுர்கள். அவர் அம்மலைகளின் மன்னவரை நோக்கிப் பின்வருமாறு பேசலானுர்:—

66. "இதோ நான், அதோ என் மனைவி" என்று தாங்கள் சொன்ன சொற்கள் எல்லாம் உங்களுக்கே முற்றிலும் தகும். இவைகளுக்கு மேலாகவும் செய்ய உமக்கு இஷ்டமுண்டு. ஏனெனில் உமது மனம் உமது சிகரங்கள்போல் உயர்ந்து ஓங்கி நிற்கின்றது.

67. ஸ்தாவர உருவங்கொண்ட விஷ்ணுபகவான் நீங்கள் என்று கூறியிருப்பது உண்மையே.* உமது வயிற்றிலன்ருே அசைகின்றவும் அசையாதவுமான அநேக வஸ்துக்கள் தங்கியிருக்கின்றன.

* 'ஸ்தாவராணும் ஹிமாலய'—கீதை.

68. நீங்கள்மட்டும் பாதாள உலகம் முதல் பற்றி இப்பூமியின் பாரத்தைத் தாங்கிக்கொண்டு ஓங்கி நிற்காவிடில், தாமரைத்தண்டுபோல் மிருதுவாகவிருக்கும் தமது படங்களால் ஆதிசேஷன் இப்பாரத்தை எவ்வாறு தாங்கிக் கொள்ளுவார் ?

69. உமது கீர்த்திகளாகின்ற நதிகள் ஒரு இடத்திலும் குறுகாதவைகளாய், வெகு வெண்மையானவைகளாய், சமுத்திரத்தின் அலைகளாலும் தடுக்க முடியாதவைகளாய், வெகு புண்யமானவைகளாகையால் உலகத்தையே பரிசுத்தம் பண்ணுகின்றவைகளாய், விளங்குகின்றன. அப்படியே உமது ஸந்ததிகளும்.

70. கங்கைக்கு விஷ்ணு பாதத்திலிருந்து பெருகுவதால் எவ்வளவு மகிமை உலகத்தாரால் சொல்லப்படுகின்றதோ அவ்வளவு மகிமை மறுபடியும் இரண்டாவது தடவை உம்மிடமிருந்து உதிப்பதால் அக்கங்கை அடைந்திருக்கின்றதன்றோ. *

71. குறுக்கும் நெடுக்கும் கீழுமாய் விஷ்ணுபகவான் வியாபித்தார் என்ற மகிமை திரிவிக்கிரமாவதாரம் எடுத்தபொழுது அவருக்கு விளங்கலாயிற்று. அவ்வித மகிமை உம்மிடத்தில் எப்பொழுதும் இயற்கையாகவே யிருக்கின்றதல்லவா.

72. யாகத்தில் கொடுக்கப்படும் யஜமான பாகம் வாங்கிக்கொள்ளும் யோக்கியதை (இந்திராதிகளுக்குப் போல) உமக்கே யிருக்கின்றமையால் மேருவுக்குப்

---

* ஆகையால் நீங்கள் எங்களைப்போன்ற முனிவர்கள் நாடி வரவேண்டிய தீர்த்த ரூபமுள்ளவர் என்றபடி ; விஷ்ணு சரணத்துக் கொப்பானவர் என்றபடியுமாம்.

பெருமையான தங்க சிகரம் கிடைத்தும் பிரயோஜனமற்ற தாய்ப் போயிற்றன்றோ. *

73. உமது கடின குணங்கள் எல்லாவற்றையும் உமது ஸ்தாவர சரீரத்தில் (இலை முதலியவைகளில்) விட்டிருக்கின்றீர். நல்லோர்களுக்குப் பணிவிடை செய்ய பக்தியானல் வணங்கி நிற்கும் இச்சரீரத்தில் அவைகள் ஒன்றுமில்லையன்றோ.

74. ஆகையால் நாங்களிப்பொழுது வந்திருக்கும் காரியத்தைக் கொஞ்சம் சொல்லுகின்றோம் கேளுங்கள். அது தங்களுக்குத்தான் முக்கியமான காரியம். உமக்குப் பெருமை கிடைக்கும் வழியைச் சொல்லப்புகுவதால் இக்காரியத்தில் நாங்கள் ஸம்பந்தப் பட்டவர்களாகின்றோம். †

75. எவரொருவர் பாலசந்திரனை வஹிப்பதுடன், மற்றவிதப் பொருளை ஒருபொழுதும் குறிக்காது அணிமா முதலிய எண்வித ஐசுவரியமும் நிரம்பி விளங்குபவர் என்னும் பொருளையே குறிக்கும் ஈசுவரன் என்ற பதத்தையும் வஹித்திருக்கின்ருரோ,

76. ஒன்றுடன் மற்றொன்று பரஸ்பரம் இணங்கும் சாமர்த்திய முள்ளவைகளாய், பிருதிவீ, அப்பு என்ற எண்ணுருவம் கொண்டவைகளாய்க் காணப்படும் எண்

---

* மேருவுக்குத் தங்க சிகரம் இருந்தும் நீர்தான் பெரியவர் என்று முனிவர்கள் இமவானைப் புகழ்ந்தபடி ; அதற்கு ஆதாரமாக யக்ஞயாகம் இமவானுக்காகையால் அவர்தான் பெரியவர் என்று அங்கிரஸர் எடுத்துக் காட்டலானர்.

† பயனை அனுபவிக்கப் போகிறவர்கள் நீங்கள்தான் என்றபடி.

மூர்த்திகளால் (அஷ்டமூர்த்தி) எவரொருவர் நமது கண்ணுக்குப் புலனாகும் இவ்வுலகத்தை, வழியில் ரதத்தைக் குதிரைகள் வகிப்பதுபோல, வகிக்கின்றாரோ,

77. எவரொருவரை யோகிகள் பரமாத்ம ஸ்வரூபி என்று தேடிக்கொண்டும் வித்வான்கள் மறுபிறப்பை நீக்கி வைக்கும் வழி என்று சொல்லிக்கொண்டும் இருக்கின்றார்களோ,

78. அவ்வீசுவரர், இவ்வுலகத்தில் நடக்கப்பட்ட எல்லாவித நடவடிக்கைகளுக்கும் சாட்சியா யிருப்பவர் எங்களிடம் ஸமாசாரம் சொல்லியனுப்பி உங்கள் கன்னிகையைத் தமக்கு விவாகம் செய்துகொடுக்கக் கேட்கின்றார்.

79. மொழியின் பொருளை மொழியுடன் சேர்த்து வைப்பதுபோல் உமது பெண்ணை நீங்கள் சம்புவுடன் சேர்த்து வைக்கக் கடவீர்களாக. நல்ல புருஷனிடம் ஒப்பிவைக்கப்பட்ட கன்னியின் விசாரம் தந்தைக்கு நீங்குமன்றோ!

80. சராசரங்களாய் இவ்வுலகத்தி லிருக்கும் எல்லா வஸ்துக்களும் உமது குமாரியை ஒரு தாயாகக் கருதட்டும். ஏனெனில் ஈசன் இவ்வுலகத்துக்கே தந்தையல்லவா?

81. தேவர்கள் முதல் முதல் ஈசனுக்கு வணங்கி அதன் பின்னர் தங்கள் கிரீடக்காந்தி உமது கன்னிகையின் பாதங்களில் பரவ அவ்வம்மணிக்கு வணங்கட்டும்.

82. கலியாணப் பெண்ணோ உமை; அப்பெண்ணைக் கன்னிகாதானம் பண்ணிக்கொடுப்பவரோ நீங்கள்; பெண்ணைக் கேட்க வந்தவர்களோ ஸப்த ரிஷிகளாகிய நாங்கள்;

மாப்பிள்ளையோ ஜகதீசன் ; —இவைகளிவ்வளவும் உமது குலத்தின் பெரும் சிறப்புக்காக அமைந்த வன்றோ'

83. தாம் ஒருவரையும் புகழாது மற்றெல்லோராலும் புகழப்பட்டவராய், தாம் ஒருவரையும் வணங்காது மற்றெல்லோராலும் வணங்கப்பட்டவராய், இவ்வுலகம் முழுமைக்கும் குருவாய், நிற்கும் ஈசனுக்கு உமது பெண்ணைக் கொடுப்பதால் நீங்களும் குருவாகும் பெருமையை அடையுங்கள்."

84. இவ்விதமாய் மாமுனிவர்கள் சொல்லிக் கொண்டிருந்த பொழுது இமவானுக்குச் சமீபத்தில் கீழ் நோக்கின முகத்துடன் நின்றுகொண்டிருந்த பார்வதி விளையாட்டாக ஒரு தாமரைமலரைத்தனது கையில்பற்றி அதிலிருந்த இதழ்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

85. இமவான் தமது மனோரதம் நிரம்பிற்றென்று கருதிக்கொண்டபோதிலும் தமது மனைவியாகிய மேனையின் முகத்தைப் பார்க்கலானார். கன்னிகளைக் கலியாணம் செய்து கொடுக்கும் விஷயத்தில் புருஷர்கள் பெரும்பாலும் தங்கள் மனைவிகளுடைய நோக்கப்படி செய்கின்றவர்களன்றோ !

86. மேனையும் தனது கணவன் மனோரதங்கள் எல்லாம் சரிவர நிரம்பியதாக எண்ணினாள். உத்தமிகள் தங்கள் கணவர்கள் மனத்தின் நோக்கப்படி நடந்து அவ்வாறே நடக்கும் குணமுள்ளவர்களல்லவா !

87. இனிமேல் நாம் செய்யவேண்டிய காரியம் இது தான் என்று இமவான் தமது உள்ளத்தில் கருதி தாம் பேசி முடித்ததும்,மங்கல சிங்காரம் செய்துகொண்டிருந்த தமது பெண்ணைக் கையால் எடுத்துக்கொண்டு,

88. "குழந்தாய்! வா. இங்கு நான் உன்னை ஜகதீசனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க நிச்சயித்துவிட்டேன். உன்னைக் கேட்க மாமுனிவர்கள் வந்திருக்கின்றார்கள். இன்றுதான் கிருகஸ்தன் அடைய விரும்பும் கன்னிகாதான பயனை நான் அடைந்தேன்."

89. என்று பார்வதியிடம் சொல்லி, முனிவர்களை நோக்கி, இமவான் "முக்கண்ணருடைய மனைவி உங்கள் எல்லாரையும் இதோ வணங்குகின்றாள்" என்றார்.

90. அவ்வாறு இமவான் சொல்லவே, தாங்கள் கருதிவந்த காரியத்தை அவ்வண்ணம் மேன்மையாகச் செய்து முடித்ததற்கு முனிவர்கள் அவரைத் துதித்து எப்பொழுதும் முன்னிற்கும் பயனுடன் கூடியவைகளான ஆசீர்வசனங்களை அம்பிகையை உத்தேசித்து முனிவர்கள் விடுத்தார்கள்.

91. தான் அவ்வாறு நமஸ்காரம் செய்யும்பொழுது தனது காதிலணிந்த தங்கக்குண்டலங்கள் நழுவவிளங்கிய பார்வதியை, அருந்ததீ தேவி, பார்வதி என்ன வெட்கப்பட்டபோதிலும், தூக்கித் தமது மடியின் மேல் உட்காரவைத்துக் கொண்டார்.

92. தமது பெண்ணைவிட்டுப் பிரிந்து போகப் போகின்றோம் என்ற எண்ணத்தால் கொஞ்சம் துக்கத்துடன் கண்களில் நீர்த்ததும்ப காணப்பட்ட மேனையை "பயப்படவேண்டாம். மற்றொரு மடந்தையை நாடாத மாப்பிள்ளை கிடைத்தார்" என்று சொல்லி அருந்ததி ஆற்றலானாள்.

93. மாவுரி உடுத்த அம் மாமுனிவர்களை இமவான் என்று முகூர்த்தம் வைத்துக்கொள்ள விடைகொடுக்கின்

நீர்கள் ?' எனவே அவர்கள் 'இன்றைக்கு நான்காம் நாள்' என்று சொல்லி அவ்விடம் விட்டுப் பிரயாணப்பட்டார்கள்.

94. ஸப்தரிஷிகள் அவ்வண்ணம் இமவானிடம் விடைபெற்றுப் புறப்பட்டு, மறுபடியும் சிவபெருமானிடம் வந்து, தாங்கள் போன காரியத்தை முடித்து வந்ததாக அவரிடம் சொல்லி, அவரிடம் விடைபெற்று, ஆகாய மார்க்கமாய்த் தங்களுடைய இருப்பிடத்துக்குச் சென்ருர்கள்.

95. பார்வதியைச் சீக்கிரம் அடைய அதிக அவாவுடனிருந்த ஈசனும் அம்மூன்று நாட்களையும் வெகு சிரமத்துடன் கழிக்கலானுர். இவ்விதமான ஆசை ஐம்புலன்களையும் வெற்றிகொண்ட ஈசனையே வாட்டிற்றென்ருல் மற்றெவனைத்தான் வதைக்காமல் விடும் ?

ஏழாவது சருக்கம்


உமையின் விவாகம்

1. அம்மூன்று நாட்களும் கழிந்தபிறகு சுக்கில பட்சத்திதியில் பார்வதியின் ஜன்மலக்கினத்திலிருந்து ஏழாவது லக்கினங்கூடிய சுபமுகூர்த்தத்தில் தமது பந்துக்களுடன்கூட இமவான் தமது பெண்ணின் கலியாண ஸம்ஸ்காரத்தை விதிப்படி ஆரம்பிக்கலானார்.

2. அவ்வோஷதி பிரஸ்தத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஸ்திரீகள் தாங்கள் பார்வதியின்மேல் வைத்திருந்த அபிமானத்தால் அவள் கலியாணத்துக்கு என்று நடந்த வேண்டிய ஸந்தோஷகாமான அலங்காரங்களை நடத்துவதிலேயே மெய்ம்மறந்திருந்தார்கள். அந்நகாத்தில் குடிகள் தங்கள் அரசரிடம் அதிக அன்பு பாராட்டி வந்தவர்களாகையால் அரண்மனைக்கும் மற்ற வீடுகளுக்கும் கலியாண அலங்கார விஷயத்தில் ஓர்வித வித்தியாஸமு மில்லாமலிருந்தது.

3. ராஜ வீதிகளெல்லாம் மந்தாரை மலர்கள் பரப்பப்பட்டும், உயர்ந்த பிரதேசங்கள்தோறும் கொடிகள் தூக்கிக் கட்டப்பட்டும்,பிரகாசிக்கின்ற தங்கத் தோரணங்கள் எங்கும் விளங்கவும், அந்நகரம் அன்று தன்னிடம் விட்டு அங்குவந்த சுவர்க்கலோகம்போல் காணலாயிற்று.

4. இமவானுக்கு குஞ்சு குழந்தைகள் பார்வதி ஒருத்தியே என்றாலும்,அவள் விவாகசமயம் ஸமீபிக்கவே அவள் அக்காலத்தில் வெகுநாள் பிரிந்தபின் காணப்



உமாமஹேசுவர விவாகம்

பட்ட குழந்தைபோலும், உயிர்போய்த் திரும்பிப் பிழைத்த பெண்போலும் இமவானுடைய அதிக அன்புக்குப் பாத்திரமானுள்.

5. பார்வதியை ஒவ்வொரு பதிவிரதையும் தங்கள் மடியில் உட்காரவைத்து ஆசிர்வாதம் பண்ணலானுள். நகையின்மேல் நகை அவளுக்கு ஸன்மானம் வரலாயிற்று. இமவான் வம்சத்தைச் சேர்ந்த பந்துக்களுக்கு வெவ்வேறு குழந்தைகள் இருந்தனவென்ருலும், எல்லாப் பந்துக்களுடைய அன்பும் பார்வதியினிடம் ஒரே விதமாக விளங்கலாயிற்று.

6. சூரியோதயமான மூன்ருவது முகூர்த்தத்தில் சந்திரனுடன் உத்திரபல்குன நக்ஷத்திரம் சேர்ந்திருந்த சமயத்தில் அநேக குழந்தைகளைப் பெற்றெடுத்த தீர்க்க சுமங்கலிகள் பார்வதியின் மேனியைச் சிங்காரிக்க ஆரம்பித்தார்கள்.

7. பார்வதி வெண்கடுகு அமைந்து அருகம்புல் கலந்து வைக்கப்பட்டிருந்த பட்டாடையை இடுப்பில் உடுத்து, கையில் வில்பற்றி * மங்கலஸ்நானத்துக்காகச் சிங்காரம் பண்ணிக்கொண்ட பொழுது அச்சிங்காரத்துக்கே இவள் ஒரு அழகாக விளங்கினுள்.

8. கலியாணக் கோலத்துக்காக வென்று பார்வதி வழக்கப்படி வில் ஒன்றைக் கைப்பற்றியபொழுது சுக்ல பக்ஷத்தின் ஆரம்பத்தில் சூரியனுடைய கரத்தால் (கிரணத்தால்) விருத்தி அடைகின்ற சந்திரரேகைபோல் விளங்கலானுள்.

---

* ராஜகன்னிகைகள் விற்பிடித்து ஸ்நானம் செய்யவேண்டும் என்பது விதியாம்.

9. ஸுமங்கலிகள் பார்வதியை மங்கலதைலம் தேய்த்து அதன்மேல் லோத்திரப் பொடிபூசி குளிப்பாட்டி அவள் மேனியில் உயர்ந்த வாசனைப்பொடி பூசி ஸ்நானத்திற்குத் தக்க ஆடையுடன் ஸ்நானம் செய்யும் அறைக்குள் அழைத்துப் போனார்கள்.

10. அங்கு நல்முத்து மாலைகள் அழகாய் எங்கும் தொங்கிக்கொண்டிருந்த வைடூரிய பீடத்தில் பார்வதியை உட்காரச்செய்து மங்கல வாத்யங்கள் கோஷிக்கப் பொற்குடங்களில் ஏற்கனவே எடுத்து வைக்கப்பட்டிருந்த தீர்த்தங்களால் அவ்வுத்தமிகள் அம்பிகைக்கு ஸ்நாநம் பண்ணி வைத்தார்கள்.

11. மங்கல ஸ்நாநத்தால் வெகு பரிசுத்தமான மேனியுடன் விளங்கிக்கொண்டும், மணக்கோலத்துக்கேற்ற ஆடையையணிந்தும் நின்ற பார்வதி, மேகங்கள் நன்றாக மழைபொழிந்து ஓய்ந்தவுடன் அழகாய் நாணற்பூத்து விளங்கும் பூ பிரதேசம் போல் சோபிக்கலானாள்.

12. ஸ்நாநஞ்செய்த விடத்திலிருந்து அம்மடந்தைகள் பார்வதியைத் தங்கள்மேல் அணைத்துக்கொண்டு ஏற்கனவே மேற்கட்டி கட்டப்பட்டு மாணிக்க ஸ்தம்பங்கள் நான்கு நாட்டப்பட்டு மங்களாஸனம் போடப்பட்டுக் கலியாண சடங்குகள் நடத்த திட்டாணி கட்டப்பட்டு விளங்கிய முகூர்த்தப்பந்தலில் அழைத்துவந்து உட்கார வைத்தார்கள்.

13. பார்வதியைச் சிங்காரிக்க நியமிக்கப்பட்டிருந்த பெண்டுகள் அக்கலியாணவேதிகையில் பார்வதியைக் கிழக்குமுகமாக உட்காரவைத்து, அவள் முன்பாக நின்று எல்லாவித ஆபரணங்களும் தங்களிடம் சித்தமாயிருந்த

போதிலும் அவளுடைய இயற்கையான அழகானது அவைகளை எல்லாம்விட அதிகரித்திருந்தபடியால் கண்கள் கூச்சலடைந்தவர்களாய் இன்ன ஆபரணத்தைக் கொண்டு அவளை இன்னும் அதிக அழகாக்கலாம் என்பது தெரியாமல் ஒரு நிமிஷம் திகைக்கலானார்கள்.

14. ஒரு சுமங்கலி வாசனைப்புகை ஏற்றிப் பார்வதியின் தலைமயிரை உலர்த்தி அறுகம்புல்லும் வெண் மதூக மலரும் பின்னலில் வைத்து வெகு அழகாகப் பார்வதியின் கூந்தலைப் பின்னலானாள்.

15. வெள்ளகிற் குழம்பைப் பூசிய பார்வதியின் மேனியில் சில மடந்தைகள் வாஸனைச் சாந்தால் சித்திர மெழுதலானார்கள். அவ்வாறு சிங்காரிக்கப்பட்ட பார்வதியின் தேகம் சக்கிரவாகப் பறவைகள் உட்கார்ந்திருக்க சோபிக்கும் கங்கையின் மணற்குன்று களைவிட அதிக சோபையுடன் விளங்கிற்று.

16. கூந்தல் சிங்காரிக்கப்பட்ட அழகு பெற்ற பார்வதியின் முகமானது வண்டு உட்காரப்பெற்றுச் சோபிக்கும் தாமரை மலரையும் மேகரேகையால் கொஞ்சம் மறைக்கப்பட்டுச் சோபிக்கும் சந்திரபிம்பத்தையும் அழகினால் கீழ்ப்படுத்தியதென்றால் அதற்கு அழகில் ஒப்பிட்டுக் கூற ஒன்றுமே யில்லாமலிருந்தது என்று சொல்லலாம்.

17. 'லோத்திர'ச் சாந்தால் முதல் முதல் பரிசுத்தமாகப் பண்ணப்பட்டு, கோரோசனைச் சாந்துப்பூச்சால் அதிகமாய்ச் சிவந்திருந்த பார்வதியின் கன்னங்களில் அவள் காதுகளின்மேல் வைக்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்த யவாங்குரங்கள் (நாற்றுகள்) தங்களுக்குள்ள

நிறத்தைக்காட்டிலும் மேலான நிறம் அடைந்திருந்த படியால் பார்ப்பவர்கள் கண்களைப் பறிக்கின்றவைகளாய் விளங்கின.

18. வயிற்றில் அழகாய் மடிப்புகள் வாய்ந்து வெகு புஷ்டியுடன் விளங்கிய பார்வதியின் உதடுகளோ தேன் மெழுகால் தடவப்பட்டதும் தங்கள் இயற்கை நிறத்தினின்று கொஞ்சம் மாறி படபடவென்று துடிக்கும் பொழுது அம்மாது சிரோன்மணி அடைந்திருந்த இளமைப்பருவத்தின் பயன் சமீபித்தது என்பதைத் தெரிவிக்கலாயின.

19. அப்பார்வதியின் தோழிகள் அவள் பாதங்களைச் செங்குழம்பு ரஸத்தால் அலங்காரம் செய்யும் பொழுது பரிகாசமாய் 'உன் கணவருடைய தலையிலிருக்கும் சந்திரகலையை இப்பாதங்களினால் நீ உரைவாயாக' என்று ஆசிர்வசனத்துடன் சொன்ன பொழுது பார்வதி வாயைத்திறவாமல் தனது கையிலிருந்த புஷ்பஹாரத்தால் அவர்களை அடிக்கலானாள்.

20. பார்வதிக்குக் கண்களில் மையிடவந்த மடந்தை நன்றாக மலர்ந்திருக்கும் கருநெய்தற் பூவின் இதழ்போல் பிரகாசித்த அவளுடைய கண்களின் அழகைக்கண்டு திகைத்து, அவளுடைய கண்களுக்கு அதிக அழகை உண்டாக்குவதற்காக அம்மையிடவேண்டும் என்ற நோக்கம் ஒழிந்து கலியாணக் கோலத்துக்காகச் செய்யவேண்டிய மங்கலமான அலங்காரங்களில் அதுவும் ஒன்று என்று செய்யலானாள்.

21. ஆபரணங்களினால் நன்றாகச் சிங்காரிக்கப்பட்ட பார்வதி மலர்ந்து கொண்டிருக்கும் மலர்களினால் கொடி

எவ்வாறு விளங்குமோ அதுபோலும், உதயமாகும் நட்சத்திரங்களினால் இரவு எவ்வண்ணம் சோபிக்குமோ அதுபோலும், வந்து கரைகளோரம் உட்கார்ந்துகொண்டிருக்கும் நீர்ப்பறவைகளால் நதி எவ்வாறு சோபிக்குமோ அதுபோலும் சோபிக்கலானாள்.

22. பார்வதி கண்கொட்டாதபடி நிலைக்கண்ணாடியில் வெகு சோபையுடன் விளங்கும் தனது அழகைப் பார்த்துகொண்டு சிவபெருமான் எப்பொழுது வரப்போகின்றார் என்று மனத்தினுள் அவஸரப்படலானாள். உத்தமிகள் தங்கள் மேனியைச் சிங்காரித்துக்கொள்ளுவதன் பயன் அவ்வாறு சிங்காரித்துக்கொண்டிருக்கையில் தங்கள் அன்பன் தங்களைப் பார்க்கவேண்டும் என்பது ஒன்றேதான்.

23-24. அப்பொழுது மேனா, மங்கலார்த்தமாய்க் குழைத்து வைக்கப்பட்டிருந்த ஹரிதாலச்சாந்தையும் மனச்சிலைச் சாந்தையும் தமது நடு விரலால் குழைத்தெடுத்துக்கொண்டு, வெள்ளைத்தந்த ஓலையிட்டு விளங்கிய பார்வதியின் முகத்தைக் கொஞ்சம் நிமிர்த்தி, பார்வதிக்கு அறிவு தெரிந்த காலமுதல் தனது மனதில் எக்காலத்திலும் விடாநினைவாயுள்ள கலியாணக் கோலத்திற்கிடும் தீக்ஷாதிலகத்தைத் தமது பெண்ணின் நெற்றியில் இடலானாள்.

25. அதன் பிறகு மேனா பார்வதியின் மணிக்கட்டில் கலியாணக் கங்கணமாகிய சர்ட்டைக் கட்ட ஆரம்பித்துத் தமது கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகவே கட்டவேண்டிய இடம் மாறி அந்தச்சாட்டை வைக்கவும் தாதி அதைத் தன் கைவிரலால் சரியான

இடத்தில் நகர்த்தவே அந்த மணிக்கட்டில் கட்டி முடிக்க லானுள்.

26. பார்வதி புதிய வெண்பட்டாடை தரித்து தம் மேனியைக் கண்ணுடியில் பார்த்துக் கொண்ட பொழுது நுரைத்திரள் நிரம்பிய பாற்கடற்கரைபோலும் பூர்ணசந்திரன் கூடிவிளங்கும் சரத்கால ராத்திரிபோலும் சோபிக்கலானுள்.

27. எச்சமயத்தில் எது செய்துவைக்க வேண்டுமோ அதைச் செய்துவைப்பதில் வெகு சாமர்த்தியமுள்ள மேனை தமது குலத்துக்கே கீர்த்தி விளைவிக்கத் தோன்றி யிருந்த பார்வதியைத் தாம் எப்பொழுதும் பூஜை செய் யும் குலதேவதைகளுக்கு நமஸ்காரம் பண்ணும்படி செய்வித்து அதன் பிறகு பதிவிரதைகளுக்கும் நமஸ் காரம் செய்யும்படி பார்த்தாள்.

28. அவ்வுத்தமிகள் உமை தங்களை வணங்கின போது "உனது கணவருடைய அன்பு உன்னிடம் ஒரு நாளும் குறையாத அன்பாக இருக்கக்கடவது" என்று ஆசிர்வாதம் பண்ணலானுர்கள். ஆனுல் அச்சிவபெருமா னுடைய பாதி சரீரத்தையே பிற்காலத்தில் தன்னுடைய தாகச் செய்துகொண்ட பார்வதி அவ்வாறு தனது பந்து ஜனங்கள் அப்போது தனக்குச் செய்த ஆசீர்வாதத்துக் கும் மேலான பதவியை யடைந்தாளன்றே!

29. வெகு சமர்த்தரான இமவான் தம் மனத்தின் உற்சாகத்துக்குத் தக்கபடிக்கும் தமது சம்பத்துக்கு ஏற்றபடிக்கும் தாம் அச்சமயத்தில் பார்வதிக்குச் செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து முடித்து, தமது நல்லோர்களான நண்பர்கள் நிரம்பிய சபை நடுவே

உட்கார்ந்து சிவபெருமானுடைய வரவை எதிர்பார்க்கலானர்.

30. இவ்வண்ணம் உமைக்குச் சிங்காரம் நடந்துகொண்டிருந்தபொழுது, கைலாயத்தில் சிவபெருமானுடைய கல்யாணத்துக்குத் தக்கபடி அவர் சிங்காரம் செய்துகொள்ள பிராஹ்மி முதலான ஸப்தமாதர்களும் சில அலங்கார சாமக்கிரியைகளைக் கொண்டுவந்து முப்புரத்தை முன்பு எரித்த அவர் முன்பாக வைக்கலானர்கள்.

31. அவ்வாறு அவர்கள் கொணர்ந்து வைத்தார்கள் என்ற கௌரவத்தால் சிவபெருமான் அவ்வலங்காரத் திரவியங்களைத் தமது கையால் தொட்டார். (தரிக்கவில்லை என்றபடி). ஆனல் ஸர்வேசுவானுயிருக்கும் அச்சிவபெருமானுடைய விபூதி கபாலம் முதலிய வேஷதாரணங்களே கலியாணம் செய்துகொள்ளப்போகும் மணக்கோலமாக மாறலாயின.

32. அவரது திருநீற்றுப்பூச்சே அழகான சந்தனப்பூச்சாகவும் அவரிடமிருந்த மண்டையோடே அழகான கிரீடமாகவும் அவர் உடுத்திருந்த யானைத்தோலே ஓரங்களில் அன்னப்பறவைப் பூப்போட்டிருந்த வெண்பட்டாகவும் மாறின.

33. ஈசனுருடைய நெற்றியின்நடுவில் சிவப்பு நிறத்துடன் வெகு அழகாக விளங்கிய அக்கினியாகிய மூன்றுவதுகண் அவர் அக்காலத்துக்குத் தக்கபடி தரிக்கவேண்டிய அழகான பச்சை நிறமான திலகமாக மாறிற்று.

34. ஈசனர் தமது மேனியில் அணிந்திருந்த பாம்புகளின் உடல்கள் மட்டும் வெவ்வேறு நகைகளாக மாறின.

அவைகளின் சிரோமாணிக்கங்கள் மட்டும் அப்படியே உருமாறுமல் மாணிக்கங்களாகவே விளங்கலாயின.

35. பகலிலும் தனது கிரணங்களின் காந்திகளை வெளிவீசிக்கொண்டும் எப்பொழுதும் இளஞ் சந்திரனுகையால் களங்கம் என்பது ஒருபொழுது மில்லாமலும் விளங்கும் சந்திரனையே தமக்கு மகுடமாகத் தரிக்கும் ஈசனுருக்கு வேறு மகுடம் தேடுவது அனுவசியமாக விருந்தது.

36. இவ்வாறு தமது ஆச்சரியகாமான மகிமையால் புகழ்பெறும் சிங்காரங்களை அமைப்பிக்கும் வல்லமை வாய்ந்த ஈசனுர், தாம் தமது மேனியில் செய்துகொண்ட சிங்காரத்தைத் தமது கணங்கள் கொணர்ந்த கத்தியில் பிரதிபிம்பித்த தமது மேனியில் பார்த்துக்கொள்ளலானுர்.

37. அதன்பின்பு அவர் நந்திகேசுவரர் கையைப் பற்றிக்கொண்டு, புலித்தோல் போர்த்து கொழுத்துப் பெருத்து விளங்கிய தமது விருஷபத்தின் முதுகில் அது பாமபக்தியால் குனிந்து கொடுக்கக் கைலைமலையின்மேல் எறுவதுபோல் எறிப் பிரயாணப்படலானுர்.

38. எழு தாய்மார்கள் அவரைப் பின்தொடர்ந்து தங்கள் தங்கள் வாகனங்களில் எறிச்சென்று வாகனங்கள் அசையும் பொழுதெல்லாம் தங்களுடைய காது குண்டலங்களும் அசையத் தங்களுடைய இயற்கையான ஒளியின் கிரணங்களால் வெகு சிவப்பாகக் காணப்படும் தங்கள் முகங்களால் ஆகாயத்தையே ஒரு தாமரை ஓடைபோல் விளங்கச் செய்துகொண்டு புறப்படலானுர்கள்.

39. பொன்னின் நிறம் போன்றவர்களாய் விளங்கிய அவர்களின் பின் காளி வெண்ணிறமான மண்டையோடுகளையே தமது குண்டலங்களாக வணிந்து வந்த தானது மின்னற்கொடி தனக்குமுன் வீசவும், பின் கொக்குக்கூட்டம் பறக்கவும் காணப்படும் கார்மேகம் போல் விளங்கிற்று.

40. சிவபெருமானுக்கு முன்னிட்டுச் சென்றுகொண்டிருந்த அவருடைய பிரமதகணங்கள் கோஷித்த வாத்தியங்கள் தங்கள் தங்கள் விமானங்களில் வந்து காத்துக்கொண்டிருந்த தேவர்களுக்கு அவ்விமானங்களில் இக்கோஷம் மோதிய காரணத்தால் ஈசனுரைத் தர்சனம் செய்யக் காலம் இது என்று தெரிவிக்கலாயின.

தேவர்கள் ஈசனுரைச் சேவித்தல்

41. விசுவகர்மாவால் புதிதாகப் பண்ணப்பட்ட ஓர் குடையை ஆயிரம் கிரணங்களமைந்த சூரிய பகவான் ஈசனுர் தலைக்குமேல் பிடிக்கலானுர். அக்குடையிலிருந்து தொங்கின வெண்பட்டு முனைகள் ஈசனுர் தலைக்குச் சமீபத்திலிருந்தமையால் அவர் தலையின்மேல் இறங்கும் கங்கையில் அலைகள் போலும் விளங்கின.

42. அச்சமயத்தில் கங்கையும் யமுனையும் ஸமுத்திரத்தை நோக்கிச் செல்லும் தங்கள் ஓட்டத்தைவிட்டு அன்னநடை நடந்துகொண்டு கைகளில் சாமரம்பற்றி ஈசனுருக்குச் சாமரம்போடலானுர்கள்.

43. ஈசனுர் முன்பாகப் பிரமதேவரும் விஷ்ணுவும் வெற்றியுண்டாவதாக வென்று விருது கூறிக்கொண்டு அவிஸினுல் அக்கினியை வளர்ப்பதுபோல் ஈசனுர் மகிமையைப்பெருகச் செய்துகொண்டு செல்லலானுர்கள்.

44. பரமாத்ம ஸ்வரூபியாகிய ஈசனுரே தமது ஒரே உருவத்தை மூவுருவாகப் பிரித்துக்கொண்டாரன்றே! தோற்றத்தால் மும்மூர்த்திகளேயன்றி உண்மையில் அவ்வாறன்று ; ஆகையாற்ருன் இம்மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தி, கடைமூர்த்தி என்பது கிடையாது. சில சமயத்தார்கள் விஷ்ணுவுக்குச் சிவன் முன் என்றும், சிவனுக்கு விஷ்ணு முன் என்றும், அவ்விருவர்களுக்கும் பிரமன் முதல்வர் என்றும், அவ்விருவர்களும் பிரமதேவருக்கு முன் என்றும் இவ்வாருகச் சொல்லிக்கொள்ளும் வழக்கம் தெரியாத்தனத்தாலேயே.

45. இந்திரன் முதலிய லோகபாலர்கள் தங்கள் பதவிக்கு அமைந்திருக்கும் பெருமிதங்களைவிட்டு வெகு வணக்கத்துடன் வந்து நந்திகேசுவரரிடம் தங்களுக்குச் சிவபெருமான் சேவை கிடைக்கவேண்டும் என்று முதல் முதல் வேண்டிக்கொண்டு அப்படியே அந்த நந்திகேசுவரர் 'இதோ இந்திரர் நமஸ்கரிக்கின்ருர், இதோ சந்திரர்' என்று ஒவ்வொருவருக்கும் தர்சனம் காட்டுவிக்க அவர்கள் வணங்கிக் கைகூப்பிக்கொண்டு நிற்கலானுர்கள்.

46, பிரமதேவரைப் பார்த்துத் தமது தலையை அசைத்தலாலும், விஷ்ணுவிடம் பேசலாலும், இந்திரனைப் பார்த்துப் புன்னகை செய்தலாலும், மற்ற தேவர்களை எல்லாம் கண்ணை எடுத்து ஸந்தோஷமாகப் பார்த்தலாலும் ஈசனுர் அவரவர்களை அவரவர்களுக்கேற்றபடி மரியாதை செய்யலானுர்.

47. ஈசனுர் முன்பாக ஸப்தரிஷிகளும் வந்து நின்று வெற்றி உண்டாகக்கடவது என்று ஆசீர்வாதரூபமாகச் சொல்லலானுர்கள். அவர்களை ஈசனுர் புன்

சிரிப்புடன் பார்த்து "இப்பொழுது நடக்கப்போகும் இக் கலியாணமாகிய யக்ஞத்திற்கு உங்களை நான் ஏற்கனவே ரித்துவிக்குகளாக வரித்திருக்கின்றேன் அல்லவா" என்று சொன்னார்.

48. விசுவாவஸு முதலான தேவபாடகர்கள் ஈசனார் முப்புரத்தை எரித்த விபவத்தைப்புகழும் கீர்த்த னங்களைத் தங்கள் பெயர் பெற்ற வீணைகளில் பாடவே அக்யான இருளால் ஒருபோதும் அடைய முடியாத சந்திரசேகரக் கடவுளிடம் சேரும் வழியைக் கடக்க லானார்கள்.

49, பொன்மணிகள் ஒலிக்கவும், கார்மேகங்கள் கொம்புகளில் அப்பிக்கொண்ட சேறுபோல் விளங்கவும் அவ்விருஷபம் சிவபெருமானைத் தமது முதுகில் வகித் துக்கொண்டு ஆகாயத்தில் அழகாய் நடந்து தமதுகொம்பு களை அடிக்கடி அசக்கிக்கொண்டு சென்றது.

50. இதுவரையில் ஒரு சத்துருவாலும் தடை படாதபடி ஹிமவானால் பாதுகாக்கப்பட்டிருந்த அவ்வோ ஷதிபிரஸ்த நகாத்துக்கு அவ்விருஷபம் ஒரு முகூர்த்த நேரத்துக்குள்,சிவபெருமானைக் காணவேண்டி ஆவலுடன் காத்திருந்த ஜனங்களுடைய பார்வைகளாகிற பொன் கயிறுகளால் இழுக்கப்பட்டது போல், வந்துசேர்ந்தது.

51. அவ்வோஷதிபிரஸ்தத்துக்குச் சமீபத்தில் கார் மேகம்போல் கறுத்த கண்டத்தையுடைய ஈசனார், நகரத் தார்கள் எல்லாரும் ஆவலுடன் தம்மை எதிர்பார்த்து நிற்க, ஆகாயத்திலிருந்து இறங்கி பூமியின்மேல் வந்து நிற்கலானார்.

52. சிவபெருமான் வரவால் உடல் பூரித்துப் போயிருந்த மலைமன்னவரான இமவான், யானைக்கூட்டம் போன்ற தமது பந்துக்களால் சூழப்பட்டவராய், அப்பந்துக்களின் உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சோபிக்க நன்ருகப் பூத்துப் பிரகாசித்துக் கொண்டிருந்த தமது தாழ்வரையிலேயே அக்கடவுளை எதிர்கொண்டு சென்று உபசரிக்கலானர்.

53. கோட்டைவாயிற் கதவு பாக்கத் திறக்கப் பெற்று விளங்கிய அந்நகரத்துக்குள் தேவகணங்களும் இமவானுடைய கணங்களும் தங்கள் தங்கள் வாத்திய கோஷங்கள் வெகுதூரம் கேட்க ஒரே கரை உடைந்து அம் இரண்டு வெள்ளங்களும் ஒன்று சேருவதுபோலச் சந்திக்கலானர்கள்.

54. மூவுலகங்களாலும் வணங்கப்பெற்றவரான சிவபெருமானே தம்மை வணங்கியதும் இமவான் வெட்கமடைந்தார். ஈசனர் தூரத்தில் வரும்பொழுதே அவருடைய மகிமையைக்கண்டு தமதுதலையே அவருக்கு எற்கனவே வணங்கியதை அவர் அறியவில்லை.

55. அவ்விமவான் சந்தோஷத்தால் தமது முகம் மலர்ந்து விளங்க தமது மாப்பிள்ளையின் முன்பாக நடந்து சென்றுகொண்டு கணைக்கால் வரைக்கும் பதியும் படி மலர் இறைக்கப்பட்டிருந்த கடைத்தெருவுகளுடன் சோபித்துக்கொண்டிருந்த வைபவத்துடன் கூடிய தமது நகரத்துக்குள் சிவபெருமானை அழைத்துப்போனர்.

56. அவ்வண்ணம் சிவபெருமான் பட்டினத்துக்குள் வந்துகொண்டிருந்தபோது அவரைப் பார்க்க வெகு அவலுடனிருந்த அந்நகரத்து மாதர்கள் தங்கள் மாளி

கைகளின் மேற்புறத்தில் நின்றுகொண்டு வேறு ஒருவித காரியத்திலும் கவலையில்லாதவர்களாய்ப் பின்கூறியவாறு காணப்பட்டார்கள்.

57. சிவபெருமானைப் பார்க்க அவசரமாய் ஓடிவந்துகொண்டிருந்த ஒருமடந்தை ஓடிவந்த அவசரத்தால் தனது மலர்முடித்த கூந்தல்முடி அவிழவே அதை மறுபடியும் முடிந்துகொள்ள யோசிக்காமல் அதைக் கையால் பற்றிக்கொண்டே வந்து சேர்ந்தாள்.

58. மற்றொரு மடந்தை தனது காலைச் சிங்காரிப்பதற்காகத் தாதி ஒருத்தி பிடித்துக்கொண்டிருக்கையிலேயே சிவபெருமான் ஊர்வலம் வரும் வாத்தியசப்தம் கேட்டபடியால் அக்காலை வெடுக்கென்று இழுத்துக்கொண்டு அது காயாமல் ஈரமாயிருக்கையிலேயே தனது அழகான நடையை விட்டு தனது ஈரக்கால் சுவடுகள் பூமியில்பட ஜன்னல் வரையில் தாவித் தாவி ஓடலானாள்.

59. ஒரு மடந்தை தனது வலது கண்ணுக்கு மட்டும் மையிட்டு இடது கண்ணுக்கு இட ஸாவகாசமில்லாமல் மையிடும் ஈர்க்கைக் கைப்பற்றியபடியே ஜன்னல்வரையில் ஓடினாள்.

60. மற்றொரு மடந்தை ஜன்னல் வழியாய்த் தனது கண்களைச் செலுத்திப் பார்த்துக்கொண்டிருந்தாளேயன்றித் தான் அச்சன்னலண்டை வரும்பொழுது அவிழ்ந்துபோன தனது ஆடையின் இக்குள் முடிப்பைக் கட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அம்முடிப்பைத் தனது நகையணிந்தகையால் பற்றியபடியே அந்நகையின் காந்தி உந்தியைச் சுற்றிப் பிரகாசிக்க நிற்கலானாள்.

61. ஒருத்தி தான் தனது கட்டைவிரலில் ஒரு

நாரைக் கட்டி அதில் மலர்களை ஒட்டியாணத்துக் காகத் தொடுத்துக்கொண்டிருந்த பொழுது வெகு வேக மாய் அப்படியே எழுந்துவந்தவளாகையால் அத்தடை யால் அடிக்கடி அவள் கால் இடற அவ்விரலில் கட் டிய நாண்மட்டும் மிகுந்து நிற்கின்றவளாய் அவ்வேடிக் கையைப் பார்க்கலானாள்.

62. மதுவுண்ட காரணத்தால் மணம் வீசி கருவிழி கள் சுழல விளங்கிய அம்மடந்தைகளுடைய முகங்களால் அவர்கள் அவ்வேடிக்கையைப் பார்த்துநின்ற காட்சி யானது அந்நகரத்து ஜன்னல்கள் எல்லாம் வண்டுகள் அசைந்திருக்கப்பெற்ற தாமரை மலர்களால் சிங்காரிக்கப் பட்டனபோலக் காணலாயிற்று.

63. அவ்வாறு எல்லாரும் தம்மைப் பார்த்துநிற்க, சந்திரசேகரர்,பகலிலும் அந்நகரத்துவெண்மாளிகைகளில் தமது சந்திரகாந்தி விழுவதால் இருமடங்கு வெண்மை யாகச் செய்துகொண்டு, எங்கும் தோரணங்கள் மேலெடுத் துக் கட்டப்பட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த ராஜ வீதியை அடைந்தார்.

64. பார்க்கத்தகுந்தவர் ஒருவரே எனவிருந்த அவ் வீசனுரைக் கண்களால் குடித்துக்கொண்டிருந்த அந்நக ரத்து மடந்தைகள் வேறு ஒரு தொழிலேயும் கவனிக்கா தவர்களாய் நிற்கலானுர்கள். மற்றப் புலன்கள் தாங்கள் செய்யவேண்டிய பலவிதத்தொழில்கள் எல்லாம் அக் காலத்தில் அவர்களுடைய பார்வை ஒன்றிலேயே புகுந் திருந்தன என்றே சொல்லவேண்டும்.

65. ஒருவராலும் செய்து முடிக்கவொண்ணுத

தவத்தை வெகு மெல்லிய மேனியை யுடைய பார்வதி இவர் நிமித்தம் செய்தது நியாயமே. எந்த மடந்தை இவருக்குப் பணிவிடை செய்யும் பதவியை அடைகின்றளோ அவள் பாக்யமே பாக்யம். இவர் மடியிற் றூங்கும் பதவியை பெற்றவளுடைய பாக்யத்துக்குச் சொல்லவும் வேண்டுமோ.

66. ஒருவர் மற்றொருவரைக் கண்டு மோகிக்கும் அழகமைந்த இவ்விரு உருவத்தையும் விதி சேர்த்து வைக்காமலிருக்குமாயின், பிரமதேவர் இவ்விரு உருவங்களையும் உண்டுபண்ணுவதற்காகத் தான் பட்ட சிரமமெல்லாம் வீணகப் போயிருக்குமன்றோ!

67. சிவபெருமான் ஏதோ கோபம் கொண்டு மன்மதன்தேகத்தைக் கொளுத்தினர் என்பது பொய். மன்மதன் இச்சிவபெருமானுடைய அழகான சரீரத்தைப் பார்த்ததும் வெட்கி, தானகவே தனது தேகத்தை ஒழித்திருக்கவேண்டும் என்பது திண்ணம்.

68. தோழி! நமது மலைகளின் மன்னவர் கருதியவாறு இவ்வீசுவாருடைய சம்பந்தம் தமக்குக் கிடைத்து விட்டபடியால் பூமியைவகிப்பதால் ஏற்கனவே உயர்ந்து விளங்கும் தமது முடியை இன்னும் அதிக உயர்த்தி வைத்துக்கொள்ளப்போகின்றார்.

59. இவ்விதமாய் அவ்வோஷதிபிரஸ்த நகரத்துப் பெண்கள் காதுகளுக்கு இனிமையாகப் பேசிக்கொண்டிருந்த பல கதைகளையும் முக்கண்ணன் கேட்டுக்கொண்டே சென்று இமவான் மாளிகைக்குள் கைவளையல்களால் பொடியாகச் செய்யப்பட்ட பொறிகள் தம்மைச்சூழ்ந்து விழப் புகுந்தார்.

70. விஷ்ணுபகவான் தமக்குக் கை கொடுக்கத் தமது விருஷபத்தை விட்டு சாத்கால வெண்மேகத்தை விட்டுச் சூரியபகவான் கிழே யிறங்குவதுபோல இறங்கித் தம் முன் பிரமதேவர் வழிகாட்ட இமவான் மாளிகைக்குள் நுழைந்தார்.

71. அச்சிவபெருமானை இந்திரன் முதலான தேவர்களும் ஸனகர் முதலான மகரிஷிகளும் கணங்களும் ஸப்தரிஷிகளை முன்னிட்டுக்கொண்டு பின்தொடர்ந்து பெரும் பிரயோஜனங்கள் சிலாக்கியமான ஆரம்பத்தைத் தொடர்வனபோல் இமவான் மாளிகைக்குள் சென்றார்கள்.

72. இமவானுடைய மாளிகைக்குள் ஈசனுர் ஓர் ஆஸனத்தில் உட்கார்ந்து விதிப்பிரகாரம் இரத்தினத்துடன் அர்க்கியம், மதுவர்க்கம், ததி, புதுவெண்பட்டு முதலியவைகள் இமவான் மந்திரத்துடனே தமக்குக் கொடுக்கப் பெற்றுக்கொள்ளலானுர்.

73. அதன்பிறகு அச்சிவபெருமான் வெண்பட்டாடை அணிந்துநிற்க புதிதாய்த் தோன்றும் சந்திரகிரணங்கள் வெண்நுரை பொங்கி விளங்கும் கடல்நீரை கடற்கரைக்கு அழைத்துப் போவதுபோல் அரண்மனை வேலையில் பயிற்சி யடைந்தவர்கள் வெகு வணக்கத்துடன் மணப்பெண் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அவரை அழைத்துப்போனுர்கள்.

74. தமது முகமே காந்தியுடன் விளங்கும் சந்திரனைக் காணப்பெற்ற அவ்வுமையால் சிவபெருமான் சாத்காலத்தால் உலகம் அழகாக விளங்குவதுபோலத் தமது கண்களாகின்ற ஆம்பல் மலர்கள் நன்றாக மலரப்பெற்றவ

ராகவும் தமது உள்ளமாகின்ற நீர் தெளியப் பெற்றவ ராயும் மாறி நின்றார்.

75. அவ்விரு மணமக்களுடைய கண்கள் தற் செயலாகச் சந்தித்துத் திகைத்துக் கொஞ்சகாலம் அப் படியே நின்று பிறகு திருப்பப்பட்டு ஒன்றை மற் றொன்று பார்க்க ஆசையுடன் அமைந்தவைகளாக விருந் தும் வெட்கத்தால் தகையப்பட்டவைகளாய் விளங்கின.

76. மலைமன்னவரால் பிடித்துக் கொடுக்கப்பட்ட தும், ஈசனைக் கண்டு பயந்து உமையின் தேகத்தில் பதுங்கியிருந்த மன்மதனுடைய முதல் முளைபோல் விளங்கின பார்வதியின் கையினுடைய சிவந்த விரலைச் சிவபெருமான் தமது கரத்தால் பற்றலானார்.

77. உமைக்கு மயிர்க்கூச்சமும் சிவபெருமானுக்கு விரலில் வியர்வையும் அத்தருணத்தில் உண்டான தானது அவ்விருவர்களும் தங்கள் கைகளைப் பற்றிக் கொண்டபொழுது அவ்விருவர்களிடமும் மன்மதன் ஒரே விதமாகத் தனது வல்லமையைக் காட்டினான் என்று சொல்லவேண்டியதாயிருந்தது.

78. எவர்களனுக்கிரகத்தால் உலகமெங்கும் வதூ வரர்கள் மேலானசோபையைக்கலியாணப்பந்தலில் அடை ந்துவிளங்குகின்றார்களோ அவ்விருவர்களுடைய கலியாண சோபையைப்பற்றி நாம் சொல்லவும் வேண்டுமா! ஒவ் வொரு கலியாணப்பந்தலிலும் உமையும் சிவனும் கலியா ணப் பெண்ணிடமும் கலியாண மகனிடமும் முறையே புகுந்திருக்கின்றனர்கள் என்பது சாஸ்திரம்.

79. ஓங்கி எரிந்துகொண்டிருந்த ஓமத்தீயை அவ் விருவர்களும் வலம் வந்தபொழுது மேருவின் தாழ்

வரையை இடைவிடாது சுற்றும் பகலும் இரவும்போல் அவர்கள் பிரகாசிக்கலானார்கள்.

80. ஒருவரை மற்றொருவர் கைப்பற்றிய ஆநந்தத்தால் கண்கள் மூடிய அந்தத் தம்பதியைப் புரோகிதர் மூன்று தடவை ஓமத்தீயை வலம் வரச் செய்து கொழுந்து விட்டெரியும் அத்தியில் மணமாதின் கையால் பொறியை ஓமம் பண்ணச் செய்வித்தார்.

81. புரோகிதருடைய கட்டளைப்படி பார்வதி நன்றாக மணம் வீசிய அப்பொறிப்புகையை முகத்தில் படும்படி வாசனை பிடித்தபொழுது அப்புகையின் திரள் அவ்வம்மணியின் கன்னங்களில் பரவ அது கொஞ்சநேரம் அவ்வம்மணியின் காதிலிட்ட நகைபோல விளங்கிற்று.

82. மணச்சடங்கு நிமித்தம் பார்வதி அவ்வண்ணம் புகைபிடித்தபொழுது அவள் முகம், அவள் கன்னங்கள் வியர்த்தும், சிவந்தும், அவள் கண்களிலிட்ட மையின் காந்திகரைந்தும், அவள் காதுகளில் அணிந்திருந்த நாற்றுகள் வாடியும் கொஞ்சம் மாறிப் பிரகாசிக்கலாயிற்று.

83. அதன் பிறகு புரோகிதர் பார்வதியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—குழந்தாய், இந்த அக்கினிதான் உனக்கும் சிவபெருமானுக்கும் நடந்த விவாகத்துக்குச் சாட்சி தேவதை. இனி நீ உனது கணவராகிய சிவபெருமானுடன்கூட நின்று ஓர்வித விசாரமுமின்றி உனது தர்மங்களை நடத்தக்கடவாயாக.

84. பவானிதேவியும் அவ்வாறு குருசொன்ன புத்திமதியைத் தனது காதுகளைக் கண்கள்வரையில் விசாலமாகச் செய்துகொண்டு கோடையால் நன்றாக

வறண்டிருக்கும் பூமி மேகத்தினின்று பொழியும் முதல் மழையைக் குடிப்பதுபோல் கேட்கலானுள்.

85. எப்பொழுதும் தனது கண்களுக்கு அழகாக விளங்குகிறவரும் என்றென்றைக்கும் தனக்குக் கணவருமான சிவபெருமானுல் துருவ நட்சத்திரத்தைப் பார் என்று ஏவப்பட்டதும் பார்வதி தனது முகத்தை மேல் எடுத்துப்பார்த்து வெட்கத்தால் கொஞ்சம் வாய் குளற "பார்த்தேன்" என்று மெதுவாக மறுமொழி சொன்னுள்.

86. இவ்வாறு கலியாணச் சடங்கை நன்முக அறிந்த புரோகிதரால் பாணிக்கிரகணம் செய்துவைக்கப்பட்ட உலகத்துக்கே தாய் தந்தைகளான உமாமகேசுவரர்கள் பத்மாசனத்தில் வீற்றிருந்த பிரமதேவரை நமஸ்காரம் பண்ணினுர்கள்.

87. பிரமதேவர் அப்பொழுது உமையைப் பார்த்து "சுபங்கள் நிரம்பிய ஸ்திரீ மாணிக்கமே, வீரனுகிய குழந்தையை நீ புத்திரனுக அடையக்கடவாய்!" என்று ஆசிர்வாதம் பண்ணலானுர். அதே பிரமதேவர் தாம் எல்லா ஆசிர்வாதங்களுக்கும் நாயகனுகவிருந்தும் ஈசனுல் விரும்பத்தக்கது ஒன்றுமில்லை என்று ஏற்கனவே அறிந்துணர்ந்தவராகையால் அவரை உத்தேசித்து ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார்.

88. அவ்விரு மணமக்களும் பிரம்மதேவரை நமஸ்காரம் செய்தபின்பு பொன்னுலாகிய ஆசனத்தில் வீற்றிருந்துகொண்டு புஷ்பம் முதலியவைகள் அழகாகச் சூட்டி விளங்கிய சூடாமணியின்மேல் உலகத்தில்

*எல்லாருக்கும் நடக்கும் மங்கலாசூத்தை தலைமேல் பெறுதல் என்றதை அடைந்தார்கள்.

89. அப்பொழுது அவ்விருவர்களுக்கும் பூமாது தமது கையால் ஒரு தாமரைத் தண்டை இலையுடன் பற்றி அவ்விலையின் ஓரங்களில் ததும்பிக்கும் ஜலத்திவலைகளே நல்முத்து சரங்களாக விளங்க, அத்தாமரைத்தண்டே குடைக்காம்பாக, அவ்விலையே குடையாகக் குடை பிடிக்கலானாள்.

90. ஸரஸ்வதிதேவி அப்பொழுது அவ்விருவர்களையும் இருவித வாக்கால் ஸ்தோத்திரம் பண்ணலானாள்.—வெகு பரிசுத்தமான வாக்காகிய ஸம்ஸ்கிருதத்தால் ஈசனையும் வெகு சுலபமாய் அர்த்தமாகும் பிராகிருத பாஷையால் உமையையும் தோத்திரம் பண்ணலானாள்.

91. அதன்பிறகு அவ்விருவர்களும் ஒரு முகூர்த்த காலம் ஊர்வசி முதலிய தேவமாதுகள் ஆடிய நாட்டியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

92. அந்நாட்டியம் முடிந்ததும் மணமனைவியுடன் வீற்றிருந்த சிவபெருமான் தாட்களில் இந்திரன் முதலான தேவர்கள் தங்கள் கிரீடங்களில் கைகூப்பி விழுந்து பார்வதி தேவியின் விவாகத்துடன் மன்மதனுடைய சாபம் நீங்கி அவனுக்கும் தனது மேனி வந்துவிட்டபடியால் அவன் பணிவிடையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று யாசிக்கலானார்கள்.

---

* உலகவழக்கத்தை மனத்தால்கூட நாம் தடுக்கலாகாது என்பதுவிதி. ஆனதுபற்றி உலக தந்தைகளே அக்ஷதைவாங்கிக் கொள்ளலானார்கள்.

93. அப்பொழுது பகவானும் கொஞ்சமேனும் கோபம் இல்லாமல் அப்படியே என்று ஒப்புக்கொண்டு அம்மன்மதன் தன்மேலும் தனது பாணங்களை எய்ய விட விடைகொடுத்தார். காரியத்தை நன்றாக அறிந்த புத்திமான்கள் காலமறிந்து செய்யும் விண்ணப்பம் எப்பொழுதும் பயனுள்ளவைகளாய் முடிகின்றனவல்லவா.

94. அதன்பின்பு சந்திரமௌலி தேவக்கூட்டங்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டுப் பார்வதியைத் தமது கையால் பற்றி அழைத்துக்கொண்டு மங்கலார்த்தமாகப் பொன்குடங்கள் நீர்நிரம்ப வைக்கப்பட்டும் பூக்கோலங்கள் அழகாகப் போடப்பட்டும் பூமியில் படுக்கை விரிக்கப்பட்டுமிருந்த பள்ளியறைக்குள் புகுந்தார்.

G. C. Loganadham Bros. The Guardian Press, Mount Road, Madras

பெஞ்சமின் பிராங்க்லின் சரித்திரம்

ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ரங்காசாரியார், பி. ஏ., எல். டி.

அவர்களால் இயற்றப்பட்டது

ஸ்கூல் படிப்பு முடியும் பரீட்சையில் தமிழில் எளிதான நடையில் வ்யாஸம் எழுதவேண்டி யிருப்பதால், இது பிள்ளைகளுக்கு உபயோகமாகும். ஜனங்களுக்கு எளிதில் தெரிவிக்கும்படி ஆங்கிலேய பாஷையைப் படிப்பவர்கள் சுதேச பாஷைகளில் பேசவும் எழுதவும் வேண்டியது என்ற நல்ல கருத்தைக் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையினால் கூடிய வரையில் தினந்தோறும் வழங்கிவரும் பதங்களை உபயோகித்து எழுதப்பட்டது. விலை அணா 4.

தஸ்யபஸ்ண மந்திரோபதேசம்

(நான்காம் பதிப்பு) விலை அணா 8

ஸம்ஸ்கிருத நாடகக்கதைகள்

மிருச்சகடி	அணா	4
முத்திரா ராக்ஷஸம்	அணா	4
வேணி ஸம்ஹாரம்	அணா	3
ஷேக்ஸ்பியர் நாடகக்கதைகள்	அணா	6

ஜி. ஸி. லோகநாதம் பிரதர்ஸ், மௌண்ட்ரோட், மதராஸ்.

கோமளம் குமரியானது

(இரண்டாம் பதிப்பு) விலை அணா 8

இஃது ஓர் அற்புதப் புஸ்தகம். 'ரோமான்ஸ்' என்று ஆங்கிலேய பாஷையில் அப்போதைக்கப்போது வெளிப்படும் புஸ்தகம்போல, இதனைத் தமிழில் மிஸ்டர் நடேச சாஸ்திரியார் வெகு அழகாய் ஆரம்பமுதல் முடிவுவரையில் படிப்பவர்களுக்கு சுவைகுன்றாமல் வெகு எளிதான நடையில் குழந்தைகளும் படித்து ஆனந்திக்கும்படி எழுதியிருக்கின்றார்.

இக்கதையின் சற்போதம், "நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, விதியின் பயனே பயன்" என்பதாம். ஒருகால் மருந்தால் நாம் இளம்பருவம் வேண்டுமென்று வரவழைத்துக் கொண்டாலும் அதனால் விளைவது துக்கமே ஒழிய சுகமல்ல என்பதைக் கோமளம் தன் சுகதுக்கங்களை எடுத்துச் சொல்லும் அத்தியாயத்தில் முற்றிலும் ஆசிரியர் காட்டியிருக்கின்றார். இப்புஸ்தகம் சற்போதமாகவே முடிவு பெறுகின்றது. நமது நாட்டு ஜனங்கள் ஒவ்வொருவரும் வாங்கிப்படித்து உள்ளங் குளிரவேண்டியது மனக்கவலைபோக்க ஓர் அதிசயமான ஔஷதமென்று இதைச் சொல்லலாம்.—இந்துநேசன்.

ஸ்ரீமாமி கொலுவிருக்கை

விலை அணா 8

கல்லாதவர்க் கறிவுபுகட்டுமா றவர்க்கேற்ற நடையுஞ் சொற்களும் பொருந்த வெழுதாது தம் கல்வித்திறத்தைக் காட்டுதலே தமிழ்க்கற்றோர்க் கழகெனக்கொண்டு கரடுமுரடான புத்தகங்களெழுதி பதிப்பிக்கும் சிலரைப்போலெழுதா தின்னவரில்லார்க்கிவரே கொடையாகுமென்ப துணர்ந்து யாருமெளிதில் வாசித்தறியுமாறு மிஸ்டர் பண்டித நடேசசாஸ்திரியார் தொடர்ச்சியா யெழுதிவரும் நாவல்களிலொன்றாவதாகிய இக்கிரந்தத்தை வாசித்துக் களிகூர்ந்தோம். ஆங்காங் கின்னுமுயிர்த்திருக்குங் கொடிய மாமியாரிச்சரித்திரத்தைப் படிப்பினும் படிக்கக் கேட்பினும் தம் கல்நெஞ்சம் அனலிலிட்ட மெழுகாயுருகித் தம்மைச் சரியென் றடைந்த பேதையரைக்காத்து இம்மையிற் புகழடைந்து மறுமையில் நற்பதவி பெறுவர். உண்மையை முன்னறியாது கௌரியெனும் தன் மருமகளிறக்கும்போது கண்டிருந்த "கமார்தார்" 147-வது பக்கத்திற் கண்டபடி குடும்பிகளுக்குச் செய்துகொண்ட விண்ணப்பம் பன்முறையும் வாசிக்கத்தக்கது.—இந்து நேசன்.

ஜி. எஸ். லோகநாதம் பிரதர்ஸ், மௌண்ட்ரோட், மதராஸ்.

THE GUARDIAN PRESS, MADRAS